# முரசொலி

## பொங்கல் மலர். 1965




லுங்கி என்றதும் ஞாபகத்திற்கு வருபவை
''சங்கு மார்க்''
வனப்பு, வண்ணம்,
இழை, நீடித்த உழைப்பு
இவையாவும் ஒருங்கே
அமைந்தவை. எமது
இதர தயாரிப்புகள்
சோளிகள் புடவைகள்
மற்றும் கைக்குட்டை
கள்
K E Mo ABOOBACKER
சங்கு
TRADE MARK
சங்கு மார்க்
லுங்கிகள்
முகம்மது அபூபக்கர் &
கம்பெனி
95, தம்பு செட்டி தெரு, மதருாஸ்-1
மெயின் ரோடு 65/11-12, லோயர் சிட்பூர் ரோடு
கொல்லம் கல்கத்தா
84, கீழவெளி வீதி
மதுரை

MAS 169-TA

எங்கள் மனமார்ந்த பொங்கல் வாழ்த்துகள்

## புதிய ஜவுளிக் கடை

★★
★

எங்கள் சொந்த தறியில் தயார் செய்த
பட்டுசரிகைச் சேலைகள், நூல் & மில்
ஜவுளிகள் வாங்க சிறந்த இடம்

# கற்பகம் & கோ.,

177, காந்தி ரோடு, ◦ காஞ்சீபுரம் ✳

புதிய ஜவுளிக்கடை ! குறைந்தவிலை !

## ரவி சில்க் ஹவுஸ்

எங்களிடம் திருமணம், பண்டிகை பரிசளிப்பு இதர விழாக்களுக்கும் தினசரி உபயோகத்திற்கும் தேவையான பட்டு நூல் ஜவுளிகளும் நாகரிக மில் துணிகளும் குறைந்த விலையில் கிடைக்கும்.

போன்: 49

**ரவிசில்க் ஹவுஸ்**

20, பஜார் வீதி, செங்கற்பட்டு.

உரிமையாளர்கள்:

S. N. பாலகிருஷ்ணன் & பிரதர்ஸ்

செங்கற்பட்டில் சிறந்த அச்சுக்கூடம்

## அண்ணா அச்சகம்

கழகத்தோழர்களும் பொதுமக்களும் அண்ணா அச்சகத்திற்கு ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அச்சுக் கலர் வேலைகளும் பிற அச்சு வேலைகளும் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்.

உரிமையாளர்கள்:

வ. பசுபதி & பிரதர்ஸ்

**196, மேட்டுத்தெரு, செங்கற்பட்டு**

## Colour BLOCKS

MCA

Phone 21902

**M.C. APPASAWMY CHETTY & CO.**

14. JONES ST. MANNADY MADRAS-1.

பொங்கல் வாழ்த்துகள்



ஜெயகுமார்

SSI/PR/504/129/04

## ஓம் சக்தி பிராண்டு இரும்பு தொழிற்சாலை

3-10 சைவ முத்தையா முதலி சந்து

மதரூஸ்-1

பொங்கல் வாழ்த்துகள்

சிறுகைத்தொழில் நிறுவனம்:

எண்: SSI/PR./504/047/04

## மோகன் இன்டஸ்ட்ரீஸ்

எண்: 64. சாலை விநாயகர்கோயில் தெரு,

முத்தியால் பேட்டை,

சென்னை-1

தொலைபேசி எண்: 24774.

உரிமையாளர் கே. மோகன்.

எமது பொங்கல் வாழ்த்து!

## நாஞ்சில் பிரிண்டர்ஸ்

16, அஜிஸ்முல்க் 4வது தெரு,

ஆயிரம் விளக்கு, சென்னை-6

போன். 87927

எமது பொங்கல் வாழ்த்து உரித்தாகுக !

★

காஞ்சிபுரம் பாத்திர
உற்பத்தியாளர்
கூட்டுறவு சங்கம்.
22, ரயில்வே ரோடு. காஞ்சிபுரம்.



ராஜு செட்டியார் விலாசம்
பாத்திர வியாபாரம்
நெ. 272, ஹைரோடு. செங்கற்பட்டு

50 ஆண்டுகளாக மக்களிடம் புகழுடன் விளங்குகிறது.

உங்கள் குடும்பத்திற்குத் தேவையான பாத்திரங்களை வாங்கி ஆதரிக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர். தி. பொ. சீனுவாசன்

பொங்கல் பொன்னாளில் எங்கள் நல்வாழ்த்து!

மாணவ, மாணவிகளுக்கான புத்தகம், நோட்டுப்புத்தகம்.
பேனா, பென்சில் முதலியன.

★

சிறுவர் சிறுமியர் விரும்பும் சகலவித
அழகிய விளையாட்டுப் பொருட்கள்.

★

மகளிர் விரும்பும் அலங்காரப் பொருட்கள
முதலியனவற்றிற்கு சிறந்த இடம்.

சில்ரன்ஸ் கார்னர்
1-129, மவுண்ட் ரோடு,
( ஆயிரம்விளக்கு )
சென்னை-6.

பொங்கல்

புதுநாளில்

எங்கள்

வாழ்த்துகள்

★

விபரங்கட்கு:-

**ராஜா டீ ஸ்டோர்ஸ்**

247, பைக்கிராப்ட்ஸ் ரோடு

சென்னை-14

போன் 73

அனைவரும் விரும்புவது

**"ராமகிருஷ்ண காபி"**

★

தயாரிப்பு:-

ராமகிருஷ்ண காபி ஒர்க்ஸ்

செங்கற்பட்டு


## கருத்துக்கினிய கழகப் புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| இந்திய நாகரீகத்தில் திராவிடப் பண்பு | 3-50 |
| (Gilbert Slaters 'The Dravidian Element in Indian Culture) | |
| சட்டமன்ற நடை முறை (Parliamentary Procedure) | 6-50 |
| இறைமாட்சி அல்லது அரசியல் | 4-00 |
| சட்டவியல் (Jurisprudence) | 6-00 |
| தீங்கயில் சட்டம் (The Law of Torts) | 8-75 |
| அரசாங்கத்தின் வரலாறு (Evolution of Government) | 7-50 |
| தென்னாட்டுப் பழங்கதைகள் (6-தொகுதிகள்-275 கதைகள்) தனித்தனி | 5-00 |
| சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை (6-பகுதிகள்) தனித்தனி | 5-00 |
| ஆயிரத்து எண்ணூறு ஆண்டு கட்கு முற்பட்ட தமிழகம் | 6-75 |
| மறைமலையடிகள் வரலாறு | 15-00 |
| திருவாசகம்-விளக்கவுரை | 7-50 |
| கழகத்தின் 1008-வது வெளியீட்டு விழாமலர் (பல்வகைப் படங்களுடன்) | 12-50 |
| நீலகேசி விளக்கவுரை | 12-[illegible] |
| வளையாபதி, குண்டலகேசி -விளக்கவுரை | [illegible]-50 |
| சிற்றிலக்கண நூற்றிரட்டு | 6-[illegible]5 |
| உலகப்பேரொளி (நேரு) | 8-50 |
| அண்ணல் நேருவின் அமுதமொழிகள் | 3-00 |

விபரங்கட்கு:

**திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,**

திருநெல்வேலி-6. சென்னை-1.

இரவு, பகல்

எந்நேரத்திலும்

## சுவைமிக்க புலால் உணவு வகைகளுக்கு சிறந்த இடம்

—(சாப்பாடு பிரிவும் உண்டு)

## சிலோன் ரெஸ்டாரெண்ட்

56, வில்லேஜ்ரோடு, நுங்கம்பாக்கம்,

சென்னை-34

அனைவருக்கும் எங்கள்

## பொங்கல் வாழ்த்துகள்!

தமிழ், ஆங்கில
அச்செழுத்துக்கள்
பல ரகங்களில், மற்ற பவுண்டரிகளைவிட
குறைந்த விலையில் தருகிறோம்.
அன்புகூர்ந்து
தொடர்பு கொள்க:

## மாடல் டைப் பவுண்டரி

2/59 கங்காதீஸ்வரர் கோயில் தெரு,
புரசவாக்கம் : : சென்னை-7.
நிறுவியது: 1949-தொலைபேசி எண்: 61875

REGISTERED TRADE MARK
FIVE STARS SHIELD

தலைமை அலுவலகம் :
எண். 12, அம்பர்சன் தெரு, எஸ்பிளனேட்,
சென்னை-1
தொலைபேசி : 22474
கிளை அலுவலகம் :
128, பிராட்வே (மண்ணடி அருகில்)
சென்னை-1
தந்தி : இண்டோ பேப்பர்

CHAMPION
TRADE MARK

## இண்டோ-பர்மா ஸ்டேஷனரி பேப்பர் ஸ்டோர்ஸ்

மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யும் சிறந்த நிறுவனம்.

பள்ளிக்கூடங்களுக்கும், மாணவர்கட்கும் தேவையானதும், அலுவலகங்கட்குரிய எல்லா வகை பேப்பர்களும், அச்சகத்தார்கட்கும் பைண்டர்களுக்குமுரிய காலிகோ, போர்டு வகைகளும், ஸ்டேஷனரி சம்பந்தப்பட்டவைகளும் எங்களிடம் கிடைக்கும்.

எங்கள் நிறுவனத்தின் தயாரிப்புகள்; நோட்டு புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள் பைல்கள், கவர்கள் முதலியன.

எங்களது தயாரிப்புப் பொருள்களின்மேல் 'லையர் பறவை', 'ஐந்து நட்சத்திர ஷீல்டு', 'ஐந்து நட்சத்திர சாம்பியன்' 'ஐந்து நட்சத்திரக் க்ளோப்', ஆகிய சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.


பொங்கல் திருநாளில்
சென்னை கெயிட்டி · பிரபாத்
சரசுவதி மற்றும் தென்னாடெங்கும்
சிட்டாடல்
இரவும் பகலும்
புரொட்யூஸர்
ஜோஸப் தாமஸ்
டைரக்டர்
ஜோஸப் தளியத் Jr.

## பொங்கல் வாழ்த்துகள்

# இந்துஸ்தான் டிம்பர் டெப்போ

மரவகைகள், ஓடுகள், பிளவுட் வியாபாரம்

53, கோபதி நாராயணசாமி செட்டி தெரு

(ஜெமினி ஸ்டுடியோ அருகில்)

சென்னை. 6

★

தொலைபேசி எண்: 81749.

## பொங்கல் வாழ்த்துக்ள்

# சந்திரன் ஆட்டோ மொபைல்ஸ்

9, உட்ஸ்ரோடு, மவுண்ட்ரோடு

சென்னை-2,

தொலைபேசி எண்: 81311

ஸ்டாண்டர்டு, பியட், அம்பாசிடர்
வண்டிகளுக்கான ஸ்பேர்
பார்ட்ஸ்களும், டயர்களும்
எங்களிடம் கிடைக்கும்

## கழகத் தோழர்களுக்கும்
## ஆதரவாளர்கட்கும்
## பொதுமக்களுக்கும்
## பொங்கல் வாழ்த்துகள்

பல்குரல் மன்னன்

# எஸ். பி. சேதுராசன்
## கலைநிகழ்ச்சி,

அரசியல் அகம்பாவிகளுக்கோர் எரி ஈட்டி.

★

இந்தியைத் திணிக்கும்
மொழி வெறியர்கட்கு கலைப்பரணி!
திரைஉலகம் விரைவில் சுவைக்கவிருக்கும்
தீந்தமிழ் தேன்விருந்து.

★

பட்டி தொட்டிதோறும் அதைப்
பரப்பி பரவசப்படும் கழகத்தோழர்கட்கு
தேனினுமினிய எனதுபொங்கல் வாழ்த்தைத்
தெரிவித்து மகிழ்ச்சியடைகிறேன்.

-சேதுராசன்





# காணிக்கை



அன்னை உண்டு; அருமைத் துணைவி உண்டு;
அன்புக் குழந்தை உண்டு; எனினும்
புத்தனைப்போல் அத்தனையும் துறந்தாய்!
சின்னச்சாமி! சிங்கத் தமிழா! உன்னை நினைக்குங்கால்
சினம் பொங்குதடா தனிக்கோடி அழித்த கடல்போல!
செந்தீ அழிக்கவில்லை உன்னை! தமிழை
அழிக்கவரும் இந்-தீ அழித்ததுன்னை!
உன்னை விருந்தாக்கிச் சூழ்ந்துண்ட தீ
அன்னைத் தமிழ்காக்கும் அறத்தீயாகும்!
இருப்ப வரெல்லாம் வேகத்தான் போகிறார்; ஆனால்
தியாகத் தீயில் வேகும் பெருமை உனக்கே
உரியதன்றோ?

சின்னச்சாமி! நீ தியாகமலை யென்றால்
நாங்களெல்லாம் சிறு துரும்பு!
தமிழ்காக்கத் தனையீந்த தங்கமே!
தமிழிருக்கும் வரை உன் நினைவிருக்கும்!
அண்ணனின் வாழ்த்தோடு மொட்டவிழ்க்கும் இம்மலரை
உனக்குக் காணிக்கை வைக்கின்றோம்!

# அண்ணாவின் வாழ்த்து

பச்சைப் பசுங்கொடியினில் பாங்குடன் பூத்துக் குலுங்கி, எழில் காட்டி, மணம் கூட்டித் தந்திடும் மல்லி முல்லை எனும் மலர்கள் போல, ஒவ்வோர் ஆண்டும், தமிழ் மணமும் எழிலும் துலங்கிட வெளி வருவது 'முரசொலி' பொங்கல் மலர்.

தம்பிகள் கருணாநிதியும் மாறனும் கழகத் தொண்டாற்றுகின்றவர்கள் மட்டும் அல்ல, அந்தத் தொண்டிலே கலைமணத்தை இழைத்துக் குழைத்துத் தருகின்றனர்.

நமது கழகத் தோழர்களாலும் எழிலுள்ள 'மலர்' வெளியிட இயலும், முயன்றால், என்பதனைத் தமிழகத்துக்கு எடுத்துக்காட்டிய பெருமை 'முரசொலி'யைச் சாரும்.

ஒவ்வொரு நாளும் 'முரசொலி' பரணி பாடுகிறது! அதிலே காணப்படும் திருப்பள்ளி எழுச்சி தமிழகத்தோர்களைத் தட்டி எழுப்புகிறது. அது கேட்டிடும் வினாக்களுக்கு விடை கூற இயலாது ஆதிக்கக்காரர்கள் திணறுகின்றனர்.

நித்தநித்தம் போர்ப்பரணி பாடிடும் 'முரசொலி' பொங்கற் திருநாளன்று. புதியதோர் எழிலையும் புன்னகையையும் கொண்டு, தமிழரின் உள்ளத்துக்குச் சுவையும் பயனும் மிகுந்திடு கருத்தோவியங்களையும், கண்களைக் கவர்ந்திடும் வனப்போவியங்களையும்

இணைத்துத் தருகிறது. தமிழரின் இல்லங்களில் இவ்விதழ்ப் பூங்காற்றால் புது இன்பம் கண்டிடும் நிலையினராக, மக்கள் இருந்திடச் செய்து வருகிறது.

இத்தனையும், ஓர் எழில் மலரை, எழுத்தோவியத்தைத் தந்திட வேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல; இதன் மூலம், தமிழர்கள் நற்கருத்து பல பெற்று, நமை வாட்டிவரும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப் பெற்று, ஏற்றமிகு நல் வாழ்வு பெறவேண்டும் என்பதற்காகவுந் தான். இனிய தமிழைக் காண்கின்றோம்! சுவை மிகு கவிதைகளைப் படித்தின்புறுகின்றோம். எனினும் இந்த இன்பத் தமிழுக்கு 'இரண்டாங்கட்டு'—இலக்கண வரம்பற்ற இலக்கியச் செறிவற்ற இந்தி மொழிக்கு முதற்கட்டு! அரசுக்கட்டில்!—என்று அறிவிக்கப்பட்டு விட்டதனைக் காண்கின்றோம். இத்துணை ஏற்றமிகு இன்பத் தமிழ் மொழி இருக்க, ஏதுக்கும் பயனற்ற இந்திக்கா ஆதிக்கம் என்றெண்ணி மனக்கொதிப்படைகின்றோம். மீண்டும் இன்பத் தமிழோவியத்தை மலரில் காண்கின்றோம்! மகிழ்ச்சி! பெருமிதம்! இல்லை! இல்லை! ஓர் உறுதி பிறக்கிறது! இந்த் இன்பத் தமிழ் தாழ்ந்திட விட மாட்டோம், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தே நிற்போம் என்ற சூளுரைத்து நடக்கின்றோம் செருமுனை நோக்கி.

முரசு ஒலிக்கிறது! படை நடக்கிறது! பகைவர் காண்கின்றனர்!!

இந்த உறுதியை நாம் பெற்றிடச் செய்திடும் நற்கருத்துக்களைத் தாங்கி வரும் 'முரசொலி' பொங்கல் மலர் மூலம், தமிழக மக்களுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை.

முகப்போவியம் :
ஓவிய மன்னர் மாதவன்

ஓவியங்கள் :
செல்லப்பன்

புகைப்படம் :
சாந்தாமியான்

# நமது நகராட்சித் தலைவர்கள்!



காஞ்சிபுரம்
ஏ.கே.தங்கவேலர்



வேலூர்
எம்.பி.சாரதி



சென்னை
சிட்டிபாபு



ஆம்பூர்
சம்பங்கி



சிதம்பரம்
வி.வி.சாமிநாதன்



நெல்லை
மஜீத்



ஆரணி
ஏ.சி. நரசிம்மன்



திருப்பத்தூர்
சின்னராசு



பொள்ளாச்சி
சுப்பிரமணியம்



மாயூரம்
பழனிசாமி

# ஏறு தழுவுதல்

'ஏறு தழுவுதல்' என்பது தமிழகத்தில் பண்டைக் காலந்தொட்டு, மறக்குடியிற் பிறந்த காளையர் விளையாடும் ஒரு வீர விளையாட்டாக இருந்து வருகிறது. அது வெறும் வீர விளையாட்டாக மட்டுமல்லாமல் ஒரு வீரப் போட்டி விளையாட்டாகவும் இருந்து வருகிறது.



இரா. நெடுஞ்செழியன்

வன்மையும், முரட்டுத்தன்மையும் கொண்ட காளை மாட்டை, வீரமகன் ஒருவன் பிடித்து அடக்கிக் காட்டும் விளையாட்டையே 'ஏறு தழுவுதல்' என்று சங்ககாலத் தமிழ் மக்கள் அழைத்தனர். அதனை இக்காலத்துத் தமிழக மக்கள் 'மஞ்சி விரட்டு', 'மஞ்சு வெருட்டு', 'காளைப்போர்', 'சல்லிக்கட்டு', 'மாடுபிடி', 'எருதுபிடி' என்று பல பெயரால் ஆங்காங்குக் குறிப்பிடுகின்றனர்.

ஏறு தழுவல் விழா பெரும்பாலும் பொங்கல் விழாவை ஒட்டிய நாட்களில் பண்டைக் காலந் தொட்டுக் கொண்டாடப் பட்டு வருகின்றது.

தமிழகம் நீண்ட பெருங்காலமாகவே உழவுத் தொழிலில் ஈடுபட்டு அதனைச் சிறப்பாகப் போற்றிக் காப்பாற்றி வளர்த்து வரும் நாடாக இருந்து வருகிறது. இது காரணம் பற்றித்தான் 'உழுதுண்டு வாழ்வோரே வாழ்வார்', 'மேழிச் செல்வம் கோழை படாது', 'ஏர்பிடிக்கும் கை கோல் ஏந்தும் கை' என்றெல்லாம் தமிழகச் சான்றோர் புகழ்ந்துரைத்தனர். உழவனுக்கு ஏரும் ஏறும் மிக முக்கியமான கருவிகளாகப் பயன்பட்டு வந்தன. உழவுத்தொழில் பயனுகிய அறுவடை செய்ததற்குப் பிறகு, உழவன், புத்தம் புதிய நெல்லரிசியைக் கொண்டு புதுப் பொங்கலிட்டு, விழாக் கொண்டாடினன். விழாவை ஒட்டி ஆடல்பாடல், வேடிக்கை விளையாட்டுக்களில் ஈடுபடுவது பண்டைத்தமிழ்ப்பெருங்குடிமக்களின் பொழுது போக்காக அமைந்தது. வலிமை மிக்க முரட்டுக் காளைகளை ஓடவிட்டு, அவற்றைப் பிடித்து அடக்குவது என்பது ஆடவரின் ஆண்மைக்கும், சிறப்புக்கும், புகழுக்கும் எடுத்துக்காட்டாகக் கொள்ளப்பட்டது.

ஓடிவரும் முரட்டுக் காளைகளின் எதிரே அஞ்சாநெஞ்சத்துடன் சென்று, அவற்றின் கொம்புகளைப் பிடித்து, அவற்றின் தலையை வளைத்து அவற்றைச் சாய வைத்துத் தம் வீரத்தை நிலைநாட்டுவதிலே வீர இளைஞர்கள் ஆர்வம் காட்டினர். அப்படி வீரத்தை நிலைநாட்டும் இளைஞர்களையே தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொள்வது என்பது பண்டைத் தமிழ் மறக்குடி மகளிரின் பண்பாக இருந்து வந்தது.



ஏறு தழுவும் வீர விளையாட்டில் விடுவதற்கென்றே பலர் முரட்டுக் காளைகளை முரட்டுத்தனத்தோடு வளர்த்து வந்தனர். குறிப்பிட்ட காளையைப் பிடித்து அடக்குபவன் குறிப்பிட்ட கன்னியை மணமகளாகப் பெறலாம் என்று பெற்றோர் அறிவிக்க, வீரனொருவன் அந்தக்காளையை அடக்கிக் குறிப்பிட்ட பெண்ணை மணம்புரிய வேண்டி, இளைஞர்கள், துடியாய்த் துடித்துக் குறிப்பிட்ட காளையை அடக்க முன் வருவதுமுண்டு.

காளையை அடக்கிக் கன்னியைப் பெறுவது என்ற நிலைமை நாளடைவில் மெல்ல மெல்ல மாறிக் காளையை அடக்கி, அதன் கழுத்திலே கட்டப்படும் பரிசுப் பொருளைப் பெறுவது என்ற நிலைமை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. மஞ்சுவெருட்டில் ஈடுபடுத்துவதற்கென்று இப்பொழுது தமிழகத்தின் பல பகுதிகளில், குறிப்பாகத் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் காளை மாடுகளை அவற்றிடம் முரட்டுத்தன்மை வாய்க்கும்படி வளர்த்து வருகின்றனர்.

மாடு பிடிக்கும் விழாவின் போது, மாட்டின் கழுத்தில் கட்டப்படும் பரிசு வளையத்தைச் 'சல்லி' அல்லது 'சல்லிக்கட்டு' என்று அழைக்கின்றனர். சல்லி என்று அழைக்கப்படும் அந்த வளையம் பெரும்பாலும் புளிய வளாரினல் செய்யப்பட்டிருக்கும். புளிய நாரை முறுக்கி, அதில் பலநிறச் சாயங்களைப் பூசி வளையத்தை உருவாக்குவார்கள். அந்த வளையத்தில் தேங்காய்மூடி, பழம், வேட்டி, துண்டு, பவுன், வெள்ளிப் பணம், மோதிரம் போன்ற பரிசுப் பொருள்களைக் கோத்துக் காளையின் கழுத்திலே கட்டிவிடுவார்கள். சல்லியைக் காளையின் கழுத்திலே கட்டி, அதனை விரட்டி விடுவதன் காரணமாகத்தான் இந்த வீரவிளையாட்டைச் 'சல்லிக்கட்டு' என்று அழைக்கின்றனர்.

'மஞ்சி' என்பது நார் ஆகும். நாரினல் வளையம் செய்து, அதனைக் காளையின் கழுத்திலே கட்டி, அந்தக் காளையை வெருளச் செய்து விரட்டி விடுவதால், இந்த விழாவை 'மஞ்சி விரட்டு' என்றும், 'மஞ்சு வெருட்டு' என்றும் அழைக்கின்றனர்.

சல்லிக்கட்டு விழா நடப்பதற்கு முன்னர், விழா நடைபெறப்போகும் செய்தியை ஊர் முழுவதும் பறையறைந்து அறிவிப்பார்கள். மாடுகளை விடுவோரும், மாடுகளைப் பிடிப்போரும், வேடிக்கை பார்ப்போரும் வந்து குழுமுவார்கள். மாடுகள் விதவிதமான வண்ணங்களால் அழகு படுத்தப்பட்டிருக்கும். மாட்டினை அவிழ்த்து விடும்போது தகரத்தைத் தட்டியோ அல்லது சேமக்கலத்தை அடித்தோ அல்லது பறையை அடித்தோ ஓசையை எழுப்பி, மாட்டினை வெருண்டோடச் செய்வர். மாடு வெருண்டு ஓடும்போது, இளைஞர்கள், அதனை அடக்க, அதன் முன்னல் பதுங்கிப் பதுங்கிப் பாய்ந்து வருவர். மாட்டின் கொம்புகளைப் பிடித்து, மாட்டினை அடக்கி, அதன் கழுத்தில் கட்டியிருக்கும் சல்லியை அவிழ்த்து எடுப்பான். அவனே வெற்றி பெற்றவனாகக் கருதப்படுவான். அந்தச் சல்லியில் கோக்கப்பட்டுள்ள பரிசுப் பொருள்கள் அனைத்தும் அவனுக்கு உரியனவாகும்.

யாருக்கும் பிடிபடாமல் மாடு தொழுவத்திற்குத் திரும்பிவந்து விட்டால், அப்பொழுது அந்த மாடு வெற்றி பெற்றதாகக் கொள்ளப்படும், மாட்டிற்கு

உரியவன் அப்பொழுது பெருமிதம் அடைவான். மாட்டினைப் பிடித்தடக்க இளைஞர்கள் தாவும்போது, மாடு அவர்களைக் கொம்பால் குத்திக் கீழே வீழ்த்துவதுண்டு. இதனால் பல உயிரிழப்பு கூட ஏற்படும்.

தமிழகத்தில் ஏறு தழுவும் வீர விளையாட்டு இருந்து வருவது போல, மேலை நாடுகளில் காளையோடு போரிடும் வீரவிளையாட்டு நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது.

காளையைப் பிடித்து அடக்குவது என்பது காளை தழுவலின் நோக்கமாகும்; மேலைநாடுகளில் காளையோடு போரிட்டுக் காளையைக் கொல்லுதல் காளைப் போரின் நோக்கமாகும்.

பண்டைய கிரேக்கர்களும், உரோமானியர்களும் காளைப் போரில் சிறப்பாக ஈடுபட்டு வீரப் புகழை நிலைநாட்டுவதில் நாட்டங் கொண்டிருந்தனர். மத்தியதரைக் கடலில் கிரீட் என்னும் தீவில் காளைப்போர் விளையாட்டு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. உரோமாபுரியில், பண்டைக்காலப் பேரரசர்கள் முன்னிலையில் காளைப்போர் நடத்துவது என்பது சிறப்புக்குரிய வீர விளையாட்டாக நடத்தப்பெற்று வந்திருக்கிறது. ஸ்பெயின், போர்ச்சுகல், மெக்சிகோ போன்ற நாடுகளில் காளைப் போர் முக்கியமான தேசியப் பொழுது போக்கு விளையாட்டாக இப்பொழுதும் நடத்தப்பட்டு வருகிறது.

மேலை நாடுகளில் காளைப் போருக்கு என்று தனிச் சாதிக் காளைகளைத் தேர்ந்தெடுப்பர். ‘காஸ்ட்டீல்’ என்னும் பகுதியைச் சார்ந்த காளைகளையே பொறுக்கி எடுப்பர். வீரமும், சண்டையிடும் தன்மையும் கொண்ட காளைகளை மட்டுமே தேர்ந்தெடுப்பர். அவற்றின் கொம்புகள் கூர்மையாகச் சீவிவிடப்படும். அவற்றிற்குச் சத்துள்ள தீனிகளைப் போட்டு, அவற்றைக் கொழுக்கவைப்பர்.

காளைப்போர் விளையாட்டு நடத்துவதற்குத் தனி அரங்கம் அமைக்கப்படும். வேடிக்கைப் பார்க்கவரும் மக்கள் உயர்ந்த படி மேடைகளில், அரங்கைச் சுற்றி அமர்ந்திருப்பர். காளைப் போர் நடக்க, நடுவே போதுமான இடம் விடப்பட்டிருக்கும். காளைகள் அரங்கின் ஒரு பக்கத்தேயுள்ள தனித்தனி அறைகளில் அடைக்கப்பட்டிருக்கும். காளையைத் தாக்குவோன் கையில் ஈட்டியுடன் குதிரைமீது அமர்ந்து அரங்குக்குள் நுழைவான். விழாவிற்குத் தலைமை தாங்கும் தலைவர், காளையைப் பூட்டி வைத்திருக்கும் பூட்டின் சாவியை அரங்குக்குள் எறிவார். வீரன் அதனை எடுத்து அறையைத் திறந்துவிட்டுக் குதிரையின் மீது அமர்ந்து கொள்வான். காளை பாய்ந்து வந்து குதிரையைத் தாக்கும். குதிரைவீரன் ஈட்டியால் காளையின் முதுகில் குத்துவான். காளை வெருண்டு மிக ஆத்திரத்தோடு குதிரையைத் தாக்கும். சில நேரங்களில் குதிரை வீழ்ந்து சாகும். குதிரைவீரன் சிவப்புத் துணியைக் கையில் ஏந்திக்கொண்டு காளையை விரட்டுவான். சில நேரத்தில் காளை வீரனையே, குத்திக்கொன்றுவிடும். வீரன் ஆண்மையோடு போரிடுவான். இது—இந்த விளையாட்டில் முதல்கட்டமாகக் கருதப்படும். பிறகு கொம்பு ஊதப்படும். கொம்பு ஊதும் ஓசை கேட்டு வீரன் அரங்கை விட்டு வெளியேறுவான்.

வீரன் சுமார் 18 அங்குல நீளமுள்ள அம்புகளை இரண்டு கைகளிலும் ஏந்திக்கொண்டு காளையின் எதிரிலே நிற்பான். காளை அவன் மீது பாய்ந்து வரும். கையிலுள்ள அம்புகளைக் கொண்டு காளையை எதிர்ப்பான். காளையின் முதுகில் அம்புகளைச் செலுத்துவான். அப்படி எட்டு அம்புகளைக் காளையின் முதுகில் ஏற்றியவன் சிறந்த வீரனாகக் கருதப்படுவான். இது இந்த வீரவிளையாட்டில் இரண்டாவது கட்டமாகக் கருதப்படும். கொம்பு ஊதியவுடன் வீரன் அரங்கை விட்டு வெளியேறுவான்.

பிறகு மீண்டும் கொம்பு ஊதப்படும். வீரன் ஒரு கையில் வாளும், மற்றொரு கையில் தொப்பியும் ஏந்திக்கொண்டு அரங்கில் நுழைவான். தொப்பியால் வணக்கம் செலுத்திவிட்டுத் தொப்பியைத் தூக்கி எறிவான். பின்னர் வலக்கையில் வாளை ஏந்திக்கொண்டு காளையை நெருங்கி எதிர்ப்பான். காளையை ஒரே வெட்டாக வெட்டி வீழ்த்துவான். வெட்டுண்டு வீழ்ந்த காளை அப்புறப்படுத்தப்படும். இது மூன்றாவது கட்டமாகக் கருதப்படும்.

இந்த மூன்று கட்டங்களிலும் வெற்றி பெற்று மீளுபவன் பாராட்டுதற்குரிய சிறந்த வீரனாகப் போற்றப்படுவான்.

‘ஏறு தழுவுதல்’ தமிழகத்து வீரவிளையாட்டு’ என்றால், ‘ஏறு பொருதல்’ மேலை நாட்டு வீர விளையாட்டு என்னலாம்.

பண்டைத் தமிழகத்தின் வீர வாழ்வை வளர்க்கும் அடையாளமாகத் தான் ‘ஏறு தழுவல்’ இன்னமும் இருந்து வருகிறது.






தாழியில் உடலைப் புதைக்கும் நாளில்
ஆழி சூழ் தென்னக மண்ணின் மீது
கோழியூர் என்பது உறையூர் பெயராம்
வாழிய செந்தமிழ் என்றே மன்னர்

வாளை உருவிக் காத்தனர் முன்னே—
ஓலையில் இலக்கியம் யாத்தனர் பின்னே!
சோழியர் குடுமி ஆடுதல் போலே
மேழிச் செல்வர் வீட்டுக்கோழி
ஆட்டும் தலையை! வாட்டும் பகையை!

பூனைக்குப் பகை நாய் என்போம்
புலிக்குப் பகை வேடரென்போம்
புருப்பகை வல்லூ றென்போம்
யானைக்குப் பகை கோழியென்று படித்ததுண்டோ?
உறையூரில் ஒருகோழி யானையிடம்
உறுபகையை முடித்த தென்று
வடித்ததுண்டு இலக்கியமும்
தடித்த துண்டுக் கரும்பு போல்
இனித்ததுண்டு அக்கதையும்!
உறைந்தது மண்ணெலாம் வீரம் என்பதால்
உறையூர் என்றே உரைத்தது மன்பதை!
வாள் இருக்குமிடம் ஓர் உறையென வழங்கும்.
வாளொத்தவீரர் இருக்குமிடம் உறையூரென—
முழங்கும்.

★ ★

அந்நகர் ஆண்ட ஆற்றல் மறவன்
பொன்தமிழ் சிந்தும் புலவர் நண்பன்
யாப்பும் அணியும் பிறழாக் கவிஞன்
கோப்பெருஞ்சோழப் பெருந்தமிழ் அறிஞன்.
பூதநாதர், புல்லாற்றூர் எயிற்றியனார்
புகழார்ந்த நத்தத்தன், பொத்தியார்,
பூவரசு போற்றுகின்ற நாவரசு பிசிராந்தை
இந்தப்
பொங்கு மொழிப் புலவரெலாம்
தங்கு மெழில் மண்டபந்தான்
தார் வேந்தன் நெஞ்சகமாம்!

★ ★

தேனில் வளர்ந்து தேனில் மலர்ந்து
தேனில் நனைந்து தேனைப் பிலிற்றும்
தேன் பூ போலே......
தமிழ் இல் பிறந்து தமிழால் வளர்ந்து
தமிழ் இழை கொண்டு தமிழ் உடை தந்த
தக்கோர் வாழ்ந்தனர் தணியா நட்புடன்!

கருவூர் சதுக்கப் பூதநாதர்
தருநிழல் போன்ற தமிழ்மொழியதனை
அரும் பொருள் கொண்டு அள்ளித்தந்தார்
வரும் பொருள் உரைக்கும் அமைச்சருடையோன்
நறுமண மிக்க மலரிற் சேர்ந்த நாரே ஆவேன்
நட்பால் என்னைப்பிணைப்பீர் என்றே அணைத்துக்
கொண்டான்
பூதநாதர் பூரிப் படைந்தார்!
பூ மிதக்கும் அருவிபோலப்
புறப்பாட்டுப் பாடுகின்ற
புல்லலூர் எயிற்றியனார் நண்பரானார்.
புலவர்களைக் காணுவதும்—பேணுவதும்—
புலமைதனைப் பாடுவதும் பொழுதெல்லாம்
இனிக்குதென்று புகன்றுவந்தான்—நட்பைப்
புகழ்ந்து உவந்தான்!

* *

நட்பு என்பது நஞ்சு கலப்பது
நல்லவர் இதயம் நோக மிதிப்பது
கட்புலன் தாண்டிக் கயமை உரைப்பது—இந்த
அற்புத மனத்தும் இன்று நடப்பது!
பொற்புடைத் தமிழர் வாழ்வினில் அன்று
கற்புடை நட்பு மிளிர்ந்தது நன்று.



கண்டு கேட்டுண்டுயிர்த்து—பூச்
செண்டு தமிழை அளித்த கவிகள்—மன்னன்
நண்பர் களானது விந்தையுமல்ல ;
காணுமல் ஓர் புலவர்—சோழக்
காவலனின் நண்பரானுர்—அன்புத்
தேனுறு பெருக்கெடுத்து—அந்த
இருவரிடை பாய்ந்த தம்மா!
மீனுர்ந்த பாண்டி நாட்டுக் கொடி நிழலில்
மிளிருகின்ற ஊர் ஒன்று;
பிசிர் என்று அழைக்கின்ற மூதூர்
பெரும்புலவர் ஆந்தையார் பிறந்திட்ட பேரூர்.
பெற்ருேர் இட்ட பெயர் ஆந்தையார் என்பர்
பேரும் ஊரும் சேர்ந்து பிசிராந்தையுமானுர்
கற்ருேர் பலரும் களித்து மகிழ்ந்திட
நற்ருய்த் தமிழை நாட்டில் பரப்பினுர்.
மற்ருேர் சொல்ல சோழனும் கேட்டு,
உற்ருர் உறவை மிஞ்சிடும் வண்ணம்
வற்ரு அன்பைப் பொழிந்தான் அவர் மேல்

கவியரசன் கண்டதில்லைப் புவியரசை
புவியரசன் கண்டதில்லை கவியரசை
காணுமலே ஈரரசும் காதல் கொண்டார்
கடைசிவரை அப்படியே காலம்சென்ருர்.

* *

கொழிக்கின்ற கோழியூரின் சிறப்பையெல்லாம்
பழிக்கின்ற பான்மையிலே நிகழ்ச்சியொன்று—
அறிவை
அழிக்கின்ற தீயவரின் அனலுரையால்—கண்கள்
விழிக்கின்ற திறனற்ருர் அரசமைந்தர்.
துளிர்க்கின்ற போதெல்லாம் தோள்மீதும் மார்மீதும்
தளிர்க் கரத்தால் சுகமீந்து வளர்த்திட்ட
ஒளிக்குன்ரும் தந்தை மேல் படையெடுத்தார்.
தன் படைப்பே தன்னுயிரை அழிப்பதற்கு
முனைதல் கண்டான்
புண் படைத்த நெஞ்சத்தோடு போர்வாளைத்
தூக்கிக் கொண்டான்.
கண்படைத்த குற்றமோ இக்காட்சி காணல்—சோழ
மண்படைத்த பெரும்பேறு போயிற்றென்று
தண்மதியின் உளங்கொண்ட சான்ருேரெல்லாம்—
போர்ப்
பண்பாட வேண்டாமென இருதரப்பும் இறைஞ்சி
நின்ருர்.

''வண்டாடும் பூப்போன்ற மாதரிடம்
கொண்டோடும் அறிவுரையை!
திண்டோள்கள் விம்முகின்ற போர்மறவர்
கொண்டாடும் கொலை விழாவைத் தடுக்காதீர்!''
எனக்கூறி மறுத்துவிட்டார்
மகன் தந்தை அன்புதனை அறுத்துவிட்டார்.
இருபடையும் மோதிக் கொள்ளப்
பெரு முரசம் ஆர்த்த தங்கே!
உறுபகையும் ஓங்கிற்று;
செருமுனையும் ஏங்கிற்று!
இறுதிவரை அமைதிக்கு முயற்சிக்க
உறுதியுடன் ஒருபுலவர் புறப்பட்டார்.
போர் முனையின் படைவரிசை கீறிச் சென்று
புல்லாற்றூர் எயிற்றியனூர் புகுந்துவிட்டார்
நகுதற் பொருட்டன்று நட்டல்
மேற்சென்று இடித்தல் பொருட் டெனும்
தமிழ்க் குரலை மெய்ப்பிக்கத்
தலைநிமிர்த்தித் தார்வேந்தன் பக்கல் சேர்ந்தார்.
''இமிழ் கடல் வேலித் தமிழ் நிலந்தன்னில்
சிமிழ்போல் மைந்தர் சிரங்களை வீழ்த்திக்
கமழ்ந்திடும் வெற்றி, களிப்பைத் தருமோ?



கொற்றவனே! நீ பெற்றபிள்ளை செத்தபின்னர்
கோட்டைஅரண் வாழ்வதற்கும் கோழியூர்
ஆள்வதற்கும்
உற்றவர் தான் யார் என்று எண்ணுகின்றாய்?
உன்மைந்தர் வென்றாலும் உனைச் சூழும் அவமானம்!
உன்மைந்தர் மாண்டாலும் உறையூரை
ஆள்வதற்குப் பிள்ளையில்லை
உண்மையிது உணர்க!'' என்றே உருகிநின்றார்
கருகுகின்ற மனத்துடனே காவலனும்—கண்ணில்
அருவியென நீர் பொழிந்து களம்பிரிந்தான்.

*                *

மானம் வரின் சாதல் நன்றாம்—எனும்
மனம் படைத்த மரபில் வந்தோன்
ஊனம் விளைந்தது—வீரம் அழிந்தது-
வானம் பழித்தது! இனி வாழ்தல் நன்றா?
என
சோகம் கப்பிய கேள்வி எழுப்பி,
வேகம் குறைத்து வடக்கே சென்றான்.

*                *

வடக்கிருத்தல் எனும் ஒரு வழக்கம்—உயிர்
வறுத்திட மன்னர் கைக்கொளும் பழக்கம்.
உண்ணா நோன்பால் வாடி மெலிந்து,
மண்மேல் சடலம் வீழ்ந்திடும் வரையில்
இன்பம் அதுவென இருந்தே தீர்வர்—
இதுதான் வடக்கே இருத்தல் என்பர்.

*                *

கோப்பெருஞ் சோழனது வடக்கிருத்தல்
மாப்புகழ்கொண்டிலங்கு தமிழகத்தில்
மூப்பிலார் முதியோர் மற்றும் மொட்டனையர்—
உள்ளமெலாம்
காப்பிலா தொழிந்ததே நாடு என்ற கவலை மூட்டும்.
நட்பாலே பிணைந்து விட்ட நாவலர்கள்
அப்பாலே போகாமல் அருகிருந்தார்.

முப்பாலும் உணர்ந்திட்ட பெருவேந்தன்—முடிவு
தப்பாமல் நெருங்கிற்று—தளர் வுற்றான்
''எப்போதும் உளமிருந்த பிசிராந்தை
இப்போது வருவாரா காண்பதற்கு?''

எனக் கேட்டார் அருகிருந்தோர்.
வரமாட்டார் எனச் சொன்னுர்—இவர்
வடக்கிருத்தல் சேதி அவர் அறியார் என்ருர்.
ஆந்தையார் ஊர் அதிகத் தொலேவில் என்ருர்.
அதனலே வருவது இயலாதென்ருர்.
இதுகேட்டு
இயலரசன் இடித்துச் சொல்வான்
"என்பெயரைத் தனக்கிட்டு அழைத்துக் கொள்ளும்
இனிய நண்பரவர்—நற்பண்பின் ஊற்று.
நான் வடக்கிருக்கும் செய்திகேட்டு
நாளேயோ இன்ரே வந்தே சேர்வார்—ஒரு
வேளேயும் என்னே மறவார் என்பேன்."

கவிமன்னர் ஆந்தைமீது
காணுமல் காதல் கொண்ட
புவிமன்னர் பேச்சுக்கேட்டு
ஊமையானுர் உழுவலன்பர்.

*　　　　*



புலவர் பொத்தியாரும் வந்துவிட்டார்
புனித நண்பனுடன் வடக்கிருக்க!
வளவனவன் தடுத்துச் சொன்னான்;
நிலவுமுக நின் மனைவி நிறைமாதக்காரி—அவள்
குலவு மொழிப்பிள்ளை பெற்றபின்னர் வந்து
உடன் இருப்பீர் என்று கூறப் பொத்தியார் ஒப்பிச்
சென்றார்!

* *

அன்பும் அறமும் நிறைந்த மன்னன்
என்பும் தோலும் இளைத்தது மென்மேல்
கண்கள் இருண்டன
கால்கள் சுருண்டன
கைகள் ஓய்ந்தன
காதொலி மாய்ந்தது
பேச்சும் நின்றது
மூச்சும் திகைத்தது
எண்ணம் மட்டும் எங்கோ அலைந்தது.
மன்னன் மனதில் ஆந்தையின் நினைவு—
வண்ணப் புலவர் வருவார், வருவார்—
கன்னல் தமிழைத் தருவார்—தருவார்—
என்றே கருதி
அடைந்தான் இறுதி!

**கலைந்தது சுருதி!**

**குலைந்தது இசையும்!**

சுடுசொல் அறியாச் சோழ வேந்தன்
நடுகல் ஆனான் நாட்டோர் புகழ!
பலகல் தாண்டிப் பாவின் வேந்தர்
பாண்டியநாட்டு ஆந்தையும் வந்தார்.
மாண்ட மன்னர் கல்லைக் கண்டார்
மீண்டும் வாழ விரும்பேன் என்றார்
ஈண்டு எனக்கோர் இடம் உளதென்று
ஆண்டு களைத்த அரசின் கல்முன்
நீண்டு படுத்து வடக்கிருந்தாரே
ஆண்டுகள் கோடி வாழ்கின்றாரே!


சிற்பிகள் பறித்துக்கொண்டவை
விவேகானந்தர்
JAWAHARLAL NEHRU
1889 — 1964

# இளங்கோவின் இன உணர்ச்சி



சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம்

சிலப்பதிகாரம், தமிழில் தோன்றிய முதற் காப்பியம். அதற்கு முன் தமிழில் காப்பியம் இருந்ததாக வரலாறு கூறவில்லை. சிலப்பதிகாரத்திற்குப் பின்னும் தமிழர் வாழ்வைக் கூறும் முதற்காப்பியம் தோன்றியதாகத் தெரியவில்லை. வழிக் காப்பியங்கள் பலவுண்டு. ஆயினும், தமிழில் தோன்றிய முதற் காப்பியம்-தமிழர் காப்பியம்-தமிழ் நாடகக் காப்பியம் சிலப்பதிகாரம் ஒன்றுதான். அதனைப் போற்றிக் காப்பது தமிழர் ஒவ்வொருவர் இதயத்திலேயும் எழுதி வைத்துப் போற்றுவது இனவழிக் கடமையாகும்.

இளங்கோ, மதத்தால் சமணர் எனப்படுகிறார்; பிறந்த குடும்பத்தால், அரச வருணத்தைச் சார்ந்தவர்; பிறந்து வாழ்ந்த நிலத்தால் தமிழகத்தின் ஒரு பகுதியான சேர நாட்டைத் தாயகமாகக் கொண்டவர். ஆயினும், அந்த வேற்றுமைகளையெல்லாம் கடந்து ''தமிழன்'' எனும் இன உணர்வே அவர் இதயத்தில் நீக்கமற நிறைந்திருந்ததெனச் சொல்லலாம். இதனை, சிலப்பதிகாரக் காப்பியம் முழுவதிலும் காணுகின்றோம்.

இளங்கோ காலத்தில், சேர நாடு-பாண்டிய நாடு-சோழ நாடு என மூன்று நாடுகளாக பிரிந்து கிடந்தது, தமிழினத்தவரின் தாய் நாடு! ஆம்; மக்கள் வழிப்பட்ட நாடு-மொழி வழிப்பட்ட மாநிலம், மன்னர் வழியே மூன்றாகப் பிரிக்கப்பட்டுக் கிடந்தது. அந்த அவல நிலை அகல,

''நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னா(ட்டு)''

என்று பாடி, ஒன்றுபட்ட தமிழகத்தை-அதன் தெய்வீக எல்லைகளோடு படம் வரைந்து காட்டுகின்றார் இளங்கோ. சிலப்பதிகாரம் தோன்றிய காலத்தில் தமிழ் மூவேந்தர்களிடையே போட்டியும் பொறாமையும் நிலவி வந்தன. அதன் விளைவாக, அடிக்கடி, பெரும் போர் மூளுவதும் உண்டு. அந்நாளில், போர் என்றாலே, தமிழ் மன்னர்களுக்குள்ளே தான். தமிழ் இலக்கியங்களில் நாம் படிக்கும் வீரச் செய்திகளில் பெரும்பாலானவை தமிழகத்து மன்னர்களிடையேயும், தமிழ் மக்களிடையேயும் நடந்த உள்நாட்டுப் போராட்டங்களே. இதுவே, தமிழகத்தின்-தமிழினத்தின் ''விதி''யாக இருந்தது. இந்த விதிக்கு விலக்காக நடந்த ஒரு பெரும் போரைக்காட்சிப் படுத்துகின்றார் இளங்கோ. தமிழ் வேந்தரைப் பழித்த வட வேந்தரை எதிர்த்துப் போர் செய்கின்றார், சேர மன்னர் செங்குட்டுவன். கண்ணகிதேவிசிலை செய்யக் கல்

லெடுக்கப் போன இடத்திலே வில்லெடுத்தும் போர் செய்கின்றான் வீரன் செங்குட்டுவன்.

வடவேந்தரான கனக—விசயர் தன்னைப் பழித்தவரல்லர் என்னும் செய்திகேட்ட போதும், தமிழரில் எவரைப் பழித்தாலும் அது தன்னைப் பழித்ததேயாகும் என்று கூறினான் சேரவேந்தன். இந்தச் செய்தி, அவனுக்கிருந்த இன உணர்ச்சியையே காட்டுகின்றது. வடபுலப் போர் முடிந்த பிறகு, காவா நாவினரை வெற்றி கொண்ட பின்னர், அவர்களையும் நண்பர்களாக ஏற்கச் செய்கின்றார் இளங்கோ.

பண்டை நாளில், சேரநாட்டு மக்கள் சோழ—பாண்டிய மன்னர்களையோ, பாண்டி நாட்டு மக்கள் சேர—சோழ கோவேந்தர்களையோ வாழ்த்தி வழிபட்டதாக இலக்கியங்களிலே செய்தியில்லை. ஆம்; ராஜ விசுவாசம் இன விசுவாசத்திற்குத் தடையாக இருந்தது. இந்தத் தடையையும் தகர்த்தெறிகிறார் இளங்கோ.

'வாழ்த்துக் காதை'யுள், வஞ்சி நகர மகளிர், தமிழ் மூவேந்தரையும் ஒருசேர வாழ்த்துகின்றனர்.

"ஒங்கரணம் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண்
அம்மானை
சோழன் புகார் நகரம் பாடலோ ரம்மானை"

என்று "அம்மானை வரி"யுள்முதலில் சோழனை பாடி, பின்னர் பாண்டியனை வாழ்த்துகின்றனர்.

பொன்னிலங்கு பூங்கொடி
பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள்
ஆர்ப்பவார்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்கவென்று
சென்றுபந் தடித்துமே
தேவார மார்பன்வாழ்க
என்றுபந் தடித்துமே

இப்படி, சோழ — பாண்டியரை வாழ்த்திய பின்னர்,இறுதியாகசேரனையும்பாடி ஊசலாடுகின்றனர்.

ஓரைவா ஈரைம பதின மர்
உடன்றெழுதந்
போரிற் பெருஞ்சோறு போற்றாது
தானளித்த
சேரன் பொறையன் மலையன்
திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ
ஊசல்

சேரநாட்டுத் தலைநகரமான வஞ்சிநகரத்து வனிதையர், முதலில் தங்கள்நாட்டு மன்னனைப் பாடாமல் சோழனை வாழ்த்துகின்றனர். பின்னர் பாண்டியனுக்கும் வாழ்த்துக் கூறி, இறுதியிலே சேரநாட்டு மன்னனையும் வாழ்த்துகின்றனர். இந்த வைப்பு முறை சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவின் இன உணர்ச்சியையே காட்டுகின்றது. ஆம்; மண்டல உணர்ச்சியை வெல்லுகின்றது மாநில உணர்ச்சி!

இளங்கோவடிகள் முற்றுந்துறந்த முனிவர். வலுவில் தனக்கு வந்த சேரர் பேரரசின் அரியாசனத்தைத் துச்சமெனக் கருதியவர். அத்தகையவரும் தம் தாயகத்தின் ஒரு பகுதி முன் எப்போதோ கடலால் கொள்ளப்பட்டதை நினைந்து நெஞ்சம் குமுறினார்.

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி"

என்ற வரிகளிலே பஃறுளியாற்றையும் பன்மலையடுக்கத்தையும் விழுங்கிய கடலை "கொடுங்கடல்" என்று தூற்றுகின்றார். இழந்த பகுதிக்கு ஈடாக வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்ட தென்னவனை வாழ்த்தித் தன் இதயத்தின் அடிதளத்தில் நிறைந்



துள்ள இன உணர்ச்சி பொங்கி வழியச் செய்கின்றார்.

சிலப்பதிகார காலத்துப் பூம்புகாரை கடல்கொண்டு விட்டதாக அறிகிறோம். பூம்புகார் என்ன, இளங்கோ கண்ட தமிழகத்தையே காலங் கொன்றுவிட்டது. இன்றைய தமிழரிடையே இன உணர்ச்சி இல்லை. சாதி உணர்ச்சி, மத உணர்ச்சி—ஏன், மாவட்ட உணர்ச்சிகூட உண்டு. ஆனால், பிறப்போடு ஒட்டிய இன உணர்ச்சி ஒன்று மட்டும் இல்லை. தமிழ் வாழ, தமிழர் வாழ, தமிழகம் தழைக்கப் பாடுபடுவோர் குற்றவாளிகள் போலக் கருதப்படுகின்றனர். ஆறாயிரம் மைலுக்கு அப்பாலுள்ள அந்நிய இனத்தவன் மொழி இந்த நாட்டில், அங்கு இங்கு எனாதபடி எங்கெங்கும் ஆதிக்கம் செலுத்துகிறது. இன்று மட்டுமல்ல; கடந்த இருநூறு ஆண்டுகாலமாக ஆங்கிலம், இந்த மாநிலத்து ஆட்சிமொழியாக, நீதிமன்றங்களில் நிர்வாக மொழியாக, கல்லூரிகளில் பயிற்சி மொழியாக மட்டுமா இருக்கிறது?—இல்லை, தமிழர்தம் வாழ்க்கைமொழியாகவே இருந்து வருகிறது! களைந்தெறிய நினைத்தாலும் எளிதிற் களைய முடியாதவாறு இது நம் வாழ்க்கையோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இன்னொரு இளங்கோவை நாம் பெற முடியுமா?—இல்லை, இளங்கோவின் இதயத்தையேனும் அறிந்து கொள்ள முடிகின்றதா? இளங்கோவுக்கிருந்த 'தமிழன்' எனும் இன உணர்ச்சி தமிழ்நாட்டு மக்களுக்கு என்று ஏற்படுகின்றதோ, அன்றுதான் தமிழருடைய வாழ்வில் இன்பம் பொங்கும்; புதுமணம் வீசும். கன்னித்தமிழ் கரும்பு போலச் சுவைக்கும். அதுவரை நாம் கொண்டாடும் பொங்கல் வெறும் பொங்கல்—வெண் சோற்றுப் பொங்கல், இன்பப் பொங்கலன்று!



# சொன்னபடி நடந்தால்....


தானிய வியாபாரம்
சுப்பிரமணிய வேலா! உன் பக்தனுக்கு சோதனை ஏண்டா?
உணவுப் பஞ்சம்
ஏய்யா கத்தரே! உயிர்தானே போகும்! போனுப் போகட்டும்.


அழுகல்பழம் அரையணு!
நல்லபழம் நாலணு!
சாப்பிட்டால் பசிக்காது!
பாலாலே செய்த
ஜோன்பப்டி ஐ!
சாப்பிட்டால் உண்வுப்பிரச்சி-
-னையே தீரும் ஸாறு!


பாரு! பாரு! பாரு! நெய்வேலி பாரு! அதிலே பெரிய அணைக்கட்டு இருப்பதைத்தான் பாரு!
உய்! உய்! உய்! இந்தப்படம் நான் எட்டாவது முறை பார்க்கிறேன்.
பூவராகன்
கல்யாண

# மகிழ்ச்சிகரமான பொங்கல் வாழ்த்துக்கள்





பன்னெடுங்காலமாய்
மங்காப்புகழ்
படைத்த
நெசவாளர்கள்

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
துணிகள்

தமிழ் நாடு
கைத்தறி
நெசவாளர்
கூட்டுறவு
சங்கம்
லிமிடெட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்
எழும்பூர். சென்னை–8

ELEGANT


தீ பரவட்டும்
-[கவியரங்கம்]-
பங்குபெறுவோர் :
கவிஞர் முடியரசன்
கவிஞர் வாணிதாசன்
கவிஞர் ஆனந்தம்
கவிஞர் சுரதா
கவிஞர் வேழவேந்தன்
புலவர் பொன்னிவளவன்
கவிஞர் குடியரசு
மணிமொழி

# நெஞ்சந் தொறும் எரிக தீயே!

புலவர் பொன்னிவளவன்

தங்கநிற மங்கையரோ அலங்க ரித்துத்
தளுக்குகின்ருர்; குலுக்குகின்ருர் எந்த நாளும்!
அங்கங்கே விழும்ஆலம் பழத்தைப் போன்ற
அழகுநிறம் படைத்திருக்கும் புதுப்பா னைக்கே
பொங்கலில்தான் அலங்காரம்! இருல்மீன் போன்ற
புதுக்கிழங்கு மஞ்சள்இஞ்சிக் கொத்து கட்டி
நங்கையர்கள் பானைஅடுப் பேற்று கின்ருர்
நன்ருய்த்தீ பரவட்டும் அடுப்பு தோறும்!

உரமிட்டு உழவரினம் விளைத்த செந்நெல்
இலக்குவரும் திருநாளில் அடுப்பு தோறும்
பரவத்தான் வேண்டும்தீ வெல்லப் பொங்கல்
பாற்பொங்கல் பொங்குதற்கு! எனநி னைத்தேன்.
"தரமாட்டா ரும்அரிசி கடையில்!" என்று
தைமுதல்நாள் என்வீட்டுத் தையல் வந்தாள்!
"பரதேசி அரசாட்சி இந்த ஆட்சி!
பாற்பொங்கல் வெண்பொங்கல் தேவை யில்லை!

நிறத்தாலே கோதுமையை நினைக்க வைக்கும்
நேரிழையே! கோதுமையை யானைக் காது
முறத்தாலே புடைத்திடடி! பொங்கு!" என்றேன்.
முணுமுணுத்து உட்சென்று வந்தாள்! "நாளை
வரத்தானே போகிறது பொங்கல்? ஆனால்
வழியில்லை கோதுமைக்கும்!" என்ருள், தோன்றும்
வெறித்தனத்தில் ஆள்வோரைப் பிடித்து வந்து
வேகவைத்துச் சாப்பிடநான் எண்ணு கின்றேன்!

"கொண்டாட வழியில்லை பொங்கல்! வீணாய்க்
குமுறுகின்றீர்! கூறுகின்றீர் ஏதோ!" என்றாள்.
வண்டுதொடா உயிர்மலரே! சோலைப் பூக்கள்
வடித்திட்ட தேன்பாய்ந்து இனிமைச் செந்நெல்
பண்டைநாள் விளைந்ததுவாம் இந்த நாட்டில்!
பச்சைவயல் திருநாடு இந்தநாடு!
திண்டாட்டம் போக்குதற்கு உணர்ச்சி என்னும்
தீபரவட் டும்இளைஞர் நெஞ்சு தோறும்!

வாய்ப்பூவை எனக்களித்து இன்பம் காண
வாய்ப்புதரும் செந்தேனே! எனக்கு நித்தம்
நீயளிப்பாய் சிற்றின்பம்; பேரின் பத்தை-
நிலைத்திருக்கும் இன்பத்தைத் தமிழ்க்கொ டுக்கும்!
தாய்ச்சொல்லித் தந்தமொழி-இந்த நாட்டுத்
தமிழனுக்குச் சொந்தமொழி தன்னைச் சொன்னால்!
வாய்நாறும் இந்திமொழி-வடக்கி ருந்து
வந்தமொழி-மந்தமொழி மாய்க்க லாமா?

தென்னாட்டார் மானத்தின் எடுத்துக் காட்டு
தீக்குளித்த செயல்மறவர் சின்ன சாமி!
அன்னவனைச் சுட்டெரித்த தீதான் எங்கும்
ஆட்சிமொழிச் சட்டத்தைப் பொசுக்க வேண்டும்!
'கன்னலடா நமதுதமிழ்! தமிழ்அ ழிந்தால்
காலமெல்லாம் இன்னலடா!' என்போம்! கண்கள்
மின்னட்டும் சினத்திலே! தன்மா னத்தீ
மிளிரட்டும்! பரவட்டும் தமிழர் நெஞ்சில்!"

என்றுரைத்தேன். என்மனைவி அருகில் வந்தாள்!
"எதிர்காலம் பலாச்சுளைபோல் இனிக்க வேண்டும்!
முன்னேற்றக் கழகத்தார் ஆட்சி வந்தால்
முன்னேறும் இந்நாடு! நமது வீட்டில்
என்றைக்கும் இல்லாத கண்ணீர்ப் பொங்கல்
இவ்வாண்டு! இந்தநிலை மாற வேண்டும்!
தென்னாட்டுப் பேரறிஞர் அண்ணா கொள்கைத்
தீபரவட் டும்தீமை தொலைக்க!" என்றாள்.

# மூள்க முத்தீ!

கவிஞர் முடியரசன்



வயலிருந்தும் வயல்பாய நீரி ருந்தும்
வருந்தாமல் நீர்பாய்ச்சி உழைக்கும் நல்ல
செயலிருந்தும் அச்செயலால் விளைவி ருந்தும்
சேர்த்துவைத்த நெல்முதலாப் பொருளி ருந்தும்
மயலுறவும் செயலுறவும் மாந்தர் வாடி
வாயுணவுக் கின்னலுறச் செயற்கைப் பஞ்சம்
புயலெனவே புகுந்ததனால் பசித்தீ பற்றிப்
பொங்கியதே வயிறெல்லாம் எரிந்த தத்தீ

காலத்தைக் கடந்த மொழி கற்போர் நெஞ்சைக்
கவருமொழி தரைகடந்து கடல்க டந்து
ஞாலத்தை வென்றமொழி என்றுங் குன்றா
நாவன்மை படைத்த மொழி இலக்கணத்தின்
கோலத்தை முழுமைபெற வடித்துக் காட்டும்
குறைவில்லா அறிவுமொழி இலக்கியத்தின்
மூலத்தைக் கண்டமொழி சுவைகள் விஞ்சும்
மும்மைமொழி அன்புமொழி தமிழே யாகும்



பெருமைஎலாம் பூண்டுலகை ஆண்டு வந்த
பேராற்றல் படைத்தமொழி வளமேயில்லா
வறுமொழியால் சிறுமொழியால் அடிமை யுற்று
வாழ்விழந்து போவதுவோ? படைஎ டுத்து
பெருமொழிகள் பல பொருதும் வாகை சூடிப்
பீடுபெறு வீரமொழி கைகால் இல்லா
ஒரு மொழிக்குத் தோற்பதுவோ? என்று சீறும்
உள்ளமெலாம் பற்றியதே செந்தீ! செந்தீ!!

உரிமைநமக் கெய்தியதால் இனிமேல் வாழ்க்கை
உயர்ந்துவிடும் வளம்பெருகும் கவலை யில்லை;
சரிநிகராய் வாழ்ந்திடுவோம் உயர்வு தாழ்வு
சாதியிலும் பொருள்தனிலும் எதிலும் இல்லை;
அரசியலும் நடுநின்று பொதுமை பேணும்;
அடிமையிலை மிடிமையிலை; கனவு கண்டோம்
புரியகிலாப் பகற்கனவாய்ப் போன தென்றே
பொங்கியவர் விழிகளெலாம் செந்தீ! செந்தீ!

சோறுபெருக் காரணத்தால் வயிறு பற்றிச்
சுடர்ந்தெழுந்த பசித்தீயும் ஆண வத்தார்
ஊறுபெறச் செந்தமிழை அழிக்க வேண்டி
உண்ணுவதால் உருத்தெழுந்த உள்ளத் தீயும்
மாறுபடும் ஆட்சியினால் துன்ப முற்ற
மாந்தர்களின் விழித்தீயும் கொடுங்கோ லாட்சி
நீறுபடச் செய்யட்டும்! செங்கோ லாட்சி
நிலவட்டும்! பரவட்டும் அந்த முத்தீ!

# எரியட்டும் தீ

கவிஞர் கா. வேழவேந்தன்

கீழ்வானில் செழும்பரிதி கொள்ளியினை வைத்தான்!
        கிளர்ந்ததடா தீ மூட்டம் பனிமூட்டம் எங்கே?
தாழ்வாரக் குழந்தையினைக் கௌவ வந்த நரியைத்
        தாய் கண்டாள்; தீயெடுத்தாள்! எடுத்ததடா ஓட்டம்!
ஆழ்குழியில் புதைத்து விட்ட சமக்கிருதச் சவத்தில்
        அரும்பியதோர் புழு இந்தி தமிழ்ச்சிங்கா தனத்தை
வீழ்த்திடவே சட்டமென்ற தேரேறி வந்தால்
        வெந்தணலை மூட்டிடுவோம்! எரியட்டும் அத்தேர்!

கண்ணகியின் சீற்றத்தீ தமிழ்க் கற்பைக் கூறும்!
        கங்கைகொண்டான் கோபத்தீ தமிழ் வீரம்கூறும்
தண்வேந்தன் நந்தியின்தீ தமிழ்ப்பாசம் கூறும்!
        தாளமுத்தைப் பற்றியதீ தமிழ் வெறியைக் கூறும்!
'விண்ணளந்தாள் வெளியளந்தாள் என்றமிழாள் அத்தாய்
        வேகுமுன்னால் வேகின்றேன் என்றுசின்னச் சாமி
கண்ணெதிரே நீறாக ஆக்கியதோர் இந்திக்
        காட்டுப்பேய் எரியட்டும்! மூளட்டும் செந்தீ!

கொல்லர்களின் உலையினிலே கொழுந்துவிடும் செந்தீ
குத்தீட்டி வடிக்கட்டும் மறவர்கரம் ஏற
வெல்லுமொழிக் காதலியர் விழிமின்னல் தீயும்
வீரர்களின் விழிக்கனலில் ஏற்றிடட்டும் விளக்கை!
'சில்வண்டா ஏறுவது குயில்மடியில்?' என்னும்
செழும்புலவர் சினத்தீயும் பரவட்டும் நெஞ்சில்!
'மெல்ல இனித் தமிழ்ச்சாகும்' நிலை செய்யும் மடையர்
வெட்கமுறச் சட்டத்தில் மூளட்டும் செந்தீ!

எதிர்வீட்டான் அகல் விளக்கு தமிழ்க்கூரை வீட்டை
எரித்தால்நாம் பார்த்திருக்கப் பேடிகளா? சீச்சீ
குதிர்போன்ற இவ்வுடலம் இருந்தென்ன; நாவைக்
கூருக்கி விட்டபின்னர் வாழ்வதொரு வாழ்வா?
ஒதியமரம் வாழ்ந்தென்ன? போயென்ன? ஈங்கே
ஓராண்டே வாழ்ந்தாலும் வாழைபோல் வாழ்வோம்
முதிராத சிறுக்கியா அன்னை முடிமிதித்தாள்?
மூளட்டும், மூளட்டும், மூளட்டும், செந்தீ!

# பரவுக தீ!

பெருவேந்தன் இராவணனைப் பதுமை யாக்கிப்
பொசுக்குகிறார் வெந்தணலில் வடக்கு நாட்டார்
வரும்போகும் பொருளல்ல வீரம் மானம்;
வரலாற்றின் மணியாரம் அதனை மண்ணில்
உருவழித்துப் போடுகின்றார் கண்டும் கேட்டும்
உணவற்றுக் கிடக்கின்றோம் இதுவா வீரம்?
கருவெரிக்கப் புறப்படுவோம் கடமை யென்னும்
கனலேந்திக் களம்நோக்கித் தமிழைக் காக்க!

தீக்கங்கை பாயட்டும்; தீயர் போக்கை
தீக்காடாய் ஆக்கட்டும்! கொழுந்து விட்டுத்
தீக்கரங்கள் தாவட்டும்; இந்திப் பேயும்
தீக்குணவாய்ப் போகட்டும்! ஆதிக் கத்தைத்
தீக்குழம்பு தழுவட்டும்; வெந்து சாம்பல்
தூள்தூளா யாகட்டும்! சின்னச் சாமி
தீக்குளித்துச் செத்தானே அந்தத் தீயே
திக்கெட்டும் பரவட்டும் தமிழைக் காக்க!

—மணிமொழி

# புதுலகத் தீ பரவட்டும்

கவிஞர் வாணிதாசன்

கார்பொய்த்த காலத்தும் நீர் பொய்க்கா நாடு !
கல் துளைத்துக் கலைவளர்த்து நெல்விளைத்த நாடு !
கூர்பொய்த்த வேலெடுத்தும் பகைவெட்டிச் சாய்த்த
குன்றுநிகர் தோள்மறவர் வாழ்ந்ததிரு நாடு !
சீர்பொய்த்துப் போனதுவே ! அந்தந்தோ அந்தோ !
செந்தமிழர் நிலையிதுவா ? இந்நிலையை மாற்றப்
பேர்பொய்த்துப் போகாமுன் எழுந்தோடி வாரீர் !
பிற்போக்கு நிலைமாறப் பரவட்டும் தீயே !

முல்லைக்குத் தேர் ஈந்தான் ; முன்பாடி வந்த
முத்தமிழ்ப்பா வாணர்க்குத் தன் நாட்டை ஈந்தான் !
இல்லையென்ற சொல்லுக்கே இடமில்லை அந்நாள் !
இன்மருந்தும் அயலவர்க்குப் பங்கிட்டே உண்டான் !
பல்வளமும் நிறைந்திருந்தும் தாயகமே ! மக்கள்
பசிநோயால் வாடுவதோ ? இந்நிலையை மாற்ற
எல்லோரும் புறப்படுவோம் புத்துலகம் காண !
எங்கெங்கும் பரவட்டும் ! பரவட்டும் தீயே !

படைபெருக்கி வளம்பெருக்கிப் பலதொழிலும் கண்டு,
பண்போடு கலைவளர்த்து வெற்றிமுரசார்த்துக் கடல்
கடந்து புகழ்நட்டோம் முன்னாளில் ; அந்தக்
கதையெல்லாம் வெறுங்கதையா ? கடாரம்சொல் லாதோ ?

வடக்கினிலே படைதேக்கி வடஎல்லை தாண்டி
வந்தபகை இன்னுமுன் வரஎண்ணும் ஈனக் கொடும்
பகையை முறியடிப்போம்! கோழைகளா மக்கள்?
கொழுந்துவிட்டுப் பரவட்டும் பரவட்டும் தீயே!

அறநூலும் பொருள்நூலும் அள்ளியள்ளி ஆன்றோர்
அலைகடல்சூழ் உலகிற்கே அளித்துவந்த துண்டே!
மறத்தோளர் முடிமன்னர் வாழ்ந்திருந்த நாளில்
வாழ்ந்திருந்த வளம்எண்ணில் மனங்கொதிக்கு தந்தோ!
அறம்பிழைத்து வாழ்ந்ததில்லை! ஆனாலும் இன்றோ
அவையாவும் பழங்கதையாய் ஆக்கிவிட்டார் மக்கள்!
சிறந்தோங்க வழிசெய்வோம்! செயல்மறவர் தேவை!
தீ எங்கும் பரவட்டும்! பரவட்டும் தீயே!

வாழாத காலத்தில் நல்வாழ்வு வாழ்ந்தோம்!
வந்தவர்க்கிங் கிடம் கொடுத்தோம்! விரிந்தமனப்
பண்பாம்!

ஆழ்கடலில் முத்தெடுத்தும், அயல் நாட்டிற் கீந்தோம்!
அகில்தேக்குச் சந்தனமும் அளித்துதவி வந்தோம்!
ஈழத்தில் கொடிநட்டோம்; ஈழஉற வானோம்!
இன்றுள்ள நிலையென்ன? இதுதானா நேர்மை?
கோழையா நாமெல்லாம்? கொல்புலியின் போத்து!
கொழுந்துவிட்டுப் பரவட்டும்! பரவட்டும் தீயே!

தென்னகமே! தாய்நாடே! தீந்தமிழர் வாழ்ந்த
திரைக்கடல்சூழ் பொன்னாடே! என்நாடே! வாழ்க!
முன்னோர்கள் தோள்வலியால் அறிவாற்ற லாலே
முத்தமிழே! செழித்தோங்கி அரசோச்சி வந்தாய்!
இந்நாளில் இந்நிலையில் இறக்கிவைத்த கீழோர்
இருந்தென்ன? இறந்தென்ன? ஆன்றோர்கள் வாழ்ந்த
பொன்னான தமிழ்ச்சங்கக் காலத்தைக் காணப்
புதுமைத்தீப் பரவட்டும்! பரவட்டும் இன்னே!

# தணலே மூள்கவே!

கவிஞர் குடியரசு

பொழிலில் புகுந்து பொதிகைத் தமிழெனும்
புலர்ந்த பொழுதின் பூமலிக்கேணியை,
எழிலைப் பிழியும் இலக்கியக் கன்னலை,
இனிமைப் பயக்கும் ஈரத் தென்றலை,
வழிவழி உயிரை வளர்க்கும் பயிரை,
வற்றா இளமையால் வடித்தச் சிலையை,
அழிக்க நெருங்கும் எருமை இந்தியை
அனலால் விழுங்கத் தீபர வட்டும்!

காவிரி ஊறி கழனிகள் கொழுத்தும்
கனகத் திருமுகம் காட்சி வழங்கியும்
சேவல் கூவுமுன் உழைக்கத் தொடங்கியும்
செய்தொழிற் கேற்ப நற்பலன் செறிந்தும்
சேவைசெய் முன்னணித் தொண்டர் பெருகியும்
தியாகச் சுடராய் மக்கள் திகழ்ந்தும்
சாக்கா டளிக்கும் வறுமைச் சர்க்கார்
சாம்பலாய் ஆக்கும் தீபர வட்டும்,

உப்புக் கடலுக் கப்பால் இருக்கும்
ஒண்டமிழ்ப் பாலை உறிஞ்சிக் குடித்து
செப்புதற் கரிய களம்பல கண்டு
செந்நீர் ஆடியச் செந்தமிழ்ச் செல்வன்
உப்புநீர் வற்றி உதிரம் வடித்து
ஒளியிலா விழியொடு உயிர்வா டுதலைக்

தாயகம் மூட்டிய தீயே மூள்கவே!
　　தன்னலம் விழுங்கும் தணலே மூள்கவே!
தாயின் அமுதை அடிமைகள் சுவைக்கத்
　　தாளா மானத் தீயே எரிக!
நோயால் வாடும் ஆணவ அரசியல்
　　நெஞ்சைத் தீய்க்கும் ஆடெரிப் பிழம்பே!
காயும் கனலியின் கொழுந்தே! தி. மு.
　　கழகக் கொள்கைத் தீப்ர வட்டும்.

# சுளை போன்ற தீ பரவட்டும்

## கவிஞர் சுரதா

எதற்காக இனஉணர்ச்சி? நாடும், வீடும்
　　எதற்காக? ஆட்சிமொழி, சட்டதிட்டம்,
எதற்காக? அவரவரின் உரிமைக் காக,
　　என்றறிக! அவ்வுரிமை பறிக்கப் பட்டால்,
எதற்காகத் துதிக்கையெனத் தொங்கும் வாழ்க்கை
　　இருட்டறையில் ஓவியங்கள் இருக்க லாமோ?
முதற்காதல், முதல்முத்தம் என்ப தெல்லாம்,
　　முழுவுரிமை பெருதவரை இனிப்ப தில்லை!

முடிவேந்தர், மூவேந்தர் ஆண்ட நாளில்,
　　மூத்ததமிழ் பூத்ததமி ழாகி, வீரக்
கொடிவேந்தர் மன்றத்தில் புலவ ரோடு
　　கொலுவிருந்த தென்பார்கள்! இன்றோ இந்தி,
தடி யேந்தி அரசாள வந்து விட்டாள்.
　　தமிழ்மகனே! மூக்குமொழிக் கடிமையாகி,
மடி யேந்தி நீவாழ நினைத்தால், உன்னை
　　மற்றவர்கள் கோழையென்று கூறிடாரோ?

பரவட்டும் தமிழர்புகழ்! தமிழர் மேன்மை
　　பரவட்டும் திசையெட்டும்! வைய மெங்கும்
பரவட்டும் தமிழ்ப்பண்பு! தமிழர் ஆட்சி
　　பரவட்டும் செங்கதிரோன் வெளிச்சம் போல!
பரவட்டும் திருக்குறளின் எண்ணம்! எங்கும்
　　பரவட்டும் திருப்புகழின் வண்ணம்! நன்கு
பரவட்டும் பழுத்தபலாச் சுளைத்தீ; இந்தி
　　பரவட்டும் பரவட்டும் என்பார் வீட்டில்!

# பரவட்டும் செந்தீ!

கவிஞர் ஆனந்தம்.

மூவேந்தர் முக்கொடியின் நிழலின் கீழே
    மும்முரசின் பம்மியெழும் ஒலியி னூடே
கோவேந்தர் கோலோச்சும் கொலுமன் றத்தில்
    குறு நிலத்துச் சிறுமன்னர் பெருநோக் கத்தில்
பாவேந்தர் பரிந்தூட்டும் முப்பால் உண்டு,
    பண்டைய நாள் முச்சங்கம் தவழ்ந்தி ருந்து
நாவேந்தர் இசைபடவே மேவிநின் று
    நனிவளரும் முத்தமிழே, அமிழ்தே, அன்னாய்!

உன்னருளால் ஒப்பில்லா வீரங் காட்டி,
    உலகெங்கும் கலமோட்டிப், பொருளை ஈட்டித்
தன்னிகரில் தனிப்புகழால் தமிழர் கூட்டம்
    தரணியெலாம் பரணிபாடுங் காலம் எங்கோ?
என்னென்ன இடுக்கண்கள் நின்னைத் தாக்க!
    எத்தனை தான் பிறமொழியார் படையெ டுப்பு!
பொன்னனைய ஒளிகுறைக்க மாசு சூழ்ந்தும்
    பொன்றாத நின்றனைப் போற்றி வாழ்வோம்!

இயலாது தோற்றோடிச் சென்று விட்டோர்,
    எவரெவரோ அவமானச் சேற்றில் வீழ்ந்தார்!

முயலாத பேர்களில்லை; முறைகளில்லை!
மொழிமேன்மை உணராத மூடரானோர்!
அயலாரின் பகைமையெனில் புரிந்து கொள்வோம்!
அதற்கான தகுதிதிறன் நீயே தந்தாய்!
செயலற்றுப் போகின்றோம் தாயே, உன்றன்
சேய்களிலே சிலர் துரோகம் புரிவதாலே!!
எக்கருத்தைக் கூறுதற்குத் தமிழ்ச்சொல் இல்லை ?
எதற்காகத் தமிழ்நாட்டில் இந்தி வேண்டும்?
தக்கவொரு காரணத்தைத் தர வேண்டாமா!
தரமென்ன திறமென்ன எம்மை ஆளச்;
செக்கொலிபோல் முக்குகின்ற இந்திக் கேனோ
செல்வாக்கு? தமிழ்நாடு திறந்த வீடா?
இக்குருதி கொதித்திடவே, பட்டாளத்தின்
இடையிலன்றோ நடைபோட்டு வருமாம் இந்தி !

கூச்சமின்றி, அதிகார ஆசை மீறிக்,
குலங்கெடுக்கும் கோடரியின் காம்பாய் மாறித்
தாய்ச்சேலை உரிகின்ற தகவில் தாழ்ந்து,
தன்மானம் இழந்தவராய் வன்மங் கொண்டார்!
பேச்சடங்கிப் போகுமட்டும் பிறந்த நாட்டின்
பெருமைதனைப் பேணுதற்கே உறுதி பூண்டோம்!
மூச்சடங்கிப் போனாலும் போராட்டத்தில்
மூர்க்கமுடன் முழுவலிவால் எதிர்த்துப் பார்ப்போம்!

எம்முயிரைத் தாயகத்திற் கர்ப்பணித்தோம்!
எம்நாட்டு நலமேஎம் நலமென் றெண்ணி,
எம்முறவும், எம்முடைமை அனைத்தும் இந்த
எழிலான தமிழ்மொழிக்கே உரிமை செய்தோம்!
விம்முகின்ற தடந்தோளின் பூரிப் பெல்லாம்
வெந்தழலில் தந்திட்ட சின்னச் சாமி,
அம்மம்மா! எம்மையினி இகழா வண்ணம்,
ஆணையிட்டோம்! பரவட்டும் தீ! தீ! செந்தீ !!


எடுகளில் எங்கள் அண்ணா
முரசொலி
மெயில்
தினத்தந்தி
டெக்கான் எரால்டு



தினமலர்
சுதேச மித்திரன்
நவ இந்தியா
குமுதம்
ஆனந்தவிகடன்
மாலைமுரசு
டைம்ஸ் ஆப் இந்தியா.
தொகுப்பு—
அருணை
ஓவியர் தினமலர்.

# பொய்யும்



# மெய்யும்

மக்கள் பேச்சு வழக்கில் இவ்விரு சொற்களும் அடிக்கடி இடம் பெறுகின்றன. ஒருவர் மற்றொருவர் கூறிய ஒரு பொருளைக் குறித்து-அது பொய் என்றோ-மெய்என்றோ கூறிவிட்டாலும் மனதுள் அவ்வாறு கருதிக் கொள்கின்றனர் ஒவ்வொரு இடத்திலும்

பேராசிரியர்
க. அன்பழகன்

நிகழும் ஒவ்வொருவர் பேச்சும், மெய்யாகவோ' பொய்யாகவோ, அன்றி அவ்விரண்டுங் கலந்த தன்மையதாகவோ தான் இருக்கின்றன.

பொய்பேசுவதை விரும்பாதாரும் அதை முற்றிலும் விலக்க நினைப்பவரும் உண்டெனினும், பல்வேறு சூழ்நிலையால் அதை அவர்களும் நிலை நிறுத்த முடிவதில்லை. மேலும் சொல்லும் ஒரு பொருளைக் குறித்தும் முற்றும் மெய் பேசுவோரும் இல்லை, முற்றும் பொய்யாகவே பேசுவோரும் இல்லை. வேண்டாதவரிடத்துப் பொய் பேசுவோரும், தமக்குற்ற நண்பர் போன்ற வேண்டியவரிடத்து மெய் பேசுவது பலகாலும் அறிந்ததேயாகும்.

இப்படிப் பின்னிப் பிணைந்து கலந்து கிடக்கும் இந்தப் பொய்யும், மெய்யும், ஒவ்வொரு பேச்சிலும்—கருத்திலும் இடம் பெறுறுலும், ஒருவர் வாயிலாகவே பிறந்தாலும், ஒரு படித்தாய் ஏற்றுக்கொள்ளப்படவில்லை நல்லறிஞரால். 'பொய்' வெறுத்துஒதுக்கப்படுகிறது 'மெய்' போற்றி ஏற்கப்படுகிறது.

ஒரு நிகழ்ச்சி நடந்தகாலை, அதைக் கண்ட ஒருவர் அக்காட்சியை கூறக் கேட்ட மற்றொருவர் சிந்திக்கும்போது, அது முற்றும் மெய்யாகவோ பொய்யாகவோ இருக்கலாம் அவர் கண்டதாகக் கூறியது பொய்யாகலாம். அன்றி அவர் அக்காட்சியைக் கண்டிருந்தும், அக்காட்சியே மயக்கத்தில் விளைந்ததாகலாம். எனவே—அவர் கூறியதைப் பகுத்தறியும் அறிவினர்க்கு அது எந்த அளவு மெய், எந்த அளவு பொய் என்பது விளக்கமாகும். ஒரு காட்சியை அவர் கண்டிருந்தும், பேய்த் தேர் போன்றதொரு பொய்த் தோற்றமாக இருந்தாலோ—அன்றி அதை அவர் மதுவுண்ட மயக்க நிலை போன்ற அறிவு மயக்கத்தில் கண்டிருந்தாலோ—அக்காட்சி அவருக்குத் தோற்றுவித்த உணர்ச்சி மெய்யாவ

# தி.மு. கழகத்தால் தமிழ் வளர்ந்ததா?

தி. மு. கழகம் தோன்றிய பிறகு தமிழ் கற்ற, அதன்கண் ஆர்வம் மிகுந்த இளைஞர்கள் தூய இனிய தமிழில் தங்கள் பேச்சினையும் எழுத்தினையும் நிகழ்த்தியதால் மக்களிடையே தமிழின்பால் நன்மதிப்பும் அரசியல் வாதிகட்கு ஈடுபாடும் புதிய வகையில் பெருமளவில் தோன்றின என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.



தமிழ்க் கிடையூறு உண்டாகுங் காலத்து இவ்விளைஞர்கள் மார்தட்டி முன் வந்ததை நான் கண்ணாரக் கண்டுதமிழ்க்கினி இவர்களின் மிக்க அரண் செய்யும் ஆற்றல் மிக்கரர் இலர் என்று எண்ணி இறும்பூ தெய்தினன்.

பேராசிரியர் ஔவை துரைசாமி
எம். ஏ. எம். லிட்

தன்றி அக்காட்சியே உண்மையாவதில்லை. இதனாலேயே 'கண்டதும் பொய், கேட்டதும் பொய் தீர விசாரிப்பதே மெய்'' என்னும் பொன்மொழி பிறந்துள்ளது.

ஒவ்வொரு பேச்சும், கருத்தும், காட்சியும் நிகழ்ச்சியும் பகுத்தறியப்பட வேண்டியதாகின்றது. அவரவர் அறிவுத் திட்டம், உணர்ச்சி நிலை, படிந்த நம்பிக்கைகள், சுற்றுச் சார்பு இவைகட் கேற்ப எது மெய், எது பொய் என்று ஒவ்வொருவரும் தீர்மானிகின்றனர்.

பெரும்பாலான மக்கள், தாம் கண்டது கேட்டது ஆகியவற்றை அப்படியே மெய் என்றும்—தாம் கண்டு கேட்டதற்கு மாறானவற்றைப் பிறர் கூறுமிடத்து அது பொய் என்றும்எளிதில் முடிவு செய்கின்றனர். அதற்குமேல் எண்ணுதற்கு சிந்திப்பதற்கு அவர்களால் முடிவதில்லை.

அதே போன்று பிறரை மயக்கிவிட எண்ணும்பலர்—பொய்யை மெய்யாகவும்—மெய்யைப் பொய்யாகவும் தமது பேச்சுத் திறத்தால் உருமாற்றி விடுவதும் கண்கூடு. பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினாலே மெய் போலும்மே மெய் போலும்மே மெய்யுடை ஒருவன் சொலமாட்டாமையினாலே பொய் போலும்மே, பொய் போலும்மே என்னும் பழம்பாட்டு இதனை உணர்த்தும்

உண்மையும்— உண்மை அல்லனவும் ஒருவனது சொல வன்மையினாலேயும், அஃதின்மையினாலேயும் மாறித் தோன்றுவன என்பது, வழக்குரைஞர்கள் பலரைக் கண்டவர்கள் தெளிந்ததே. எனினும் சிறந்த நடுவினர்கள் தமது அறிவு ஆற்றலால், காரண காரியச் சான்றுகளைக் கொண்டு உண்மையை உணர்ந்து நீதி வழங்கலாவதும் நாம் அறிந்ததே. எனவே 'மெய்யும்' 'பொய்யும்' நாம் தெளியும் தன்மையைப் பொருத்தே உணரப்படுகின்றன.

பழுதையைப் பாம்பென்று நடுங்கும்போதும், மரக்கிளையின் நிழலை பேயென்று அஞ்சி அலறும் போதும், அந்தக் காட்சிகள் பொய்யேயன்றி, அவற்றால் பிறந்த உணர்ச்சிகள், நடுக்கமும், அலறலும் பிதற்றலும் உண்மையே.

அதைப் போன்றே கற்சிலையைத் தெய்வம் எனவும், நிகழ்ந்துவிட்ட தீங்கினை எல்லாம் தலைவிதி எனவும், கருதிக்கொள்ளும்போது அவை உண்மையல்ல வாயினும், அந்த நம்பிக்கை உடையவர்கட்குப் பிறக்கும ஆறுதலும் மனஅமைதியும் உணமையேயாகும்.

கடவுள் உண்மை, புராணக் கற்பனை, அதிசய(வியப்புறு) நிகழ்ச்சிகள், சால வித்தைகள் ஆகியவைபற்றி அவரவரின் - பகுத்தறியும் ஆற்றலும், மனத்தில் கொண்ட நம்பிக்கையுமே போட்டியிட்டு மெய்யென்றும்-பொய்யென்றும் முடிவு கட்டுகின்றன.

எந்த ஒன்றைக் குறித்தும் பகுத்தறயவே முடியாதவாறு அவரவர் கொண்ட சமயக் கொள்கைகளும் நம்பிக்கைகளும் தடையாவது கண்கூடு.

இல்லாததை இருப்பதாகவும். இருபபதை இல்லாததாகவும், உறுதியாக நம்புகின்ற மனம்கொண்டவர்கள் கருததுக்கள். அந்த நம்பிக்கையைப் பற்றில்லாதவர்கட்கு நேர்மாறாகத் தோன்றுகின்றன.

காணப்படாத அந்தக் கடவுள் ஏது - என்பாரும், காணப்படாதவனே கடவுள் ஆதலின் உண்டு என்பாரும் இந்த உலகமே நிலவுதல் உடைமையின் உண்மை என்பாரும். அது எந்நாளும் நிலைத்தற்கு இடமின்மையினாலே- உலகம் மாயை என்பாரும்; இந்த உடம்பு 'மெய்' என்பாரும் தாம் கொண்ட விருப்பத்திற்கேற்ப இதுமெய், இது பொய் என்று கருதிக் கொள்வாயினர்.

சமயங்களின் நெறிகளாலும், விஞ்ஞானச் சிந்தனையாலும், இப்படிப்பலவாதங்கள் நிகழ்கின்றன. ஆனாலும் உண்மை எதுவும் கற்பனையாகிப் பொய்யாகப் போவதில்லை; கற்பனை எல்லாம் பொருளாகி உண்மையாகப் போவதுமில்லை. ஆனாலும் அவற்றின் பயனை நோக்கி, 'உண்மையான ஒனறு' ஒருவரது மனத்தில் தோற்றுவிக்கும கவலையை-வருத்தத்தைக் களைவான் வேண்டி. அதைப்பொய்யாகஎண்ணிக் கொள்ளச் செய்வதும், 'பொய்யானதொரு கற்பனை' ஒருவரது மனத்தில் எழுப்பும்-நல்லுணர்ச்சியை நிலைபெறச் செய்ய அதை 'மெய்யானதொரு பொருள்' ஆக எண்ணிக் கொள்ளச் செய்வதும் புலனாகும.

மந்திரவாதியின் சால வித்தை, பொய்யான. நிலைபெறுதல் இல்லாத தன்மையினாலேயே அதுகாண்பவர்க்குக் களிப்பூட்டுவதென்றும். அதனைக் கண்ட காலத்தும் அது பொய்த் தோற்றமே என்றாலும் அதனைக் கண்டதால் ஏற்பட்டஉணர்ச்சியும் மகிழ்ச்சியும் பொய்யல்ல.

அதுபோன்றே மெய்யும் பொய்யும் பகலும் இரவும் போல ஒளியும் இருளும் போல ஒன்றை ஒன்று மறுத்து நின்றபோதிலும், ஒன்றை ஒன்று புலப்படுத்தியும். ஒன்றை ஒன்று மருவியும ஒன்றிலே ஒன்று மறைந்தும் நிற்கின்றன.

இதனால் பயன் நோக்கி ஒன்றை மெய்யென்றும், பொய்யென்றும் உரைகக எண்ணுவோர் சில கற்பனை யை மெய்யாகவே கொண்டு போற்றுவதும், சில கண் கண்ட பொருளைப் பொய் யாகவே விலக்குவதும் செய் கின்றனர்.

நொந்த உள்ளங்கொண்ட தாய், தன் மகனைப் பற்றியே அவன் யார்? நான் யார்? எங்களுக்குள் என்ன உறவு? என்று பேசுவதைக் கேட்ட தில்லையோ? அதைப் போன்று மன உணர்ச் சியைத் தழுவி மெய்யான தொன்றைப பொய்யாகவும் பொய்யான தொன்றை மெய்யாகவும் உறுதி செய்து கொள்பவர் பலர்.

உலகம்எல்லாவகையாலும் முறையாகத் தோன்றி நிலவி வந்தபோதிலும், அதில் பிறந் துள்ள மனிதன் ஒருநாள் தன வாழ்வு முடிந்துவிடும் என்பதை எண்ணும்போது அதனால் ஏற்படும் ஏக்கத் தைத் தவிர்க்கவும் உலகியல் பினால் அன்புக்குரிய பலரை இழக்க நேரிடும் துயரத்தை மாற்றிக்கொள்ளவும் விரும்பி 'உலகமே ஒரு பொய்த் தோற்றம் 'மாயை' என்ற ஓர் எண்ணத்தை வருவித் துக் கொண்டான்.

ஒரு நாளெல்லாம் உண்ணா மல் இருக்க நேரிட்ட இரு வருள்—உணவு கிடைககா மையால் அந்நிலைக்குஆளான வன் பசியால்வருந்த, தானே அதை ஒரு நோன்பாக மேற் கொண்டவன் அப்பசியை எளிதாகத் தாங்கிக்கொள்வ தைப் போன்று. இந்த வரு வித்துக்கொணட நம்பிக்கை யில் தமது துயரை மாற்றிக் கொள்வது நோக்கமாகலாம்.

உடம்பு—பல்பிணிக்கொள் கலம், வாழும் நாளும் சிலவே என்பதை எண்ணியோர் அத னால் உள்ளம் வருந்தி ஏங்கா மல் தடுக்கவே போலும்' இந்த உடம்புக்கே, 'மெய்' என்னும் பெயர் வழங் கினும் அதனையே 'பொய்' என்று கற்பித்துக் கொள்ள லாயினர்.

"காயமே இது பொய்
யடா,
காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மட்பாண்டம் இது
ஓடடா"

என்று பாடி மனந் தேறும் வழி கொண்டனர் போலும்.

"வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்" என்று கூறி—உலகத்தின் நிலையாமை என்னும் இயற் கையை நிலையாக உள்ளத் தில் இறுத்திக் கொண்டனர்

'சீச்சீ இந்தப் பழம் புளிக் கும் என்று எண்ணிக்கொள் வதே எட்டாத பழத்துக்கு கொட்டாவி விடும் மனத் துக்கு ஆறுதல் தருவது'என் பதைக் கொண்டே அவ் வாறு எண்ணத் தலைப்பட்ட னர். போலும்.

"நெருநல் உளனொருவன்
இன்றில்லை என்னும்
பெருமை யுடைத் தவ்
வுலகு"

என்றார் திருவள்ளுவர்.

நிலையாமையை உணர்த்

## தி. மு. கழகத்தால் தமிழ் வளர்ந்ததா?

"சீரிய கூரிய தீஞ்சொற்களை" இடை இடையே அளந்து பேசும் நாவாற்றலை வளர்த்த அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் செயல் புரிந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்ப் பணியில் தலை சிறந்து விளங்கு கிறது.



நல்ல தமிழ் பேசும் எவரைக் கண்டாலும் இவர் தி. மு. க. சார் புடையரோ என எவரும் ஐயுறு தலே அக்கழகம் தமிழ்ப் பணி புரிந் ததை உறுதிப் படுத்தும்.

—ஔவை துரை நடராசன்
எம். ஏ. எம். லிட்



**மந்திரியிடம் ஒரு அதிகாரி:** இப்போது வனமகோத்சவ நிகழ்ச்சி. அடுத்தது காடு அழிப்புத் திட்ட துவக்க விழா!

---

தவே அக்குறள் பிறந்தது என்றாலும், ஒருவரது வாழ்நாள் என்னாளும் உளதாவதில்லை என்பதைத்தெளிந்து பிறந்தோரெல்லாம் இறத்தல் உண்மை என்பதைக் கண்டு, வாழ்நாள் உள்ள போதே கடமையை-ஆற்ற வேண்டும் என்பதற்காகவே யன்றி. வாழ்கின்ற அந்நிலையே பொய் என்பதற்காக அல்ல—அந்தக் குறள் பிறந்தது.

மேலும் கடவுளைக் குறித்தும்.

'கண்டவர் விண்டதில்லை
விண்டவர் கண்டதில்லை'

என்று கூறப்படுவதைச் சிந்திப்பவர்கள், காணாததையும் காணப்பட முடியாததையுமே கற்பனையின் வழி உண்டென்று கொண்டனர் என்பது விளங்கும்.

எனவே எது மெய்? எது பொய் என்று காணஒருவரையறை வேண்டாமோ? அதனை விளக்கவே திருவள்ளுவர்.

"எப்பொருள் யார் யார்
வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காணபது அறிவு"

எனவும்

'எப்பொருள் எத்தன்மைத்
தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள்காண்பது அறிவு"

எனவும்

மெய்யான பொருளை—அறிவில் சிந்தித்துக் காணவேண்டும் என வலியுறுத்தினர். அவ்வாறு காணப்படுவது, பொருள் உண்டா, இல்லையா என்பதைப் பொருத்த

---



**வேலை கேட்பவர் :**

ஐயா! லஞ்ச ஒழிப்புக் கமிட்டியில் என்னைப் போட்டு விடுங்கள்! எப்படியாவது பிழைத்துக் கொள்கிறேன்! அப்புறம் உங்களைக் கவனித்துக் கொள்கிறேன்!

---

தாகாது. அப்பொருள்—கருத்தளவால் மட்டும் ஏற்கப்படினும்—அதனால் விளையும் பயன் உண்மையா—பொய்யா — என்பதைப் பொருத்ததேயாகும். அதன் பயன் குறித்தும்—கருத்து மாறுபாடு தோன்றலாகும். எனவே தான்—மெய்யாவதனைப் போற்றி வளர்த்துப் பொய்யாவதனை போக்கிட எண்ணிய வள்ளுவர் 'வாய்மை'யை வற்புறுத்தினார். வாய்மையைக் காக்க ஒருவன் தால பேசும் எதனையும் தன் எனக்கு கூறிய பொய்த்தலாகாது என்றார்.

"தன்னெஞ்சறிவதுபொய்
யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச்
சுடும்"

என்று கூறி மனச்சான்று, பொய்த்தவரைப் பின்னர் வருத்தும் என்றார். மனச்சான்றும் இல்லாமற் போமளவு பொய்யிலே புலவராயினர்க்கு அந்தத் துயரமும் தோன்றாது.

உள்ளத்தால் பொய்யாது உண்மையென உணர்ந்ததற்கேற்ப ஒருவன் சொல்லாலும் செயலாலும் ஒழுகுவானாயின் உயர்ந்தோர் உள்ளத்திலெல்லாம் அவன் இருப்பான் என

---



**ஆபீசர் ;**

நம்ப ஆபீசிலே எல்லாம் தகுதி படைத்தவர்கள்தான் இருக்கிறார்கள். இவர்-லண்டன் ரிட்டர்ண்ட்! அவர் அமெரிக்கா ரிட்டர்ன், அடுத்தவர் மந்திரியின் மகன்!

றும் கூறினார்.

'பொய்யாமை அன்ன
புகழில்லை'
எனவும்,
'பொய்யாமை பொய்
யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை
நன்று
எனவும்

சான்றோர்க்குப் பொய்யா
விளக்கே, விளக்கு'
எனவும்

பொய்யாமையைவற்புறுத்தி அதன் பெரும்பயனைத் தெளிவு படுத்தினார்.

அவ்வாறு காக்கப்படும் வாய்மைதான் யாதோ என்பார்க்கு வள்ளுவர்,

"வாய்மை யெனப்படுவது
யாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்"

என்று தெளிவாக்கினார்.

மனமறிந்து பொய்த்தல் ஆகாமையேயன்றிச் சொல்லும் எச்சொல்லும், கேட்டவர்க்கோ; அவர் மூலம் பிறருக்கோ எவ்விதத் தீமையும் பயவாத தன்மையுடையதாக வேண்டும் என்பது கருத்து.



மந்திரி அதிகாரியிடம்:

யோவ்! யாரைய்யா நீ! அரிசி வயலுக்கு கூட்டிகிட்டு போன்னா நெல் வயலுக்கு கூட்டிக்கிட்டு வந்துட்டே!

மற்றும். உள்ளதை உள்ளவாறே கூறுமிடத்து உலமகோர, அவற்றின் உண்மை இயல்பை அறியமாட்டாதவராய்க் கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனக் கொண்டு. சுயநல விருப்பங்கட்கும், பொறாமைக்கும், பேராசைக்கும் இரையாகி. உலக வாழ்வினையே தமது தவறுகளால் கற்பனை செய்யப்பட்ட நரகமாகவே மாற்றி விடுவர் என்றெண்ணிப் போலும், குற்றமற்ற நன்மையை எந்நாளும் விளைக்கும் தன்மையுடையவாயின், அப்படிப்பட்ட உண்மையல்லாத சிலவற்றை உரைப்பதும் வாய்மையாகவே கொள்ளப்படும் என்றார்.

"பொய்ம்மையும் வாய்மை
யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்பது அது.

'புரை தீர்ந்த நன்மை' என்றதாலே அப்பொய்மை எவ்வித குற்றத்தினின்றும் பிறவாததாகவும், எவ்வித தீமைக்கும் இடந்தராததாகவும் – நன்மையே நிலைபெறச் செய்வதாகவும் இருக்கவேண்டும் என்பது தெளிவு. அவ்வாறு அமைவது அரிது என்பதும், நன்மை பயப்பதும் உறுதியல்ல என்பதும் தோன்ற 'பயக்கும் எனின்' என்றார்.

சொல்லிய சொற்கள் அளவில் அவை பொய்யேயெனினும், உளளங்கரவாமையானும், தன்னலம் காரணமாகாது, பொதுநலம்நோக்கமாதலினும் பின்னர் வேறு தீமைக்கு இடம்அளிக்காமையினும், உண்மை சொற்களின் தகுதியை அவை அடைகின்றன. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமையாகிய தூய்மை - அதன் நற்பயனால் வாய்மையாகின்றது.



அதிகாரி :

சே! சே! இலாயக்கில்லை - தொண்டைக் குழி நேரே சுடவேண்டும்!

இதனால் வாய்மை நாடும் நன்னெஞ்சினர், பொய்மையாதவனைக் கண்டு விலக்குதற்கு உறுதிகொண்டு தமது அறிவுத் திறத்தால் ஆராய்ந்து எதனையும் சொல்லுதலே முறை என்பது தெளிவு.

சான்றாண்மையைக் கூற வந்தவிடத்து, சான்றோர்க்கு "கடனென்ப நல்லவை எல்லாம்' என்றாற் போன்று, அறநெறி காத்தலும், தூய நன்மையைப் பெருக்கலுமே வாய்மையின் குறிக்கோள் என்பது பெறப்படும்.

அவ்வாறு கருதும் மனச்சான்றுடன் உரைப்பவையே மெய்யையும் அதைக் கைவிட்டுத் தன்னலமும் ஒன்றே கருதி உரைப்பவையே பொய்ம்மையும் ஆம் என்பதும் இதனால் தெளியலாகும். ★

# இந்தி ஆதிக்கம் வந்தால்......




தென்னாடுடைய சிவனே போற்றி!
ஹரே பகவான்! பத்ரிநாத்!
அக்கா! அக்கா!
பஹன்! பஹன்!
மயில்-தேசியப்பறவை
இனி நான்தான் தேசியப்பறவை! இந்தி எழுத்தைப்பார் என் மாதிரியே இருக்கு!
क
ஆனந்தவிகடன் மலர்
கல்கி மலர்



தமிழ் இலக்கியம்
இது தமிழ் இலக்கியம். இதைப்படி!
இஸ் இந்தி சாகித்ய படோ!
இது தொல்காப்பியம்!
இஸ்கா நாம் தோல்காப்பியம்!
ஜா ஹை
ஆ ஹை
போல் ஹை
ஹை

# பெண் பிறப்பு

சிந்து

1. தெந்தின மென்னத் திரைக்கடல்—தனில்
தேனெனச் செந்தமிழ் பாடியே
பைந்தொடி யோடெழிற் பாடகம் - பண்
பாடரங் காடும் விறலிபோல்,
அந்தமில் செல்வஞ்சி றந்திடும்—நியூ
யார்க்கெனும் அத்துறை நோக்கியே
வந்திடும் கப்பலைப் பார்த்துமே—அந்நாட்டு
மக்கள் திரண்டுமே நின்றனர்.

2. கூடியந் நின்றமக் கட்குலம்—கண்
கொட்டாமற் பார்த்துமே நின்றிட,
வாடி யுதிர்ந்த மலரென—மை
வண்ண மிழந்த குழலென
ஊடி யெறிந்த வணியெனக்—கலத்
துண்டு மிகுந்த வுணவென
நீடிய துன்ப நிலையுடன்—கப்பலில்
நின்றே யொருத்தி யிறங்கினாள்.

3. அன்னவள் பாரசீ கம்மெனும்—நாட்டினை
ஆளும் முகமது ஷாவெனும்
மன்னவன் பட்டத் தரசியாய்—வாழ்ந்து
வந்தவள் இன்பமி குந்தவள்
அன்ன,நடைமின் னிடையினாள்—சுரை
யாவெனும் பேரை யுடையினாள்





புலவர் குழந்தை



தன்னிக ரென்னவ மைந்தனள்—ஒரு
தன்னந் தனியாக வந்தனள்.

4. வந்தவள் அங்கெதிர் கொள்ளவே—நின்ற
மக்களைக் கண்டு மகிழ்ந்திலள்
வெந்தபைம் புண்ணுட்சி வந்தவோர்—வடி
வேல்நுழைந் தாலென வெம்பியே
நைந்தவள் முன்னிலை தன்னுடன்—இன்று
நண்ணிய இந்நிலை எண்ணியே
நொந்தவள் வெந்துயர் முந்தவே—அன்னரை
நோக்கியே இன்ன நுவன்றனள்.

5. மன்னவற் குவாழ்க்கைப் பட்டனன்—இன்ப
வாரியி லேதிளைத் திட்டனன்
மன்னிய செல்வத்து வந்தனன்—நன்கு
வாழ்வாங்கு வாழ்ந்துமே வந்தனன்
மின்னென அப்பெரு வாழ்வெனும்—குன்றின்
மீதிருந் தையகோ வீழ்ந்தனன்
என்னிலை யன்னவா றெம்மனீர்—இனி
எய்துமோ வென்றழு தேங்கினள்.

6. ஏனிந் நிலையெனக் கெய்திய—தெனின்
எம்மனீர்! என்னென் நியம்புகேன்!
நானொரு பிள்ளை பெறவில்லை—அந்த
நாட்டினை யாளுதற் கென்றுமே
ஆனவோர் குற்றத்திற் காகவே—முன்னர்
அன்போ டிணைத்திட்ட அன்னரே
மானமர் கண்ணியெங் கேயோபோ—என்றே
வாயாரக் கூறியே விட்டனர்.

7. முன்ன ரெகிப்தர சன்மகள்—தன்னை
முறையோடு வாழ்க்கைப் படுத்தனர்
அன்னவள் பெண்பிள்ளை யாகவே—பெற்ற
தாலவள் தன்னை விலக்கியே
என்னை மணந்தனர் என்னைமீர்;—யானும்
ஈரிரண் டாண்டுக ளாகியும்
மன்னன் மகிழ மகப்பெறு—கில்லேன்
மணவிலக் கைப்பெற்று வந்தனன்.

8. பிள்ளை பெறமறுத் திட்டனே—அன்றிப்
பெண்மையை யிழந்து விட்டனே;
பிள்ளை பிறக்க விலையெனில்—கொண்ட
பெண்ணதற் கென்னதான் செய்குவாள்;

பிள்ளை தரமுடி யாததும்—ஆண்
பிள்ளைக ளின்குறை யல்லவோ ;
உள்ளத னுண்மை யுணர்கிலார்—என்னை
ஓடென ஓட்டியே விட்டனர்.

9. மன்னன் பெருந்தேவி என்னவே—மிக்க
மதிப்பொடு வாழ்ந்த நிலைமைபோய்ப்
பொன்னணி யாடை சுமந்துமண்—பாவை
போலப் பொழுதினைப் போக்கியே
தன்னந் தனித்துண் டுறங்கியே—ஐயோ ;
சாகவோ பெண்ணாய்ப் பிறந்தனன் ;
என்னினிச் செய்குவன் எம்மனீர் ;—என
ஏங்கி யதுமே நின்றனள்.

10. நங்கை யவள்தன் நிலையினைக்—கண்டு
நல்வர வேற்றிட வந்துமே
அங்கு குழீமிநின் றவர்களில்—ஓர்
அருந்தமிழ்ப் பெண்மணி யன்புடன்
எங்கையே யீது புதிதல—இவ்வா
றெத்தனை யோநம் மினத்தினர்
தங்கள் கணவரால் இங்ஙனம்—வாழ்வு
தன்னை யிழந்தவ ரெண்ணிலர்.

11. வீரமா பத்தினி யென்றுமே—சேர
வேந்தன் புகழ்ந்துபா ராட்டிய
காரிகை பூம்புகார் கண்ணகி - பெண்மையைக்
கற்பினா லிறுக்கிக் கட்டியே
ஓரியாய் வாழ்நாள் முழுவதும்—தன்யில்
லுள்ளிருந் தேகாலந் தள்ளவே
வீர னெனவந்தக் கோவலன்—புகழ்
மேவிய விந்தையுங் கேட்டிலை ;

12. ஏனிவள் போலவே முன்னரும்—கண்ணகி
என்று மொருத்தி தனித்துமே
தானிருந் தேங்கி யழுதிட—அவள்
தன்னைவிட் டேயின்னொ ருத்தியால்
வானினை யொத்தகை வள்ளலாய்—ஓர்
மயிலுக்குப் போர்வை வழங்கியான்
தானெனப் பெற்றவப் பேகனும் - சென்று
தங்கியே பெண்பழி தாங்கினான்.

12. காரிரு ளிற்றனிக் காட்டிடை—நளன்
காதலி யைவிட்டே ஓடினான்.





பாரிலுண் மைக்கரிச் சந்திரன் — எனப்
பட்டவன் தன்மனை யாட்டியைச்
சீரியர் கண்டுளம் வெள்கவே—ஊர்த்
தெருவில் விலை கூறி விற்றனன்
பாரத வீரன் தருமனும்—தேவியைப்
பணயமாய் வைத்துச்சூ தாடினான்

13. சுடுதொழி லாளரைப் போலவே—நிறை
சூலுடை யமனை யாட்டியைக்
கொடிய விலங்குவாழ் காட்டிலே—கூட்டிக்
கொண்டுபோய் விட்டானி ராமனும்
முடியை யிழந்துந்தன் காதலை—தனை
முந்தவி ழக்கத்து ணிந்திலாப்
படியிலெட் டாமெட்வார்டொருவனே—பெண்
ணின்
பாடரிந் தவுண்மை யாடவன்.

14. முத்து நகையினாய் கேளினும்—ராசாராம்
மோகன ராய்பிற வாமுனம்
செத்த கணவ ருடற்படும்—அத்
தீயினில் ஐயகோ தள்ளியே
கத்தக்கத் தக் கொன்று வந்தனர்—கடுங்
கண்ணெஞ்ச முள்ளவர் வன்னெஞ்சர்
ஒத்த வுரிமை யிலாமையின்—இ∴
தொருவகை யில்நல்ல தென்னலாம்.

15. சாரதாச் சட்டம் வருமுனம்—பார்ப்பனச்
சாதியார் பெண்கள் பிறந்துமே
ஓரிரண் டாண்டுக ளாகுமுன்—காளை
யொருவன்பெண் டாக்கியே வந்தனர்
பாரினிற் பூக்குமுன் கைமைகள்—ஆகினார்
பத்துகைந் தாறுபே ராகுவர்
ஊரலர்க் கஞ்கி யுயிரினை—விட்டோர்
உள்ளரிற் பாதிப்பே ருண்டுமே.

16. பாட்டியொ டத்தையக் கைதங்கை—பெற்ற
பாவையு மாகவே ஒவ்வொரு
வீட்டிலு நாலைந்து மொட்டைகள்—வாழ்வின்
விடுதலை யுற்று விளங்கினர்
மூட்டை யொடுவெளிப் போகுநர்—ஐயோ ;
மொட்டைக ளென்றஞ்சித் திட்டவே
நாட்டினி லிப்படி ஆடவர்—செய்திட்ட
நட்டணை கொஞ்சமோ நஞ்சமோ ;

17. இன்பந் தரும்பொரு ளென்னவே—பெண்ணை
எண்ணியே கொஞ்சிக் குலாவுவர் ;
அன்பு கனிந்த அமிழ்தமே ;—என்
ஆவியே யென்றுபா ராட்டுவர் ;
இன்ப நுகர்ந்து முடிந்ததும்—பெண்ணை
எச்சிற் கலத்தி னிழிந்தவோர்
துன்பந் தரும்பொரு ளென்னவே—கால்
தூசிபோல் வீசி யெறிகுவர்.

18. இன்று மவர்செய் கொடுமைகள்—அந்தோ ;
எண்ணத் தொலையாவென் எங்கையே ;
என்னவச் செந்தமிழ்ப் பெண்மணி—தக்க
எதுவே டெடுத்துக் காட்டினள்
அன்னவள் கேட்டுமே தன்னிலை—தன்னை
அவற்றுட னொப்பிட்டுப் பார்த்தனள்
பின்னொ ரமரிக்கப் பெண்மணி—தங்கள்
பெற்றியை யிற்றெனப் பேசுவாள்.

19. பெண்ணினந் தன்னையவ் வாடவர்—இனிப்
பிள்ளை பெறுமோர் கருவியாய்
எண்ணியே கொள்ளும் வழக்கினை—இன்றே
டில்லாமற் செய்ய முயலுவோம் ;
எண்ணிய அத்தீய எண்ணத்தை—விடா
திருப்பரேல் முன்போல்நா மப்புறம்
மண்ணினில் ஆடவர் தம்முடன்—கூடி
வாழ்ந்திட எம்மீர் மறுக்குவோம்.

20. ஒன்று திரண்டோர் கொடியதன்—கீழ்
உலகத்துப் பெண்டி ருளேமெலாம்
நன்றினி தாய்ந்து முடிவுசெய்—தகை
நாடறி யப்பறை சாற்றுவோம்
அன்றுகட் டாய மொழிந்திடும்—பெண்
ணடிமை எனமற்றே ராமெனச்
சென்றதை நினையே லென்றுமே—அவளைத்
தேற்றி யழைத்துமே சென்றனர்.



# கண்ணீர்

இராம. அரங்கண்ணல். எம்.எல்.ஏ



பார்த்தவர்கள் வியக்கக்கூடியதோர் பாசம் இந்த இரண்டு பேருக்குமிடையில் வளர்ந்தது. அவனைக் காணமையிருந்தால் அந்தக் கிழவிக்கு ஏதையோ இழந்து விட்டது போன்ற 'பிரமை' தட்டும், அவனுக்கும் அப்படித்தான்! பள்ளிக்கூடம் விட்டதும் ஒரே பாய்ச்சல், அவள் பக்கம் ஓடி வந்து நிற்பான்.

"இன்னைக்கு என்ன ராஜா வேண்டும்...?"

"நேத்தைக்கு எதை ராஜா எடுத்துப் போனே...?"

"நாளைக்கு எதை ராஜா எடுத்து வைக்கணும்...?"

பிரியத்தைப் பொழிந்துக் கேட்பாள் அந்தக் கிழவி. வாயைத்திறந்து உடனே பதில் சொல்ல மாட்டான். அவன் கண்கள், அந்தக்கிழவியின் பொறுப்பிலிருந்த அந்த நூல்நிலையத்தில் வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள் மீதே மேய்ந்து கொண்டிருக்கும்.





நாளைய தமிழகத்தின்
ராக்கெட் வீரன்—நானே !

புகைப்படம்: நாகசுந்தரம்
வேடசந்தூர்

வனஜா! அதுதான் அந்தக் கிழவியின் பெயர். முத்து நரைத்து முதுமையின் சின்னங்கள் பா.ர்ந்த அந்த நிலையிலும் அவள் முகத்தில் வசீகரம் சொட்டும். வாழ்க்கையின் சுமைகளைத் தாங்காததால் உண்டான வசீகரம் போலும் அது !!

இறந்துபோன ஒரு சீமான் ஒரு பெரிய நூல் நிலையம் ஒன்றைக் கட்டி தன்னுடைய சொத்தையெல்லாம் அதற்கு எழுதிவைத்துப் போயிருந்தார். அவர் உயிரோடிருக்கும்போது வேலைக்கு வந்து சேர்ந்த வனஜா அந்த இடத்தைவிட்டு அகலவில்லை. ஆண்டுகள் பல உருண்டும் அவள் ஏற்ற பொறுப்பை விட்டுச் செல்லவில்லை! காரணம் அவளாகவே விரும்பி ஏற்றுக்கொண்ட வேலைஅது. வாலிபவனஜா கண்டோரைக் கவரும் கட்டழகு பெற்றிருந்தாள்! அழகுமட்டுமின்றி படிப்பும் இருந்தது!! எனினும் அவள் தன்னுடைய தாய், தந்தை, அண்ணன், தம்பி, தங்கை—ஏன்? கொண்ட கணவன்—போல இந்தநூல் நிலையத்திலிருந்த ஒவ்வொரு புத்தகத்தையும் கருதினாள். ஒவ்வொரு நிமிடமும் அழிகின்ற ‘ஜீவனை’ விட, அழியாத செல்வத்துக்கு தன்னை ஒப்படைத்து விட்டாள்.

*   *   *

யாரும் வராவிடில் அவளுக்குப் பெருத்த ஏமாற்றமாயிருக்கும். யாரோ நாலுபேர் வந்து ‘அது இருக்கா! இது இருக்கா !!’ என்றால் பம்பரம் போல் சுழல்வாள். எத்தனையோ தொல்லைகளில் சிக்கிச் சுழலும் மனித உயிர்களுக்கு அவளைப்போல் புத்தகங்களோடு உறவாட ஏதுநேரம்? அந்த ஊரில், அவள் எதிர்பார்த்த அளவுக்கு, யாருக்கும் படிக்க ஆசையில்லை. அதற்காக அவள் மனம் சோரவில்லை!

நூலகத்தை அந்த ஊர் நகரசபையின் பொறுப்பில் விட்டுப் போயிருந்தார் இறந்துபோன சீமான். ஆண்டுதோறும் என்னென்ன வாங்கவேண்டும் என்று அவள் சொல்கிறாளோ அதையெல்லாம் சீமானின் ‘டிரஸ்ட்டில்’ வரும் வட்டியைக் கொண்டு வாங்குவார்கள். இப்படி இந்த இருபது முப்பது ஆண்டுகளிலும் அந்த நூல் நிலையம் பேருருவெடுத்து பெரிய இலட்சிய உருவாக நின்று கொண்டிருந்தது !!

எஸ். எஸ். எல். சி. படித்துக் கொண்டிருந்தான் பக்கிரி! ஏழையின் மகன்! அவனை அந்த நூல் நிலையம் கவர்ந்தது. அநேகமாக அங்கிருந்தபலவிதமான தமிழ் நூல்களையும்படித்த ஒருவன் உண்டென்றால் அது அவனைத்தானிருக்கும். நாள் தவறினாலும் வேளைத்தவறாமல் வருவதும், படிப்பதும், செல்வதுமாகயிருந்த அவன் மீது அவளுக்கு அன்பு சுரந்தது. நாளாக ஆக அன்பு, பாசமா



என் அழகைக் காண இந்தக்
கண்ணாடி போதாதே!

-புகைப்படம்: நாகசுந்தரம்
வேடசந்தூர்

யிற்று. அவனுக்கோ முதலில் அவளிடம் பயம்தான் இருந்தது! நூல்களைப் படிக்கப் படிக்க, "இவ்வளவு படித்தவர்!'' என்கிறபக்தி உருவாயிற்று அவள் மீது!! தினசரி மாலை மலர்ந்ததும் அவன் ஓடி வருவான். அவளும் மணி 5 அடித்து விட்டால் இன்னும் அவன் வரவில்லையே என்று எதிர்பார்ப்பாள்.

வேறெந்தவிதமான ஆசா பாசங்களுமில்லாத அந்த இரண்டு ஆத்மாக்களுக்கும் ஒருபெரிய சோதனையான நேரம் வந்தது.

இது ஜனநாயக காலமல்லவா? நடைபெற்ற தேர்தலில் இரண்டு கட்சிகள் மோதிக் கொண்டன. ஒருகட்சி வென்றது! இன்னொன்று தோற்றது!! தோற்ற கட்சியை அகற்றிவிட்டு வெற்றி பெற்றகட்சி நகரசபையின் நிர்வாகத்தை மேற்கொண்டது. வென்ற கட்சி வேதனைகள் பலதைப் போக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். சொந்த நலம், சுயநலம் பெருக்காமல் பொதுப் பணியிலீடுபடும் என்று நம்பினர்கள்.

வெற்றி பெறுவதற்கு முன்பு போட்டியிட்ட வேட்பாளர்கள் அப்படித்தான் சொன்னர்கள். ஆனல், வெற்றி பெற்று 'முதல் கூட்டம்' நகர சபை மண்டபத்தில் கூடிய போது, ஒவ்வொருவர் மனதிலும், அடுத்த தடவையும் "நாம்" தான் வரவேண்டும் என்கிற ஆசை உருவாயிற்று.

நல்ல பணிகளைச் செய்தால், மக்களாகவே பார்த்து அனுப்பிவிடுகிருர்கள்! அதுகூடவா புரியாது நமது மக்களுக்கு? ஆனல், அவர்களுக்கு எண்ணம் அந்தப்பக்கம் போக வில்லை. தன் வளர்ச்சியின் மூலம் பலம் பெறுவது பெருந்தன்மை! இன்றுள்ள அரசியலில் 'வீழ்த்தி' விட்டுச் செல்வது தானே வெற்றியென்று கருதப்படுகிறது? சாம்ராஜ்ய பீடங்களிலிருந்து சராசரி வரையில் இன்று இந்த இராச தந்திரப்பாதையைத் தானே நாடுகின்றன?

ஒரு மெம்பர்: "தேர்தலில் நம்மை அலைக்கழித்த அந்தக் கட்சியின் அடிச்சுவடேயில்லாமல் செய்துவிடவேண்டும்."

இன்னொருவர்: "ஆமாம்! ஆழக்குழி தோண்டி அந்தக் கட்சியைப் புதைக்கவேண்டும் அப்போதுதான் பயல்களுக்கு நாம் யாரென்றுதெரியும்"

மற்ருெருவர்: "கட்சியினுடைய பெயரோ அந்தக்கட்சித் தலைவர்களைப்பற்றிய வரலாறுகளோ, எதுவும் நமது ஊரில் இருக்கக்கூடாது. அந்தக்கட்சியின் பெயரைச் சொல்லும் பத்திரிகைகள் வரக்கூடாது" கைதட்டல்! ஆரவாரம்! தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது. அதன் விளைவாக அந்த ஊரிலிருந்த முனிசிபாலிடி வாசகசாலைகள் நூல் நிலையங்கள் எல்லாவற்றிற்கும் உத்தரவு பறந்தது.

•

"உடனடியாக, இந்த நோடீசு கிடைத்த 24 மணிநேரத்துக்குள் ...கட்சியின் ஏடுகளோ, புத்தகங்களோ, இருந்தால் உடனடியாக அப்புறப்படுத்தி விடவேண்டும். இனிமேல்...கட்சியின் பெயரைச்



சொல்லும் எந்தவிதமான நூல்களும் இருக்கக்கூடாது.''

புதிதாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டவர்கள் ஊருக்குள் ஓடும் சாக்கடையைப் போக்குவார்கள்; புதிய சோலைகளை-சாலைகளை நிர்மாணிப்பார்கள் என்று பொது மக்கள் நினைத்தார்கள்.

பொதுமக்களை 'வாழ வைக்க' அரசியலுக்கு வந்தவர்களோ தங்கள் இடத்தை நிரந்தரமாக்கிக் கொள்ளும் வேலையில் ஈடுபட்டார்கள். விந்தையான மனிதர்கள் !!

உத்தரவைக் கண்டதும் இடிவிழுந்தது போலிருந்தது வனஜாவுக்கு. அவளுக்குக் கட்சிகளைப்பற்றிக் கவலையில்லை. எந்தக்கட்சி வந்தாலும் போனாலும் அவள் என்றும் 'லைப்ரரியன்'! அவளுடைய உள்ளத்தை உருக்கியது அவர்களுடைய ஜனநாயமற்ற போக்கு கூட அல்ல.

புத்தகங்களை அகற்றச் சொல்கிறார்களே !- இதயத்தில் எழுந்த படபடப்பை அடக்கிக் கொண்டு, "அப்படி அந்தககட்சியின் கொள்கையைச் சொல்லும் புத்தகம் எத்தனை இருக்கிறது, பார்ப்போம்...''– என்று ஒவ்வொரு அலமாரியாகப் பார்க்கலானாள். ஒரே ஒருபுததகம்! அதுவும் யாரோ ஒரு கவிஞர் எழுதிய கவிதை நூல் என்று தான் இருந்தது!! அதையெடுத்து அவள் இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"'புதுமுகம்' என்கிற புத்தகம் தானே அது ?''

—என்று கேட்டுக் கொண்டே வந்தான் பக்கிரி.

"ஆமாம் ராஜா !"

"ரொம்ப நல்ல புத்தகம். நாலுதடவை படித்தேன். இன்னொருதரம் படிக்கணும். இங்கே கொடுங்க.''

அவனிடம் எதையும் சொல்லவில்லை. பேசாமல் கொடுத்தாள். தன் இருப்பிடத்தில் வந்து அமர்ந்து கொண்டாள். பக்கிரி, புறப்படும்போது புத்தகத்தை அவனிடம் கொடுத்துவிட்டு, "... யாராவது வந்து கேட்

## தி.மு. கழகத்தால் தமிழ் வளர்ந்ததா?

கேள்வி: தி. மு. கழகத்தால் தமிழ் வளர்ந்துள்ளதா?

பதில்: ஆம்; சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக-குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் *1938*-ஆம் ஆண்டு முதல் தமிழில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு வளர்ந்து வருகிறது எனச்சொல்லலாம். மறைமலை அடிகள், சோமசுந்தரபாரதியார், திரு. வி. க. போன்ற பெருமக்கள் தங்கள் பேச்சு, எழுத்து ஆகியவைமூலம் தமிழை பொது மக்களுடன் தொடர்புபடுத்தினர். சீர்திருத்த இயக்கமும் திராவிடர்கழகமும் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகமும் இத்தொடர்பினை விரிவடையச் செய்தன.

இதில் அறிஞர் அண்ணா அவர்களின் பங்கு மிகப்பெரிதாகும். வளமான எழுத்தாலும் கவர்ச்சிமிக்க பேச்சாலும் பாமர மக்களிடத்திலும் தமிழை நன்கு பரவச் செய்தார். அவர் சார்ந்த இயக்கத் தலைவர்களும் பேச்சாளர்களும் தமிழை வளர்த்ததில்–வளர்த்துவருவதில் சிறந்த இடத்தைப் பெறுகின்றனர்.



**புலவர் அன்பு கணபதி**
(மாநிலத் தமிழாசிரியர்
கழகப் பொதுச்
செயலாளர்)

டால் கொடுத்திடாதிங்க! நான் நாளைக்கும் வந்து படிக்கிறேன்."

கட்சியும் தெரியாது, காமாட்சியும் தெரியாது அவளுக்கு. அங்கேயிருக்கிற புத்தகங்கள் தான் அவளுக்குத் தெய்வங்கள், குழந்தைகள். அவைகள் மீது தூசு படாமலும், கிழிந்தால் ஒட்டியும், குலைந்தால் வரிசைகெடாமல் அடுக்கியும் அழகுபார்ப்பதுதான் அவளுடைய பணி. அதை 'வேலை' யாகக் கருதாமல் 'கலை' யாக எண்ணி வாழ்ந்தாள், அவள். அப்படிப்பட்ட இடத்திலிருந்து ஒருபுத்தகம் எடுத்தெறியப்படவேண்டுமாம்! அதுவும், அந்த ஊரில், வேறுயாரும் காட்டாத அளவுக்கு எல்லா நூல்களையும் படிக்கும் பண்பு பெற்றுள்ள குழந்தை பக்கிரிக்குப் பிடித்தமான புத்தகம் எடுத்தெறியப்பட வேண்டுமாம்!!

"ஏன்? என்னகுற்றம் செய்தது அந்தப் புத்தகம்?" மேலிடத்து உத்திரவுப்படி, அவள் அதை அகற்றத்தயாரில்லை. எப்படி முடியும்?

## 3

முனிசிபாலிடியில் ஒரு கமிஷனர். அவர் மீது குற்றங்கள் பல. அதனால்–வந்த புதுமெம்பர்களையும் சேர்மேனையும் 'வலை' க்குள் போட்டுக்கொள்ளவேண்டிய நெருக்கடி அவருக்கு. தன்னுடைய 'விசுவாசத்தை'க்காட்டிக்கொள்ள இதைவிட வேறு சந்தர்ப்பமில்லையென்பதை உணர்ந்தார்! இப்படிப்பட்ட அதிகாரிகளால்தானே நாடே அழிகிறது? முதுகெலும்பில்லாத 'காக்காக்'கள்!!

கம்பீரமாக நுழைந்தார், நூல் நிலையத்திற்குள்.

"உத்தரவு வந்ததா?"

"வந்தது".

"ஏதாவது புத்தகம் இருக்கிறதா?"

"இருக்கிறது!"

"என்ன!? இருக்கிறதா!"

தேள் கொட்டியது போலக் கேட்டார். "ஆமாம், இருக்கிறது!" என்று அமைதியாக சொன்னாள் கிழவி.

"எங்கே, அது?"

"உங்களிடம் தரமுடியாது!"

"என்ன?"

"சப்தம் போடாதீர்கள். இது நூலகம்! படிப்பவர்களுக்கு இடையூறு செய்யக் கூடாது"

"எங்கே அந்தப்புத்தகம்?"

"ஒரு வாசகர் படித்துக் கொண்டிருக்கிறார்"

"யாரும் படிக்கக்கூடாது என்பதற்காகத்தான் கவுன்சில் இந்த முடிவெடுத்தது. தெரியுமா?"

"தெரியும். ஆனால் படிக்கிறவர்களை படிக்கவேண்டாம் என்று தடுப்பதற்காக நான் இங்கே வேலைக்கு இல்லை. இது உங்களுக்குத் தெரியுமா?"

"நான்சென்ஸ்! எய்! யார் இங்கே அந்தப்புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பது?"

ஒரு மூலையில் உட்கார்ந்து இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பக்கிரி எழுந்தான்.

"ஏன் நான்தான்!"

"கொண்டா அதை"

"நீர் யார் கேட்க?"

"நான் கமிஷனர்!"

"நான் 'லைப்ரரியேனிடம்' தான் இதை வாங்கினேன்"

"இந்த லைப்ரரியை நான் என்னசெய்வேன் தெரியுமா?"

சிறுவன் பக்கிரியை மிரட்டுவதை அம்மையாரால் பார்க்க முடியவில்லை. இத்தனைக்காலமும் அவள் இதயத்தில் பதுங்கிக்கிடந்த ஆத்திரமெல்லாம் கொப்பளித்துக் கிளம்புவது போலிருந்தது.

"யூ பூல்! கெட் அவுட்"

—என்று ஓங்காரக் கூச்சலிட்டாள். வெறி கொண்டவளைப் போல அதிகாரியைப்பிடித்துத் தள்ளினாள், வாசல் பாதையில்.

"போ! போ! போ!!"

*

ஒரே ஒரு புத்தகம்!

எடுக்காமல் விடலாமா! பிறகு கவுன்சிலின் கௌரவம் என்ன ஆவது?

புகார் போயிற்று–போலீஸ் லாரி இன்ஸ்பெக்டர்கள் பெரிய கும்பலே வந்தது, நூல் நிலையத்துக்கு.

கிழவிக்கு வியப்பாயிருந்தது! உள்ளே நுழைந்தார்கள் - புத்தகத்தைக் கேட்டார்கள் - மறுத்தாள் - அதட்டினார்கள் - ஓடினாள் - துரத்தினார்கள் - ஓடினாள் - ஓடினாள். அவளைப் பிடித்து போலீஸ் லாரியில் தள்ளினார்கள்.

'கடமையாற்றவந்த அதிகாரியைத் தடுத்தாள்' என்கிற குற்றம் செய்துவிட்டாளாம்!!

போலீஸ் லாரி நகர்ந்தது. நிம்மதியாக அவள் போய்க் கொண்டிருந்தாள்.

கட்சிவளர்க்கும் கண்ணியவான்கள் நூலகத்துக்குள் நுழைந்தனர். துணைக்குத் தொண்டர்கள்வேறு கொண்டு வரப்பட்டனர். நூலகத்தின் நூல்கள் சின்னபின்னமாயின! எங்கு தேடியும் அகப்படவில்லை. நேரம் நீண்டது. பலனில்லை.

இரவுகழிந்தது! இந்தச் செய்தி உலகெங்கும் பரவிற்று. பொதுமக்கள் பெருமூச்சு விட்டார்கள், சோகத்தோடு

"இதற்கா இவர்களுக்கு ஓட்டுப்போட்டோம்" என்று சேர்மெனுக்கு வேண்டியவன் ஒருவன் பணம் சம்பாதித்தவன்! ஆனால் படித்தவனல்ல!! யோசித்தான்...

சேர்மெனையும் அதிகாரிகளையும் திருப்திப்படுத்த இப்படிச் செய்தால் என்ன?

சபாஷ்!

நாளை விஷயம் தெரிந்தால்! ஆகா!!

கிளம்பினான். ஊரடங்கிக் கிடந்தது. நேரே நூலகத்துக்குப் போனான்,

ஒரு டின் எண்ணெய்! ஒரு தீக்குச்சி!!

எப்படியும் இரண்டு "கான்டிராக்ட் கிடைக்கும்" என்று எண்ணிப் பெருமிதம் கொண்டான் அவன்.

பற்றி எரிந்தது பல் நூல் கூடம்! சாம்பல்! சாம்பல்!

பக்கிரி—எதிர்கால உலகத்தைச் சேர்ந்தவன் - மறுநாள் வந்தான்.

சாம்பல் மேடு கிடந்தது!

அவன் கண்களிலிருந்து 'பொல பொல' வென்று கண்ணீர் வந்தது!!

சிறையிலிருந்து விடுதலையாகி பைத்தியம் பிடித்தவள் போல் வந்து கொண்டிருந்தாள் வாழ்நாளையெல்லாம் அந்நூலகத்துக்கு அளித்த அக்கிழவி!



# கவிஞரைப்பற்றி-கவிஞர்



ஆங்கிலக்கவியுலகில் இயற்கை வர்ணனைக்குப் பெயர்பெற்ற கவிஞன் வேர்ட்ஸ் வெர்த். அவன் அரசியல் வாழ்வின் துவக்கத்தில் முற்போக்குக் கட்சியில் இருந்தான். பின்னர் ஆட்சி பீடத்திலிருந்த பிற்போக்குக் கட்சியில் சேர்ந்துவிட்டான். அவனைப்பற்றி அவனது மாணவர் படத்தில் தாடியுடன் இருக்கும் ராபர்ட் பிரவுனிங் என்ற கவிஞர் எழுதிய கவிதையின் சிலவரிகள் வருமாறு:

கைப்பிடியளவேயுள்ள வெள்ளிக்காசுக்காக நம்மை விட்டு அவன் பிரிந்தான்!

அவனுடைய மேலங்கியில் குத்தப்படும் இலச்சினைக்காக நம்மைவிட்டு அவன் பிரிந்தான்!

நம்மால் கொடுக்க இயலாத செல்வத்திற்காக நாம்கொடுக்கக் கூடியவற்றை எல்லாம் இழந்துவிட்டுச்சென்றான்!

அவர்களால் அவனுக்கு தங்கத்தைக் கொடுக்கமுடியும்; என்றாலும் அவனுக்கு வெள்ளியையே தந்தார்கள்.

அவ்வளவுதான் அவனுக்கு அவர்கள் ஒதுக்கியது!

ஆனால், நாமோ நம்பியிருந்த செப்புக்காசுகளையெல்லாம் அவனது பணிக்காகத்தந்தோம்! நம்மோடிருக்கும் போது அவனது ஆடைகள் அழுக்கேறி 'மர' வண்ணத்தில் இருந்தது. இதுபற்றி அவன் இதயம் பெருமைப்பட்டது!

மிக அதிகமாக அவனை நேசித்தோம்; அவனைப்பின் பற்றினோம்; பெருமைப்படுத்தினோம்! அவனது கனிவான அற்புதமான விழிகளில் குடியிப்பதை நாம்விரும்பினோம்.

அவனது மாபெரும் மொழி வளத்தை பயின்று கொள்ளத் துடித்தோம்! வாழ்வதற்கும் சாவதற்கும் அவனை ஒரு முன் மாதிரியாக வைத்துக் கொண்டோம்!

எனினும் இப்போது அவன் நம்மிடம் இல்லை. ஆனால்—ஷேக்ஸ்பியர் நம்மோடு இருக்கிறார். மில்டன் நம்மோடு இருக்கிறார். கவிஞர்கள் பர்ன்ஸ்-ஷெல்லி நம்முடன் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கல்லறைகளிலிருந்து நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இவன் மட்டுமே-சுதந்திர மனிதர்களின் முன்னணியிலிருந்து பிரிந்து அடிமைகளின் பின்னால் போய்ச்சேர்ந்துவிட்டான்!

செழுமையுடன் நம் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். அவர் பார்வையில் இல்லாது இருந்த போதும் கூட!

பாடல்கள் நம்மை எழுச்சி கொள்ளச் செய்கின்றன. ஆனால் அவனது யாழிலிருந்து பிறந்த பாடல்களால் அல்ல!

அவனது பெயரை எடுத்து விடுங்கள்! ஒரு உயிரை இழந்தோம் என்று குறித்துக் கொள்ளுங்கள்.

ஒரு முயற்சி தோற்றது என்று வைத்துக் கொள்ளுங்கள்; ஒரு நடைபாதையில் நடக்கவில்லை—என்று வைத்துக் கொள்ளுங்கள்!

சாத்தானுக்கு ஒரு வெற்றியும், தேவதைகளுக்கு ஒரு தோல்வியும் கிடைத்தது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

(நாம் மிகப் பிரமாதமாக முன்னேறுகிறபோது) அவன் புதிய பாடத்தைப் பெறட்டும்! அது வரை அவன் பொறுத்திருக்கட்டும்!

# சங்கமம்

புது வெள்ளத்தைப்போல் அடித்துப் புரண்டு ஓடி வந்த அந்த ஜீப் கார் திருப்பரங்குன்றம் அகதிகள் முகாமுக்குள் நுழைந்தது. நடந்து முடிந்த சந்தைத் திடலில் சிதறிக் கிடக்கும் நிலக்கடலைக் கூடுகளைப் போல் அந்த முகாம் சிறுசிறு கூடாரங்களாக அமைக்கப் பட்டிருந்த முகாமைக் கண்ட்ரோலர் உலகமுத்து கண்ணோட்டம் செலுத்தினார்.

ஜீப் காரின் உறுமலைக் கேட்ட அகதிகள் அனைவரும் குற்றவாளிகளைப் போல் எழுந்து நின்றார்கள். அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள், பாவம்! ஏழ்மையும் நிராதரவும் மலைபோன்ற இருதயத்தைக்கூட நிலை குலையச் செய்து விடுகிறது. திடகாத்திரமான உடலுள்ளவர்கள், வாளிப்பான இளைஞர்கள், அழகிய இளம் பெண்கள், பாடத் தெரிந்தவர்கள், ஊனமில்லாதவர்கள்:—இத்தனைக்கும் மேலாக தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் கேவலம், தமிழ் நாட்டிலேயே



அகதிகள் என்று முடி சூட்டப் பெற்று விட்டார்களே! கண்ட்ரோலர் உலகமுத்துக்கு இப்படி ஒரு அனுதாபம் ஏற்பட்டிராவிட்டால் அவர் கண்கள் கலங்கியிருக்குமா?

2

உலகமுத்து காரை விட்டிறங்கி டவாலி போட்ட சேவகர்கள் அனைவரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். முதல் நாள் காலை புதிதாக வந்திறங்கிய இரண்டாயிரம் அகதிகளைப் பார்வையிடுவதற்காகத்தான் உலகமுத்து அங்கே வந்திருந்தார். அத்துடன் அவனது அன்னை கூறிய அடையாளமுள்ள மனிதரையும் அவன் ஆவலோடு தேடினான்!

உலகமுத்து படித்துப் பட்டம் பெற்ற சுயசிந்தனையாளர். தமிழர் வாழ்வு படிப்படியாகத் தேய்ந்து போனதை எதிரே தோன்றிய திருப்பரங்குன்றம் மலையும் அருகே இருக்கும் ஓலைக் குடிசையும் கால வெள்ளத்தை அவருக்கு உருவகப்படுத்திக் காண்பித்தன.

நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னாலேயே இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பர்மாவுக்குப் பிழைக்கப் போனவர்கள் அகதிகளாக வெறுங் கையோடு திருப்பி அனுப்பப் பட்டிருந்தார்கள். அவர்கள் கையோடு கொண்டு வந்தது, சொட்டை விழுந்த எனமல் தட்டுகளும், தேய்ந்து போன ரப்பர் செருப்புகளும் தான். ஊருக்கு ஊர் நாடோடிகளாகத் திரியும் நரிக்குறவர் குடிசைகளில் தென்படும் சாமான்கள்கூட பர்மா தமிழர் அகதிகளின் குடிசைகளில் காணப் படவில்லை. பிள்ளை குட்டிகளைப் பெற்று வைத்துக்கொண்டு பேந்தப் பேந்த விழிக்கும் பெற்றோர்களின் கண்களில் ஏக்கம் நிறைந்திருந்தது. பசியையும் பட்டினியையும் மீறிக்கொண்டு பருவம் தழைத்திருந்த இளம் பெண்களின் திருமுகங்களில் எதிர் காலத்தைப் பற்றிய கனவுகள் நிழலாடிக் கொண்டிருந்தன. சிறு குழந்தைகள் ஏழெட்டு வயதுக்குட்பட்டவர்கள் மட்டும் உற்சாகமாக இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். உலக



முத்து சர்க்கார் அதிகாரி அவர் அணிந்திருந்த காக்கிச் சட்டை அவருடைய சுதந்தரமான எண்ணங்களையும் விருப்பங்களையும் அழுத்திப்பிடித்து குரல் வளையை நெறித்துக்கொண்டிருந்தது. விடை பெற போகும் சமயத்தில் அவர்களுக்கெல்லாம் அவர் ஆறுதல் கூறிவிட்டு காருக்குப் போனார். அப்போது ஒரு இளம்பெண் முஸ்லீம் பெண் பர்தாவுடன் காரை நோக்கி விரைந்து வந்தாள். இதை அறிந்த உலகமுத்து ஒருகாலைக் காரில்வைத்தபடி நின்றார்.

"என்ன வேண்டும் உங்களுக்கு?" அன்புடன் கேட்டார்.

அவள் அழுதாள். முகம்மூடியிருந்தது. அரை குறையாகத் தெரிந்த முகத்தையும் அவள் நன்றாக இறுக மூடிக்கொண்டாள்.

"சும்மா என்னிடம் சொல்லுங்கள். நான் உதவிசெய்வதற்காகத்தான் இருக்கிறேன்' என்றார் உலகமுத்து.

"நான் இங்கு தனியாக இருக்கிறேன். என் மாமா நோய்வாய்ப்பட்டு பெரிய ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருக்கிறார். இந்த முகாமுக்குள்ளே பல போக்கிரிகள் இருக்கிறார்கள். அவர்கள் என்னைக் கெடுக்கப்பார்க்கிறார்கள். பொழுது சாய்ந்ததும் அவர்கள் என்குடிசையில் கல்லெறிகிறார்கள். விழுமன் என்று ஒரு கொடியவன் இங்கே இருக்கிறான். அவன் நான் தனிமையில் இருக்கும்போது என்னைத் தொல்லைப்படுத்துகிறான்!" என்று அந்த யுவதி தழு தழுக்கக் கூறினாள். அவள்பெயர் பாத்திமா.

உலகமுத்துவின் மனம் கரைந்தது. பெண்ணின் மனம் அறியப் பெண்தானா வேண்டும்? மலரின் மணத்தை நொண்டிகள், செவிடுகள், குருடுகள் உணர்வதில்லையா?

"உங்களுக்கு இங்கே நம்பிக்கையானவர்கள் இல்லையா?"

"யாரை நம்புவது' இருதயம் கண்ணுக்குத்தெரியாத இடத்தில் இருப்பதால் யாருடைய வார்த்தைகளையும் நம்பி வேறு கூடாரத்திற்குப் போக எனக்குத் துணிவில்லை!" பாத்திமா உணர்ந்து இந்த உண்மையைச் சொன்னாள்.

"அது வரை நீஒரு பாதுகாப்பான இடத்தில் இருக்க வேண்டும்; அவ்வளவுதானே! நாளைக்கே ஏற்பாடு செய்கிறேன்." என்று கூறிவிட்டு காரில் ஏறினார் உலகமுத்து.

* * *

முனிசிபல் கமிஷனராக இருந்த உலகமுத்து திருப்பரங்குன்றம் அகதி முகாமின் கண்ட்ரோலராக நியமிக்கப்பட்டு அவனும் அவளது அன்னையும் மதுரைக்கு வந்ததும் நடந்தது இது!

பர்மா தமிழர் அகதிகளைப் பற்றி உலகமுத்துவும் அவனது அன்னை ரெங்கம்மாளும் அக்கறையோடு விசாரித்து வந்தார்கள். ரேடியோச் செய்திகளைக் கூர்ந்து கவனித்தார்கள்,

அன்று ரெங்கம்மாள் அடுப்படியில் சமையலைக் கவனித்துக்கொண்டிருந்தாள். முகப்பில் ரேடியோ ஒலித்துக் கொண்டிருந்தது.

"ஞாயிறு காலை இரண்டாயிரம் பர்மா தமிழர் அகதிகள் சென்னைத் துறைமுகத்தில் வந்து இறங்கினார்கள். அவர்கள் அனைவரும் பல்வேறு முகாம்களுக்கு பிரித்து அனுப்பப்பட்டுள்ளார்கள். இந்தச் செய்தி அடுப்படியில் இருந்த ரெங்கம்மாளின் உள்ளத்தை உறுத்தியது. கையில் இருந்த கரண்டியோடு மெய்ம்மறந்து முகப்புக்கு வுந்து விட்டாள். அவளுடைய நினைவுகள் பரபரவென்று அவளைப் பின்னோக்கி இழுத்துச் சென்றன. ஐம்பது வயது நிறைந்த ரெங்கம்

முரசொலி பொங்கல் மலர்'65

மாள் இப்போது முப்பது வயதுள்ள நடுத்தரப் பெண்மணியாக நின்று நினைத்துப் பார்க்கிறாள்.

"போகும்போதேஅவர்என்னையும் அழைத்துப் போயிருந்தால் நான் இன்று கண்கலங்கத் தேவையில்லை. ஆண்களின் இளமைப் பருவம் துடிப்புள்ள அரபிக் குதிரை போன்றது. அவர்களுக்கு மனைவிகள்தான் கண் பட்டை போட்டு நேர்வழிக்குக் கொண்டு வர வேண்டும், அதைச் செய்ய நான் தவறிவிட்டேன்.

"இருபது ஆண்டுகட்கு முன்பு அவர் இரங்கோனுக்குப் போனார், அவர் போகும்பொழுது உலகமுத்துவுக்கு எட்டு வயது. அப்போது மூன்றாம் வகுப்புப் படித்தான். இப்போது அவன் பி. ஏ படித்து முனிசிபல் கமிஷனராக இருக்கிறான். அவர் இரங்கோனுக்குப்போய் மூன்றாண்டுகள் வரை கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். இடையிடையே பணமும் வரும். போகும்போது அவர் என்னிடம் விட்டுச் சென்ற இரண்டு எருமை மாடுகளும், ஒரு ஏக்கர் புஞ்சையும்தான் எங்களுக்குப் பூர்வீகச் சொத்து. நாங்கள் குடியிருந்த இதம்பாடல் கிராமத்தில் ஐந்தாம் வகுப்பிற்குமேல் படிக்க வசதியில்லை. பக்கத்தில் உள்ள முதுகுளத்தூர் தான் எங்களுக்குப் பெரிய நகரம். உலகமுத்து ஐந்தாவதுக்கு மேல் படிப்பதென்றால் முதுகுளத்தூருக்குத்தான் போக வேண்டும். இதப்பாடலில் இருந்து முதுகுளத்தூருக்கு தினசரி போய்வர பத்துகல் தொலைவு. தினசரி அவனால் நடந்துபோய் வர முடியாது: அவன் சிறுவன். மேலே படிப்பதென்றால் முதுகுளத்தூரிலேயே தங்கித்தான் படிக்க வேண்டும் இது பற்றி என்னைக் காட்டிலும் என் மகனுக்குத்தான் அதிகக் கவலை. குடும்பத்தைப் பாது

சேர்க்க வேண்டுமென்ற பொறுப்பு பிறர் கற்றுக் கொடுத்துத்தான் வருகிறது என்பது தவறு. சில பேருக்குத் தானாக வருகிறது. சிலருக்குத் தாயின் வளர்ப்பு முறை ஊட்டுகிறது. என் மகன் உலகமுத்துவுக்கு நான் தெருச் சுவர்களில் சாணம் தட்டி விற்ற கொடுமையும் கூலிக்கு வேலை செய்யப்போன வேதனையும்தான் அவனைச் சிந்திக்க வைத்து விட்டன. அவன் படித்த படிப்பை வைத்துத் தன் தந்தைக்குக் கடிதம் எழுதி விட்டான். மூன்று மாதங்களுக்குப் பிறகு அவனது கடிதத்திற்குப் பதில் வந்தது அவனுக்கல்ல; ஊர் நாட்டாண்மைக்காரருக்கு. கடிதமா அது? பழுக்கக்காய்ச்சிய இரும்புக் கழியின் சூடு! ''நான் இப்பொழுது மோல்மேனில் ஒரு செட்டியார் வீட்டில் கணக்கப்பிள்ளையாக இருக்கிறேன். இனிமேல் இந்தியாவுக்குத் திரும்பி வருவதற்கு வாய்ப்பில்லை. இத்துடன் ஐநூறு ரூபாய் இணைத்து வைத்திருக்கிறேன். இதை ரெங்கம்மாளிடம் கொடுத்துவிட வேண்டியது. இனிமேல் அவள் என்னை எதிர்பார்த்துப் பிரயோசனமில்லை. இங்கே எனக்கு ஒரு குடும்பம் இருக்கிறது.'' இதுதான் அவருடைய கடைசிக் கடிதம். நானும் என் மகனும் திக்குத் தெரியாதவர்களைப் போல தினம் தினம் தவித்தோம்.

"இன்னொரு கொடுமை! இதுவரை யாருக்கும் தெரியாத கொடுமை. உலகமுத்து படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். முதுகுளத்தூரில் தங்கிப் படிக்கவோ வசதியில்லை. அங்கே அரிசன மாணவர்களுக்குத்தான் இலவச உணவு விடுதி இருப்பதாகச் சொன்னார்கள். எங்கள் ஊர் நாட்டாண்மைக்காரர் உத்தமர். எங்கள் குடும்பத்தோடு அவருக்கு இருந்த நீண்டநாள் உறவு எப்படியும் உலக முத்துவைப் படிக்க வைக்க வேண்டுமெனத் தூண்டியது. நல்ல காரியத்துக்குப் பொய் சொல்லலாம் என்று சொல்லுவார்கள் அதை அவர் செய்தார். உலகமுத்து ஒரு அரிசன் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதற்கான பொய்க் குறிப்புகளைத் தயார் செய்து என் மகனை முதுகுளத்தூர் அரிசன மாணவர்களின் இலவச உணவு விடுதியில் தங்கி படிக்க வைத்தார். எப்படியோ அவன் படித்துக் கொண்டான். இன்று அவன் ஒரு பட்டதாரி.

உலகமுத்து படித்துப் பட்டம் பெற்ற பிறகு கூட அவருக்குக் கடிதம் எழுதிப்பார்த்தான். அதற்கும் பதில் இல்லை. புகைப்படம் அனுப்பச் சொன்னான். அதற்கும் பலன் கிடைக்கவில்லை......'' இப்படி எண்ணி ரங்கம்மாள் கண்ணீர் வடித்தபோது உலகமுத்து நுழைந்தான்.

''என்னப்பா! ஏதாவது..!;'

''ஊஹூம்! நீங்கள் சொன்ன அடையாளத்திலே ஆளே அங்கே இல்லை. எனக்குத் துளியும் நம்பிக்கை இல்லை. இன்னொரு நாளைக்கு உங்களையே அங்கு அழைத்துப் போய் காண்பிக்கிறேன். அப்பாவின் உருவத்தை நீங்களே

## தி.மு. கழகத்தால் தமிழ் வளர்ந்ததா?



கேள்வி: எழுத்துலகில் தி.மு. கழகத்தால் தமிழ் வளர்ந்துள்ளதா?

பதில்: மொழிநடையும் மொழியுணர்ச்சியும் தி.மு. கழகத்தால் தமிழ் நாட்டில் வளர்ந்துள்ளன.

புதுச் சிந்தனையும் ஆழமும் புதுக் கற்பனையும் தி. மு. கழகத்தால் மேலும் வளர்க்கப்பட வேண்டும்.

—அகிலன்

(சாகித்திய அகாடமி பரிசு பெற்ற நாவலாசிரியர்)

பார்த்துக் கொள்ளுங்கள்; அப்போதுதான் உங்களுக்கும் மனச்சாந்தி ஏற்படும்.'' என்றார் உலகமுத்து,

ரெங்கம்மாள் உக்கிப் போனாள். இருந்த நம்பிக்கையும் அவளை விட்டு நழுவிக் கொண்டிருந்தது.

* * *

இது ஜெனரல் ஆஸ்பத்திரி! மூன்றாவது வார்டு நர்ஸ் உள்ளே நுழைந்தாள். அங்கே படுக்கையிலிருந்த நோயாயிருந்த நோயாளியைக் காணவில்லை.

"மீரான் பாயைக் காணோம். மீரான் பாயைக் காணோம்'' என்று நர்ஸ் கதறினாள்.

அகதி மீரான்பாய் ஓடிப் போய் விட்டாராம். வார்டு முழுதும் இந்த ஓலம் பரவியது.

டாக்டர் வந்து அந்த அறையைப் பரிசோதித்தார். மீரான் பாயின் மூட்டை முடிச்சுகள் எதுவும் அங்கே இல்லை. அன்று காலை வந்த தினசரிப் பத்திரிகை மட்டும் விரிந்து கிடந்தது. டாக்டர் பத்திரிகையை விரித்துப் பார்த்தார். அதில் ஒரு செய்தி :—

"பர்மா அகதி மீரான்பாய் ஆஸ்பத்திரியில் இருக்கும் போது அவரது மருமகள் பாத்திமாவை அவரது முகாமிலிருந்து அகதி முகாம் அதிகாரியே கடத்திகொண்டு போய் விட்டார்'' என்று விரிவாகப் பிரசுரமாயிருந்தது. உடனே டாக்டர் நோயாளி - காணமற் போன செய்தியை அகதி முகாமுக்குத் தெரியப்படுத்தினார்.

செய்தி கிடைத்ததும் உலகுமுத்து முகாமுக்குப் பறந்தார். பாத்திமாவின் குடிசை மூடிக் கிடந்தது. உலகுமுத்துவின் ஜீப்பைப் பார்த்ததும் வழக்கம்போல் அகதிகள் அனைவரும் ஓடிவந்தார்கள். ஆனால் வழக்கம்போல் அவர்கள் இருதய சுத்தியுடன் பேசவில்லை. கபடமாகப் பேசுவதுபோல் தெரிந்தது. உலகமுத்து இதை உணராமல் இல்லை. தவறான பத்திரிகைச் செய்தி தான் அவர்களது மனமாற்றத்திற்கே காரணமாக இருக்கக் கூடும் என்பதை அவரால் உணர முடிந்தது.

* * *

இரக்கம் கொடியது! சமுதாயத்தில் இழிந்த பண்புகள் இருக்கும் வரை இரக்கம்கொடியது தான். யாரையும் கண்களை மூடிக்கொண்டு சந்தேகப்படும் போலீஸ்காரன் புத்தி எல்லோருக்கும் இருந்தால் உலகத்தில் எந்தக்காரியமும் நடைபெறாது.

* * *

இரவு! உலகமுத்து, அவர் மீது அவதூறாக வெளியான பத்திரிகைகளுக்கு உண்மையைவிளக்கி மறுப்புரை எழுதி வைத்துவிட்டு, சர்க்காருக்கும் தகவல் கொடுத்தார். அன்று இரவு இரண்டு மணிக்குத் தான் அவர் படுக்கைக்குப் போனார். வீட்டு முகப்பிலிருந்த மகிழமரங்களில் பூத்து நின்ற பூக்கள் அவருடைய மதுரமான இளமை எண்ணங்களுக்குத் தூபமிட்டன. மாடியில் நன்றாக அயர்ந்து தூங்கி விட்டார். அதிகாலையில் அவரது அன்னை ரங்கம்மாள் அலறி அடித்துக் கொண்டு மாடிக்கு ஓடிவந்து உலக முத்துவின் அறையைத்தட்டி அவரை எழுப்பினாள். அவளால் பேச முடியவில்லை. மூச்சு நின்று விடும்போலிருந்தது. அவள் உலகமுத்துவைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கொல்லைப் பக்கத்திற்குப் போனாள். அங்கே... அங்கே விழுமன் கொலையுண்டு கிடந்தான். கத்திக்குத்து! ரத்தம் பெருக்கெடுத்து ஓடிக் கிடந்தது. உலகமுத்து போலீசுக்கு டெலிபோன் செய்தார். போலீஸ் வந்தது. முதல்நாள் பத்திரிகைச் செய்திக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்பு இருக்குமோ என்று கூட போலீசார் கருதினார்கள். கர்தலியைக் கடத்திக் கொண்டு வந்த அதிகாரியை ஒழித்துக் கட்டவந்த விழுமனை அதிகாரி தீர்த்து விட்டார் இது போலீசாரின் யூகம்.

"அகதி முகாம் அதிகாரி வீட்டில் கொலை!'' வாலிபர் குத்தப்பட்டுக் கிடந்தார்.''

"கொலை செய்யப்பட்ட வாலிபர் விழுமன், ஏற்கனவே அதிகாரியால் கடத்திச் செல்லப்பட்ட அழகி பாத்திமாவின் காதலன்'' என்று தடித்த எழுத்துக்களில் மறுநாள் பத்திரிகைகள் செய்திகளைப் பரப்பி விட்டன. போலீசாருக்குத் தலைவலி தொடங்கியது.

முதன் முறையாகப் பாத்திமா உலகமுத்துவைச் சந்தித்தது, அகதி முகாமிலிருந்து பாத்திமாவை உலகமுத்து அழைத்துக் கொண்டு வந்த போதுதான் அகதி முகாமில் விழுமனுக்கும் பாத்திமாவுக்கும் நடந்த சில்லறைத் தகராறுகள் இவைகளையெல்லாம் வைத்து போலீசாருக்கு உலகமுத்துவின் மீது சந்தேகம் எழுந்தது. சந்தேகப்பட்டு விட்டால் போலீசார் விடுவார்களா? உலக முத்துவைக் கைது செய்தார்கள்.

மூன்றாம் நாள் பத்திரிகையில் உலகமுத்து கைதான செய்தி பிரபலப்படுத்தப் பட்டது. அவருடைய படமும் பூர்வீக சரித்திரமும் அதே பத்திரிகையில் இடம் பிடித்துக் கொண்டிருந்தன.

ஒரு பள்ளிவாசலின் பளிங்குத் தரையில் படுத்துப் புரண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த மீரானுக்கு இந்தப் பத்திரிகை கிடைத்தது. அவரது நெற்றி பட்டாம் பூச்சியைப்போல் விரிந்து விரிந்து சுருங்கியது. 'அகதி முகாம் கண்ட்ரோலர் உலகமுத்துவின் தந்தை மீனாட்சிசுந்தரம் பர்மாவுக்குப் போய் இருபது வருடங்களாகி



விட்டன. இன்னும் திரும்பி வரவில்லை. உலகமுத்து உழைத்துப் படித்து முன்னுக்கு வந்த இளைஞர்'—இந்தச் செய்தியை மீரான் திரும்பத்திரும்பப் படித்தார். வர வர அவரது குரல் வலிவடைந்தது. சத்தம்போட்டுப் படித்தார். 'ஐயயோ உலகமுத்து! நீ என் மகனா?" என்று கதறினார். அவரது கால்கள் துடித்தன. தெருவிலே வெறிகொண்டவனைப் போல் ஓடினார்.

நீதிபதி அவரது உன்னதமான இருக்கையில் உட்கார்ந்து விட்டார். கண்ட்ரோலர் உலகமுத்து கூண்டில் ஏறி நின்றார். தாடி மீசையோடு கூடிய மீரான் நீதிமன்றத்திற்குள் புகுந்தார். தடார் என்று மன்றத்தில் விழுந்தார். "கொலையாளி நான்தான்!" என்று கூவினார். பார்ப்பவர்களுக்கு நாடகம்போல் தெரிந்தாலும் நீதிபதி உணர்வு இழந்து போகாமல் பெரியவரிடம் விவரம் கேட்டார்.

"என் பெயர்தான் மீனாட்சி சுந்தரம். நான் பர்மாவுக்குப் போய் முஸ்லிம் ஆனேன். ஆயிஷா என்ற முஸ்லிம் பெண்ணை மணந்து கொண்டேன். என் பெயர் மீரான் ஆகியது. ஆயிஷா ஒரு மகனைப்பெற்றாள். அவன்பெயர் காதர் மைதீன். அவனுக்குப் பாத்திமா என்ற பெண்ணை நான்தான் மணமுடித்து வைத்தேன். ஆனால், என் மகனுக்கு மணமான மறு ஆண்டே என் மனைவி ஆயிஷா இறந்து விட்டாள்."

"பிறகு நான், என் மகன் காதர் மைதீன், பாத்திமா மூவரும்தான் இந்தியாவுக்கு வந்தோம். வழியில் கப்பலில் நோய்வாய்ப்பட்டு என் மகன் இறந்து விட்டான்.

இந்தியாவுக்குள் நுழைந்ததும் எனக்கும் காய்ச்சல் கண்டு விட்டது. சாகும்போதாவது தமிழ் நாட்டில் சாவோம்—அதுவும் நமது பகுதியில் சாவோம் என்று தான் திருப்பரங்குன்றம் முகாமை நான் தேர்ந்தெடுத்தேன்.

"நான் பெரிய ஆஸ்பத்திரியில் இருந்தபோது பத்திரிகையில், என் மருமகளை முகாம் அதிகாரியே கடத்திக் கொண்டு போனதாகச் செய்தி படித்தேன். என் உதிரம் கொதித்தது. அன்றிரவுக்குள் அதிகாரியின் வீட்டைக் கண்டுபிடித்து அவரைத் தீர்த்துக் கட்டிவிட நினைத்தேன். அதன்படி அவரது இல்லத்திற்குப் போய் இரவு இரண்டு மணிக்குப் பிறகு கொல்லைச் சுவர் தாண்டினேன். எதிரே முகமூடியுடன் ஒருவன் வந்தான்.

உள்ளே ஏதோ சதி நடக்கிறது. அதிகாரிதான் முகமூடியுடன் வருகிறார் என்று எண்ணி குத்திவிட்டு ஓடி விட்டேன். மறுநாள் பத்திரிகை பார்த்த பிறகுதான் குத்தப்பட்டது விபூமன் என்று எனக்குத் தெரிந்தது" என்று மீரான் துயரத்துடன் சொன்னார்.

மீரான் சொல்லி முடிப்பதற்கும் பெண்கள் அரவணைப்பு நிலையத்திலிருந்து வந்த பாத்திமா நீதிமன்றத்திற்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"பாத்திமா!" என்று உணர்ச்சி பொங்கக்கத்தினார் மீரான்.

"உன்னைச் சேர்ப்பிக்க வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ப்பித்து விட்டேன். அதோ கூண்டில் நிற்பது உன் மச்சான்!" என்று மீண்டும் கூவினார் மீரான்.

கொலைக்கு அடிப்படை—ஆவேசமோ, ஆள் மருட்டமோ, சதியோ, உணர்ச்சியோ எதுவாக இருக்கட்டும். ஒரு கொலை நடந்து விட்டது. கொலை! அதற்கு மன்னிப்பு உண்டா? சட்டம், பாசத்திற்கோ, குடும்ப விவகாரங்களுக்கோ கட்டுப்பட்டதா?

கதையைச் சொல்லி விட்டு கல்லுப்போல் நின்ற மீரான் நீதிபதியிடம் எந்த ஆறுதலையும் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய மகன் உலகமுத்துவிடம் ஒரு அனுமதியைக்கோரி நின்றார்—பாத்திமாவை உலகமுத்து ஏற்றுக் கொள்ள வேண்டும்! உலகமுத்து பாத்திமாவை ஏற்றுக் கொண்டால் அதற்குப் பெயர்தான் சங்கமம்—மகா சங்கமம்! யமுனையும், கங்கையும் கலப்பதெல்லாம் இந்த மகா சங்கமத்தின் துளியிலை பெறுமா?



# தி. மு. கழகத்தால் தமிழ் வளர்ந்ததா?

உழவனல் நிலம் வளர்வது போல நிலத்தாலும் உழவன் பயனடைகிருன. எந்தவொரு புதுவிதமான இலடசியத்தையும் அந்த இலடசியத்தைக் கைக் கொளள வேண்டிய மக்கள் பேசும் மொழியைக் கொண்டுதான் இலட்சிய விளக்கம் செய்ய முடியும். இருபதாம் நூற்ருண்டின் துவக்கத்திலே--இந்தியத் துணைக கண்டத்தில் ஏற்கனவே வளர்ச்சி பெறறிருந்த மொழகள் யாவும்-ஒரு புது மலர்ச்சியை-ஒரு விரைவான நடையை மேறகொள்ள வேணடிய அவசியத்தைக் காலம் உணடாக்கியது.

அந்த மறு மலர்ச்சியிலே நம்முடைய தாய் மொழியான தமிழும் மற்ற மொழகளுக்கு முன்னுல நின்று புதுப் பொலிவுடன் விளங்கியது. இநதப் பொலிவுககு வழிகாடடியாக நமக்கு விளங்கியவர் மகாகவி பாரதி என்பதை நாம ஒப்புக் கொள்ள வேண்டும். ஒரு மாபெரும இலட்சியப் போராட்டத்திலே ஈடுபட்டிருநத இந்தியாவின் மக்கள் தங்கள் கருத்தைச் சொல்லும் கருவியான மொழியையும் தங்களைத் தேவைக்கு ஏற்றபடி எளிமையாக்கிக் கொணடனர். அதே போல சமுதாயத்தின உள்ளத்து உணர்ச்சிகளை கோடானு கோடி எழுத்தறிவல்லாத மக்களுக்குப புரியும்படியாக எடுத்துச சொல்லும் கடமை சமுதாயச சீர்திருததப் பணியில தன்னுடைய உயிர் மூச்சாகக் கொணட திராவிட முன்னேற்றக் கழகததிற்கும் ஏற்பட்டது.

பல சிறந்த தமிழறிஞர்களைக் கொண்ட தி. மு. க. வால் 'மக்கள் தமிழ்' வளர்வது வியப்பல்ல. சிறபபாக நாடகத் தமிழும், மேடைத் தமிழும் தி. மு. க. வில் இருக்கும் தமிழறிஞர்களாலும் தமிழக கலைஞாகளாலும், புலவாகளாலும் வளாச்சி பெற்றிருக்கிறது.

மக்களோடு தொடர்பு கொள்ளும் ஒரு இயக்கத்திற்கு மொழியும் கலையும் எவ்வளவு சக்தி வாய்நத கருவிகள் எனபதை தி. மு. க. வின் வளர்ச்சியிலிருந்து உணர வேணடும்.

கவிஞர் எஸ். டி. சுந்தரம்
எம். எல். சி.

# இரு மந்திகள்

புலவர் அறிவுடை நம்பி

பழந்தமிழர் இயற்கையைச் சுவையாய்க் காட்டும் ஒவ்வொரு உயிரையும் நுணுகி அறிவர். உணர்ந்த வழிபாடுவர். சங்க காலச் சான்றோர்களின் செய்யுட்கள் யாவும் இயற்கையை இணைத்துக் கட்டிய மலர்க்கதம்பம்.

'மதுரை மருதனிளநாகனார்' இயற்கைக் காட்சி ஒன்றைக் கண்டார். அது பெண்குரங்கை பற்றியது. குரங்குகள் சைவ உணவையே புசிப்பன. ஒரு நாள் மாலை, மலைவழியாக நடந்து கொண்டிருந்தார். பலா மரப்பக்கம், புலால் நாற்றம் தாங்கவில்லை. அங்கு தும்மும் ஓசை கேட்டது. ஓசை வந்த இடத்தை நோக்கினார். 'மந்தி ஒன்று தும்மியது' என அறிந்தார். புலால் நாற்றத்தின் நெடி தாங்காது தும்மியது மந்தி என்பதை உணர்ந்தார். அப்படியே மனதில் நின்றது இக்காட்சி. வாழ்க்கையோடு பிணைத்துப் பாடல் எழுதும் போது இக்காட்சி அப்படியே அவருக்குப் பயன் பட்டது.

பெண்ணையும் ஆணையும் சேர்த்தது இயற்கை. சந்தனச்சிலை! குளிர்மலர்ச் சோலையில் தன் உள்ளங்கவர்ந்தாளிடம் முல்லை மலர்ச்சரம்போல் வெண்ணகை காட்டிச், செவ்விதழ் விரித்து 'அத்தான்' என்றாள். அவன் 'அன்பே' என்றான். இருவரும் ஒருவராயினர். காதலாட்சியில் அவன் மன்னவனான்; மங்கையோ மணிமுடியாளாள்.' கொஞ்சி, மொழி குழறிக் கூடிக்கிடந்தார்கள். பலகாலம் பறந்தது. தினமும் வந்தான்; தேன் உண்டான் கற்பு மணம் காண முயன்றானில்லை. 'உலைவாயை மூடலாம் ஊர்வாயை மூடுவது யார்? எப்படியோ செய்தி வெளியில் வந்தது. அன்னையின் செவிகளுக்கும் எட்டின. தோழியோடு தினைப்புனம் செல்லும் தையல் 'மன்னவன் யார் மீதேனும் மையல் கொண்டாளோ? எனும் ஐயம் எழ கோபப் பார்வையை வீசினள். அன்னை நோக்கிடும் நோக்குக்குள், நூறு கோடி ஐயம் உண்டென்பதை அறிந்தாள் தோழி! தலைவியோடு கலந்து தோழி ஒரு முடிவுக்கு வந்தாள்.

அன்றும் வந்தான் அழகன். நிலத்தில் ஒளிவீச்சு நிகழ்த்திய பற்கள் ஒளிகாட்டவில்லை. உலவு மீன்கள் போல் உலவிய நீல விழிகள் நிலைத்து நின்றன. அருவிபோல் நீரைக் கொட்டியன. காதலன் திடுக்கிட்டான், ஏன் என்றான்? ஏந்திழையாள் தேம்பினாள். தோழி குறுக்கிட்டாள்.

நுட்பமாகப் பேசுகின்றாள். "தலைவியின் கண்கள் நீலமலர் போல் அழகியவை. அக்கண்கள் இப்போது அழகிழந்தன. நுண்ணிதான கொடி பீர்க்கை அதன் மலர்ந்த மலர்கள் மறுநாள் உதிரும். அப்பழம் பூவின் நிறத்தைப் போல் மங்கையின் கண்கள் ஆயின. பசலை உண்டன.

பிரிவு நாளில் தான் பெண்டிர்கண்கள்பசலை உண்ணும் தன்மையனவாகும். நாயகன் தினமும் வருகின்றான். நங்கையின் கண்கள் பசலை அடைவானேன்? அதனை உணர்ந்த தோழி அவன் வாழும் மலைநாட்டைக் காட்டுகிறாள்.

"மலைப்பக்கம், கொழுத்த சுளையையுடைய பலாமரம் காய் காய்த்துப் பருத்தது. அதனைத் தாங்க மாட்டாது வளைந்து நின்றது அதன் சரிய





## தி.மு.கழகத்தால் தமிழ் வளர்ந்ததா ?

தி. மு. கழகத்தால் தமிழ் வளரவில்லை; நாறுகிறது என்று எவரேனும் சொல்லுவாரானல் அது தவருன கருத்தாகும். தி. மு. கழகத்தில் தமிழ்ப் பற்றுள்ள இளைஞர்கள் பலருண்டு. அவர்களா லும் தமிழ் வளர்ந்தது என்றே கூற வேண்டும்.

—முத்தமிழ்க் காவலர், கி. ஆ. பெ. விசுவநாதம்
[தமிழகப் புலவர் குழு அமைப்பாளர்]

கிளை. கொக்கு ஒன்று தான் உண்ணுதற்காக மீன் ஒன்றை ஏந்தி வந்தது. பலாக்கிளையில் தங்கியது. குடைந்துகுடைந்து தின்றது. இதனல் எழுந்தது புலால் நாற்றம். பலாப்பழங் களை உண்ணுவதில் ஆசை மிக உடையன குரங்குகள். குரங் கொன்று! அதுவும் பெண் குரங்கு. 'பஞ்சு போன்றதலை 'மந்தி'. அப்பக்கம் வந்தது. புலவுநாற்றம் பொறுக்க விய லாது வீசியது. நெடிஏறியது. மந்திதும்மியது". அப்படிப் பட்ட மலைக்குத் தலைவ!" என் கிருள் தோழி!

இப்போது பாட்டின் சுவை யைப் பருகுவோம்.

"கொழுஞ்சுளைப் பலவின்
பயங்கெழு கவாஅன்
செழுங்கோள் வாங்கிய
மாச்சினைக் கொக்கின்
மீன்குடை நாற்றந் தாங்கல்
செல்லாது
துய்த்தலை மந்தி
தும்மும் நாட
நினக்கும் உரைத்தல்
நாணுவல் இவட்கே
நுண்கொடிப் பீரத்தின்
ஊழுறு பூவெனப்
பசலை ஊரும் மன்னே பன்னுள்
அறி அமர் வனப்பினெங்
கானம் நண்ண
உண்டெனுர் உணரா வாகி
மலரென மரீஇ வரூஉம்
இவள் கண்ணே.

நற்றிணை 326-மதுரை
மருதனிள நாகனுர்.

இக்காட்சியைச் சுட்டிக்காட் டித் 'தலைவனே' நீ தினமும் வருகின்றாய். நேரிழையோடு இன்பத்தில் ஆழ்கின்ருய். ஊர் 'அம்பலம்' ஆயிற்று. அன்னை அறிந்தாள். ஐயத்தோடு சின ந்து பார்க்கின்ருள். இனித் தினைப்புனம் வருவது இயலா தாகிவிடும். விரைந்து நீ மணங் கொள். இக்கவலையினைல்தான் நீல மலர் போன்ற தலைவியின் கண்கள் பசலை உண்டன!

இதனை நேரடியாகக் கூருது மறைத்துத் கூறவந்த தோழி!

"தினைப்புனத்தைப்" பலா மரம் என்கிருள். தலைவனைக் 'கொக்கு ஆகக் காட்டுகிருள். 'தலைவிதான்' மீன். மீனைக் 'குடையும்' கொக்கு-தலைவியும் தலைவனும் காணும் இன்பம்! நாற்றம்! ஊர் தூற்றும் அலர். நாற்றத்தைத் தாங்காது தும் மும் 'மந்தி'-கண் சிவக்க சந் தேகத்தோடு காணும் தாய், என்ருள்.

*    *    *

இங்கு ஒரு பாடல், நற்றிணை யில் தான். ஆனல் பாட்டாடிரி யர் 'இளநாகனர்'. இவரும் மந்தியைக் கொண்டே செய் யுளை உருவாக்கியுள்ளார்.

முளைசப்பொன் அவள். மாணிக்கக்குன்று அவன். இரு வரும் இதயம் ஒன்றுபட்ட னர். காதல் கரை புரண்டு ஓடியது. வாள் ஏந்தியவன் நாளும் வந்தான். 'முல்லை அரும்புதனை வாய்க்குள்ளே வளர்க்கும் மங்கையை மலராக் கித், தான் வண்டானன். திரும்பினன்.

எப்படியோ ஒருநாள் ஊர் அறியும். உறவு அறியும். அன் னையும் அறிவாள். எத்துணை நாட்கள் இவர்கள் கண்களுக் குத் திரைபோட முடியும்?

நாட்கள் ஓடின. திருமணப் பேச்சு எடுத்தானில்லை. மங் கைக்கும் மணளனுக்கும் மணம் நிகழவேண்டும். இருவரும் மணவறையில் பொன் ஊஞ்ச லில் சோடித்து வைத்து பளிங் குச் சிலைகள்போல் விளங்க வேண்டும் என விரும்பிய தோழி. எண்ணினள் 'இரவு நேரத்தில் கொடிய வழியில் வரும் குன்றெத்த தோளானை 'வாராதே' என்று நேரிடை யாக எவ்வாறு கூறுவது? 'வாராதே' என்ருல் தயங்கு வான் தலைவியை மணக்க வழி வகுப்பான்." என எண்ணி ளுள்.

ஒருநாள் தலைவன் வரும் நேரம் பார்த்து, அவன்காதில்

விழும் விதத்தில் நங்கையிடம் பேசலுற்ருள்-தோழி!

"தோழி! நினது அழகான 'யானை வெண்கோடு' போன்ற நெற்றியில் பசலை பாயட்டும். பெரிய தோளினின்று நீமெலிதலால் வளை நெகிழட்டும். கவலையில்லை, கன்னங்கருத்த இருளில் இரவுநேரத்தில் தனியனைய் வரும் தலைவன் வாராதிருக்கட்டும். இப்பிரிவால் ஏற்படும் நின் துன்பம் பொறுக்கக் கூடியதே! தலைவன் வரும் வழிபோ கொடிது! "மாமலைச் சாரல்! பிறரைக் கொல்லும் குணங்கொண்ட கொடிய புலி! அதனை, நுழையமுடியாத முழையருகில் மோதிக் கொன்றது ஆண் யானை. 'சங்கு போன்ற' அதன் வெள்ளைத் தந்தம் குருதிக் கறைபட்டுச் சிவப்படைந்தது. அச்சிவந்த மறுவைக் கழுவ மலையினின்று இழிதரும் அருவியில் சென்று கழுவுமாம் களிறு'.

"இப்படிப்பட்ட வழியாயின்றே; ஒதமல்லவா வரும் தலைவனுக்கு". என்கிருள் தோழி!

தலைவி வீட்டிலும் நாள்தோறும் நிகழ்த்தும் நாடகத்தையும அரங்கேற்றுகின்ருள் தோழி! தலைவனது வருகையால்-காதற்கலப்பால்-தலைவியின் உடலில் ஏற்படும் மாற்றங்களைப் பெற்றவளும் பிறரும் அறியா வண்ணம் திரைபோடுகிருர்கள். தலைவன் சந்திப்புக்குப் பின் நாள்தோறும் நங்கை தன் உடம்பை முன் போலத்திருத்தி அழகுபடுத்திக் கொள்கிருள்.

இதனைத் தலைவனுக்குச் சுட்ட வேண்டும், தலைவனது நாட்டைச் சொல்லுகிருள். அங்கு நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றைக் காட்டி தங்களின் துன்பம் எத்தகையது? என்கிருள். அதன் அழகே அழகு!

"மிளகுக் கொடிவளர்ந்து படர்ந்திருக்கின்றமலை! தளிர்களைத் தின்னுகின்ற தன் பெரியசுற்றம் உடைய பெண் குரங்கு ஒன்று. அது சிவந்த முகத்தையுடைய மந்தி, அதற்கொரு ஆசைக்காதலன் - கடுவன் இரண்டும் இணைந்து இன்பங்கண்டன. மந்தியின் உடம்பில் சில மாற்றங்கள். சுற்றம் அறிந்தால் என் செய்வது என்கிற அச்சம்?

ஆழமான சுனை. கண்ணுடி போன்ற நீர் ஊற்று! அதன் அருகில் கருமையான அடியையும் பொன்போன்ற பூங்கொத்துகளையுமுடைய வேங்கை மரத்தின் கிளையில் ஏறியது மந்தி! கிளையினின்று தலை கவிழ்த்துக் கொண்டு சுனைநீரில் கண்டவேடு தான் ஆடிய காதல் ஆட்டத்தால் குலைந்திருந்த உச்சி மயிரைத் திருத்திக் கொள்கிறதாம்" இதுபோன்ற நிகழ்ச்சிக்குரிய நாட்டவர் நம் தலைவர் என்கிருள் தோழி! இதே பாடல்;

"நன்னுதல் பசப்பினும்
பெருந்தோள் நெகிழினும்
கொன்முரண் இரும்புலி
அரும்புழைத் தாக்கிச்
செம்மறுக் கொண்ட
வெண்கோட்டு யானை
கண்மிசை அருவியில்
கழூஉஞ் சாரல்
வாரற்கதில்ல தோழி
"கடுவன்
முறியார் பெருங்கிளை
அறிதல் அஞ்சிக்
கறிவளர் அடுக்கத்தில்
களவினில் புணர்ந்த
செம்முக மந்தி செல்குறி
கருங்கால்
பொன் இணர் வேங்கைப்
பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடுஞ்சினை
நோக்கிக் கவிழ்ந்து தன்
புன்தலைப் பாறுமயிர்
திருத்துங்
குன்ற நாடன் இரவினனே"

நற்றிணை 151, ஆசிரியர்.
**இளநாகனர்.**

## தி.மு.கழகத்தால் தமிழ் வளர்ந்தது.

தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்கான காரணங்களுள் ஒன்றைப்பற்றி நான் எப்போதும் ஆச்சரியப்படுவதுண்டு. தாய்மொழியில் நன்ருகப் பேசியதாலும் நன்ருக எழுதியதனுலும் வளர்ச்சியும், செல்வாக்கும் பெற்ற ஓர் அரசியல் கட்சி உலகத்தில் உண்டென்ருல் அது தி. மு. கழகந்தான்.

தி. மு. க. தமிழைக் கவர்ச்சிகரமானதாகச் செய்தது. அதனுல் தமிழினிடம் இளைஞர்களுக்கெல்லாம் ஒரு தனி மோகம் ஏற்பட்டது. ஒரு விஷயத்தில் இளைஞர்களுக்குக் 'காதல்' ஏற்பட்டுவிட்டால் அது வெற்றியே அல்லவா! எனக்குக்கூட ஒவ்வொரு சமயம், தி. மு. க. நடையில் எழுத வேண்டுமென்ற அவா பண்டிதர்கள் சொல்லுவதுபோல் 'பிடரி பிடித்து' உந்துவதுண்டு. தி. மு. க திட்டம் போட்டுக் கொண்டோ, போட்டுக் கொள்ளாமலோ தமிழை வளர்க்கும் ஒரு ஸ்தாபனமாக துவக்கத்திலிருந்தே அமைந்துவிட்டிருக்கிறது.

— துமிலன் (நகைச்சுவை எழுத்தாளர்).

# தி. மு. கழகத்தால் தமிழ் வளர்ந்ததா?

திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றினால்தான் தமிழ் வளர்கிறது என்று உறுதியாகக் கூறுவேன்.

சங்கப்புலவர் காலத்திலேயே வளர்ந்துவிட்ட நம் செந்தமிழ் மொழியை தி. மு. க. என்ன வளர்ப்பது என்று கேட்கலாம். சங்கப் புலவர்கள் வளர்த்த செந்தமிழ் மொழி புராணங்களாலும் இதிகாசங்களாலும் ஏற்பட்ட வடமொழி கலப்பால் பெரிதும் கெட்டுவிட்டது. ஆதலால் தி. மு. கழகம் அந்த வட மொழிகளை நீக்கி நம் செந்தமிழ் மொழியை வளர்ப்பதோடு பிற மொழிகள் கலக்காதவாறும் பாதுகாத்து வருகின்றது.



அங்கில மொழி கலப்பால் தமிழ் கெட்டுத்தான் வருகின்றது. ஆனல் அஃது எண்ணெயும் நீரும் போல வேறு வேருக பிரிந்தே இருக்கிறது. வடமொழி கலப்பாலும் நீரும் போன்று இரண்டறக் கலந்திருக்கின்றது. ஆதலால் அதைப் பிரிப்பதில் பெரிதும் துன்பம் ஏற்படுகின்றது. அந்தத் துன்பத்தை ஏற்று தி. மு. க. தமிழை வளர்த்து வருகிறது.

இந்தி மொழியால் தமிழ் கெடும் என்பதை உணர்ந்து தி. மு. கழகத்தினர் அதை அறவே ஒழிப்பதற்காக இப்போது அரும்பாடுபட்டு வருகின்றனர். அரசாங்கத்திற்கு இந்தியால் வரும் கெடுதலைத் தெரிவிப்பதற்காகவே இந்தி வருவதற்குக் காரணமாக உள்ள சட்டத்தை எரித்துச் சிறை செல்கின்றனர். எனவே தமிழுக்காகச் சிறை செல்லும் தி. மு. கழகத்தினர் தமிழை வளர்க்கிருர்கள் என்பதை நாம் கண்கூடாகத் தெரிந்து கொள்ளலாம்.

—மயிலை சிவமுத்து

[மாணவர் மன்றக் காவலர்.
முதுபெரும் புலவர்]

தி. மு. கழகத்தால் தமிழ் வளர்ந்ததா?
என்ற பகுதிக்கான பேட்டிகள் :

மாமூலன்




# இவர்கள் அவர்களாயிருந்தால்....




காமன் கதை
இந்தாப்பா ஈஸ்வரா! கொஞ்சம் இரு! இரண்டு முதலாளிக்கிட்டே தேர்தல் நிதி வாங்கிக்கிட்டு வந்துடறேன்! அப்புறம் எரிச்சுக்க!


கிருஷ்ணலீலா
பாண்டவர்களை கைவிட்டுவிடுகிறேன்! அங்கே சீட்டுகொடு!


'பக்த' குசேலா
கிருஷ்ணு! நாலு அவுன்சு அவல்தான் கொண்டு வந்திருக்கேன்: நீண்ட ஆயுளையும் பதவியையும் கொடப்பா!


மனுநீதிச் சோழன்
ஆகா! எனது மகன் மீது வாலைவீசிய கன்றே! உன்னைக் கொன்று என் நீதியை நிலைநாட்டப்போகிறேன்!
காங்கிரஸ் குண்டர்
கக்கன்
எதிர்க்கட்சிகள்

நான், என் குடும்பம், என் உறவினர்கள், அவர்களுடைய நன்மை, எதிர்கால வாழ்வு என்பவைகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதுதான் மனித இயற்கை. சுருக்கமாகச் சொல்லப் போனால், மனிதன் ஒரு சுயநலவாதி. பிறருக்காக உழைப்பது, தொண்டு செய்வது என்பது சாதாரணமாக மனிதர்களுக்கு ஏற்படுவதில்லை, அதுலும பிறருக்காக கஷ்டநஷ்டங்களை ஏற்றுக் கொள்வது, ஒருவர் துன்பங்களைப் பலர் கூட்டு முயற்சி எடுத்து, அதற்காக இன்னல்களை ஏற்றுக் கொள்வது என்பது சாதாரண மனித இயல்புககு அப்பாற்படடது.

இயற்கை குணத்தில் இத்தனை குறைபாடுகள் இருந்தும், அவைகளை நீக்க மத அமைப்புகள், அரசியல் கட்சிகள், தொழிற் சங்க இயக்கங்கள் பாடுபட்டு வந்துள்ளன — வருகின்றன! மத ஸ்தாபனங்களில் இந்தக் கூட்டு முயற்சி பெருமபாலும மதவெறியிலேயே கொண்டுபோய் விட்டிருக்



# தொழிற் சங்க இயக்கத்தில் புல்லுருவி!

கிறது. மாறாக, அரசியல் கட்சிகளும், தொழிற் சங்க இயக்கங்களும், கூட்டு முயற்சி என்ற லட்சியத்தில் பாராட்டத்தக்க வெற்றி பெறாவிட்டாலும், உற்சாகம் கொடுக்கக் கூடிய அளவில் நடைபோட்டுச் செல்கின்றன.

சிலருக்கான நன்மை என்றாலும், அதற்காக பலர் ஒரு முயற்சியில் ஈடுபட்டு தொல்லைகளையும், துயரங்களையும் ஏற்றுக்கொண்டு, தொழிற்சங்கங்கள் பெரும் பணியாற்றி வந்துள்ளன. இரண்டு பேர் சேர்ந்து ஒரு முதலாளியை அணுகினால் அதையே காணச் சகிக்காமல், "ஏது! ஒன்று சேர்ந்து வந்திருக்கிறீர்களோ?" என்று ஆணவக்காரர்கள் மிரட்டிய காலம் ஒன்றுண்டு. குறையை எடுத்து சொல்வதே குற்றம் என்று கருதினர் முதலாளிகள்.

சிலர் ஒன்றாகக்கூடி தங்கள் குறைகளைத் தெரிவிக்க ஒரு பிரதிநிதியை அனுப்பினால், "ஓ! தலைவரா? வாருங்கள்! வாருங்கள்!" என்று இழித்துப் பேசிய காலமும் இருந்தது. ஆனால், பல போராட்டங்கள் மூலமும், பலர் இன்னுயிரை இழந்ததன் வாயிலாகவும், பலர் தங்கள் வாழ்வையே சிதைத்துக் கொண்டதன் பலனாகவும், தொழிற்சங்கங்கள் உருவாகி அந்த இயக்கத்திற்கு ஒரு உன்னதமான இடம் இன்றையதினம் கிடைத்துள்ளது.

ஒரு தொழிலாளிக்கு ஆபத்து என்றால் அங்குள்ள அத்தனை பேரும் ஆர்த்தெழுவது என்ற உணர்ச்சி இன்றையதினம் நல்ல முறையில் வளர்ந்துள்ளது. ஒரு கோரிக்கைகளுள்ள நியாயத் தன்மையை வலியுறுத்த தொழிலாளர் படை ஒன்று திரண்டு ஒலியெழுப்பும் உணர்ச்சி தேவைப்பட்டால் கிளர்ச்சியில் ஈடுபடும் உணர்வு, வளர்ந்து வருகிறது. இதன் விளைவாக தொழிலாளர்களின் நிலை நாம் விரும்பிய அளவிற்கு வளரவில்லை என்றாலும், மெதுவாக வளர்ந்து வருகிறது. இந்தப் பாராட்டத்தக்க நிலை இந்தியாவில் ஏற்படுவதற்கு ஏ. ஐ. டி. யு. சி. அமைப்பு பெருமளவு காரணமாக இருந்துள்ளதென்பதை யாரும் மறக்க இயலாது. சமீபகால நிகழ்ச்சிகளாலும், தோழர் டாங்கேயின் இப்போதைய போக்காலும் அந்த அமைப்பின் பலன், வளர்ச்சி, வெகுவாகப்பாதிக்கப்பட்டிருந்தாலும் அதன் கடந்த கால சேவையை யாரும் மறக்க முடியாது; இன்னும்சொல்லப்போனால் இந்தியாவில் உள்ள தொழிலாளர்களின் தற்போதைய வளர்ச்சிக்கு ஏ. ஐ. டி. யு.சி. ஸ்தாபனம் முழுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் அதைக் கண்டு யாரும்பொறாமைப் படுவது நியாயமாகாது.

## எஸ். இராகவானந்தம்

நல்ல முறையில் பணி செய்து வந்த ஏ ஐ. டி. யு.சி. அமைப்பை கம்யூனிஸ்டுகள் தங்கள் அரசியல் லாப நோக்கைக் கருதி தவறான பாதையில் இழுத்துச் சென்றார்கள். இதன் விளைவாக தொழிற் சங்க இயக்கம்பிளவுபட்டது இந்தப் பிளவால ஏற்பட்ட கஷ்டத்தை ஈடுசெய்ய முடியுமென்று தொழிலாளர் தலைவர்களும், தொழிற்சங்க இயக்கத்தில் அக்கறை கொண்டவர்களும் நம்பி அதற்கு வேண்டிய காரியங்களை செய்துகொண்டிருக்கும் நேரத்தில் அதற்கு எதிராக ஐ. என், டி, யு.சி. அமைப்பு. ஆளுங்கட்சியான காங்கிரசால் உருவாக்கப்பட்டது

இந்த அமைப்பு(ஐ.என்.டி யு.சி) என்று உருவாகியதோ அன்று முதல் தொழிற்சங்க இயக்கத்தில் பெரும் பிளவு ஏற்பட்டு, தொழிலாளர் வாழ்க்கை முன்னேற்றமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. பொது நோக்கு, பலரைத் தழுவிய பிரச்சினை, பலருக்கு நன்மையளிக்கும் செயல், இவைகளுக்காகக் கூட்டு முயற்சி, அந்தமுயற்சி வெற்றி பெறத் தியாகம் என்ற எண்ணங்கள், பண்புகள் அத்தனையும் பழைய கால நிகழ்ச்சிகளாக மாறி வருகிறது. மனிதனுக்கு இயற்கையாக உள்ள சுய நலம் இன்று மீண்டும் தலை காட்ட ஆரம்பிக்கிறது.

இந்த எண்ணம்—திருப்பம் உருவாவதற்கு ஐ என், டி. யு.சி. ஸ்தாபனம்காரணமாக இருந்து வருகிறது.

அடிப்படை ஊதிய உயர்வு வாழ்க்கைப் புள்ளி உயர்வுக்கேற்ப வேறுபாடில்லாத பஞ்சப்படி, பலராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட குறைந்த பட்ச ஊதியம், இதர வாழ்க்கை வசதி போன்ற பொதுப் பிரச்சினைகளில் முழு கவனத்தையும் சக்தியையும் செலவு செய்வதை தனி நபர் நன்மைக்காகவும் சுகபோக வாழ்விற்காகவும், தொழிற்சங்க சக்தியையும், தொழிலாளர் தலைவர்களின் செல்வாக்கையும், ஐ.என்,டி. யு.சி. ஸ்தாபனம் இன்றையதினம் பயன்படுத்துகிறது.

ஒரு தனிப்பட்ட தொழிலாளியின் உத்தியோக



உங்களுக்கு மட்டுமோ ஊடல் சொந்தம் ?
எங்களுக்கும் சொந்தம்!—மானிடரே!

புகைப்படம் : நாகசுந்தரம்

உயர்வு, வேலை நீக்கஉத்தரவு ரத்து, வருடாந்தர ஊதிய உயர்வு பெற்றுத் தருதல், மாற்றல் உத்தரவை ரத்து செய்தல், திருட்டுத் தொழிலில் ஈடுபட்டு வேலை யிழந்தவனுக்கு வேலைபெற்றுத் தருதல், உறவினர்களுக்கு உத்தியோகம் பெறுதல் போன்ற சில்லரைப் பிரச்சினைகளில் ஐ.என்.டி.யு.சி. தலைவர்கள் ஈடுபட்டு அதன் பலனாகத் தங்களுக்கும். தாங்கள் சார்ந்துள்ள அமைப்பிற்கும் செல்வாக்கு தேடிக் கொள்கிறார்கள்.

இந்த சலுகைகளைப் பெற தாங்கள் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கையும், அக் கட்சியின் சார்பாக வீற்றிருக்கும்அமைச்சர்களின் தலையீட்டையும்பயன் படுத்துகிறார்கள். இதன் மூலம் தனிப்பட்ட தொழிலாளர்களின் நல்லாதரவைப் பெற்று தங்களுடைய இயக்கத்தை வளர்த்து வருகிறார்கள். இந்த அமைப்பில் சேர்ந்தால் எனக்கும். என் உறவினர்களுக்கும். இன்னின்ன சலுகைகள் கிடைக்கும் என்று முன் கூட்டியே கணக்கிட்டுச்கொண்டுதான் இந்த அமைப்பில் சேருகிறார்கள். பச்சையாகச் சொல்லப் போனால், ஐ என். டி. யு. சி. அமைப்பு சுயநலமிகளின் பதவிவேட்டைககாரர்களின் கூடாரமாக இன்றையதினம் விளங்குகிறது. படித்துபட்டம் பெற்ற அதிலும் சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்ற பல காங்கிரஸ்காரர்கள் ஐ. என், டி, யு. சி. அமைப்பில் சேர்ந்தால் எதிர்காலத்தில் தம் வாழ்வு வளம்பெறும் என எண்ணி அந்த அமைப்பில் பணியாற்றி பலனும் பெற்று வருகிறார்கள்.

இந்தப் புல்லுருவிகளின் செயலால் தொழிலாளர்களிடையே இன்றைய தினம் பொதுப் பிரச்சினைக்காகப் போராடும் மனோபாவம் குறுகி சுயநல நோக்கோடு எந்தப் பிரச்சினையையும் அணுகும் தன்மை வளர்ந்து வருகிறது.

பொதுப் பிரச்சினைக்கு சக்தியை உருவாக்குவது என்பது கடினமான செயலாக உள்ளது. நமக்கேன் இந்த தொல்லை என்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. எனக்கேதாவது வாங்கிக் கொடுங்கள் என்று சொல்லும் மனப்பான்மை பரவலாக வளர்ந்துள்ளது. இவைகளுக்கெல்லாம் காரணமாக விளங்குவது ஐ, என். டி. யு. சி. அமைப்பே!

ஐ. என். டி. யு சி தலைவர்கள் நல்லவர்களாக இருக்கக் கூடும். அந்த அமைப்பினால் தான் ஏழைத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய முடியுமென்று திடமாகவும் அவர்கள் நம்பக்கூடும். ஒருவன் எவ்வளவு பெரிய தீவிரவாதியாக இருந்தாலும் அவனால் செய்யக் கூடிய தொண்டு அவன் சார்ந்துள்ள இயக்கத்துக்கு ஏற்பதான் அமையும் என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

ஆரம்பத்தில் தங்களுடைய தீவிரத் தன்மைக்காகப் போராடி அவைகளில்வெற்றி காணாத காரணத்தால் நாளடைவில் தன்னம்பிக்கை இழந்து வெளியே சென்றால் இந்த அளவு நன்மையாவது நம்மால் செய்ய முடியுமா என்ற மனப்பான்மை ஏற்பட்டு பின்னர், தாம் சார்ந்துள்ள இயக்கத்துக்கு ஏற்ற இயல்போடு இணைந்து விடுகிறார்கள். இது பலரும் காணும் உண்மை.

உதாரணத்திற்குச்சொல்ல வேண்டுமென்றால் மறைந்த மாவீரர் பண்டித நேரு

வையே எடுத்துக்கொள்வோம். சோஷலிசத்தில் அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. அதைச் செயல்படுத்தும் அதிகாரம் பெற்றவராகவும் அவர் இருந்தார். இருப்பினும் பதினேழு ஆண்டு காலம் இந்தியாவின் பிரதமராக இருந்து கடைசியாக மறையுமுன்னர் அவர் எதைக் கண்டார்? பணக்காரன் மேலும் பணக்காரன் ஆனதையும், ஏழை மேலும் ஏழையானதையும் தான் காணமுடிந்ததே தவிர இருசாராருக்குமுள்ள இடைவெளியை அவரால் குறைக்க முடியவில்லை. அதற்கு காரணம் பண்டித நேருவல்ல. அவர் சார்ந்திருந்த அமைப்பாகும் (காங்கிரஸ் கட்சி)

காங்கிரஸ் கட்சி முதலாளிகளின் கூடாரமென்ற காரணத்தால் அதிலிருந்த திரு. நேருவால் தன் எண்ணப்படி செயல்பட முடியவில்லை. அதைப்போலத்தான் ஐ.என்.டி.யு.சி.யில் ஒரு சில முற்போக்குத் தலைவர்கள் இருந்தாலும், அவர்களால் தொழிலாளர்களுக்கு நன்மைசெய்ய முடியாமல் போய்விடுகிறது. இந்த நேரத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் கூறியுள்ளதையும் நாம் ஞாபகப் படுத்த விரும்புகிறோம்.

"ஜமீன்தார். மிராசுதார் முறைகள் ஒழித்து விட்டோம் என்று கூறுகிறோம். எனினும், நிலப் பிரபுக்கள் தொடர்ந்து நீடிக்கிறார்கள். சுயநலமிகள் நிலச் சீர் திருத்தங்களை எதிர்த்ததின் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நமது சட்டசபைகளில் உள்ளோர்: நிலப் பிரபுக்களாகவும், அவர்கள் ஆதரவாளர்களாகவும் இருப்பதே இதற்குக் காரணம்" என்று அவர் கூறியுள்ளார்.

சட்டசபைகளிலும், பாராளுமன்றத்திலும், இன்று பெருவாரியாக வீற்றிருப்பது காங்கிரஸ் உறுப்பினர்களே. எனவே அவர் குற்றம் சாட்டியிருப்பதும் காங்கிரஸ் கட்சியைத்தான். காங்கிரஸ் கட்சியிலும் சரி, அதைச் சார்ந்துள்ள ஐ.என்.டி.யு.சி. அமைப்பிலும் சரி முற்போக்காளர்கள் இருக்கலாம். ஆனால் அவர்

# தி.மு. கழகத்தால் தமிழ் வளர்ந்ததா?

மேடைப் பேச்சுகளில் தி. மு. கழகத் தலைவர்கள் எளிய நடையில் மட்டுமல்லாது இனிய நடையிலும் மக்கள் சமுதாய வாழ்வுக்கு உரிய கொள்கைகளை பல மேடைகளில் விளக்கி பேசிய காரணத்தால்-பொது மக்கள் மட்டுமின்றி மாணவரும் மற்றவரும் அவற்றைக் கேட்டு தெளிவு பெற்றனர். பெற்றதோடு தாமும் அந்த வகையில் எழுதவும் பேசவும் வேண்டும் என்ற ஆர்வம் தூண்ட மாணவரும் மற்றவரும் அதே முறையில் பேசவும் எழுதவும் துவங்கினர். அதனால் நாட்டில் எளிய இனிய தமிழ் பரவ வாய்ப்பு உண்டாயிற்று.



இக் கட்சியைச்சேர்ந்த பலர் புத்தம் புதிய இதழ்களும் தாள்களும் எண்ணற்றனவாக எழுதி வெளியிட்ட காரணத்தால் பேச்சு நடையோடு நல்ல எழுத்து நடையும் உருவாயிற்று, இன்று உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரிகளிலும் பயில்கின்ற மாணவர்கள் பலர் நல்ல இனிய நடையில் எழுதுவதற்கு இந்த இதழ்கள் வழிகாட்டிகளாக அமைந்தன. எனவே, தி. மு. க. தமிழை வளர்த்துள்ளது என்பது உண்மையாகும்.

டாக்டர் அ. மு. பரமசிவானந்தம்
(பச்சையப்பன் கல்லூரி
தமிழ்த்துறைத் தலைவர்)

களால் தங்கள் கருத்தை செயல்படுத்த முடியாதென்பதை இந்தப் பதினெழு ஆண்டு கால ஆட்சி எடுத்துக் காட்டியுள்ளது.

ஐ. என். டி. யு. சி. யின் தகாக போக்கை மாற்றி அமைக்கும் பணியில் கம்யூனிஸ்ட் தோழர்கள், உதவுவார்களா என்று பார்த்தால் அதிலும் ஏமாற்றமே ஏற்படுகின்றது. இன்றுள்ள அவல நிலைக்கு மூல காரணம் எது? என்று பார்த்து அதற்கேற்ப போர் முறைகளை அமைக்காமல் தனிப்பட்டவர்களை புகழ்வது அல்லது இகழ்வது. என்ற செயலில் ஈடுபட்டு அமைப்பை வளர விட்டு விடுகிறார்கள்.

நேருவைப் புகழுவது. காங்கிரஸ் கட்சியை இகழ்வது என்ற கொள்கையும். மந்திரி பக்தவத்சலத்தை இகழ்வது, காமராசரை ஆதரிப்பது என்ற போக்கையும் அமைத்துக் கொண்டு, இந்தத் தலைவர்களெல்லாம் முதலாளித்துவ முகாமாகியகாங்கிரஸ் கட்சியின் ஆட்சிதான் தொழிலாள வர்க்கத்தை சுரண்டுகிறது என்பதையும் மறந்து விடுகிறார்கள்.

முதலாளிகள், தொழிலாளர்களை இன்றைய தினம் சுரண்டுவதற்கு வசதியாக உள்ள சட்டங்களை இன்றைய காங்கிரஸ் ஆட்சி வகுத்துள்ளது என்பதை கம்யூனிஸ்டுகள் மறந்து விடுகிறார்கள். தொழிலாளர்களுக்கு நிலையான, நன்மை ஏற்பட வேண்டுமென்றால் ஆட்சியை மாற்றியமைக்க வேண்டுமென்ற அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்து, அதற்கேற்ப செயலில் ஈடுபடாமல் தங்களுக்கு சாதகமாக உள்ள சட்டங்களைக் கொண்டு, பணக்காரர்களாகும் தனிப்பட்ட முதலாளிகளை எதிர்த்து போராடியே தங்கள் சக்தியை பாழாக்குகிறார்கள். ஏ. ஐ. டி. யு சி. அமைப்பும் இந்தப் பாதையையே பின்பற்றிச் செல்கிறது.

முதலாளி, கொள்ளை லாபம் அடிக்கிறான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்குக்காரணமாக இருக்கிற காங்கிரஸ் ஆட்சியை விலக்க முழுசக்தியை செலவு செய்ய வேண்டும். அதைவிட்டு தனிப்பட்ட முதலாளியின் பெயரைச் சொல்லி அவனைத் தூற்றுவதும், துன்புறுத்துவதும், சமயங்களில் பலாத்காரச் செயலில் ஈடுபடுவதும், தொழிலாளர்களின் சக்தியை விரயமாக்கும் செயலாகும் இந்தச் செயல்களைத் தான் ஏ. ஐ. டி. யு சி. அமைப்பில் அடங்கியுள்ள, தொழிற்சங்கங்கள் செய்து வருகின்றன.

தொழிற்சங்க இயக்கத்தில் புகுந்துவிட்ட புல்லுருவியாகிய ஐ. என் டி, யு. சி தனிப்பட்டவர்கள் பிரச்சினையிலேயே கவனம் செலுத்தி, இயக்க வளர்ச்சியைக் கெடுக்கிறதென்றால், ஏ. ஐ டி. யு. சி. ஸ்தாபனமோ அரசியல் போராட்டம் வேறு, தொழிற் சங்கப் போராட்டம் வேறு என்பதை உணர மறுத்து இரண்டையும் ஒன்றாக்கி தொழிற்சங்க இயக்க வளர்ச்சிக்கு ஊறு தேடுகிறது.

இன்றைய ஏகபோக முதலாளித்துவ ஆட்சியாகிய காங்கிரஸ் ஆட்சியை அரியாசனத்திலிருந்து அகற்றும் பணியை அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் தொழிலாளர் சம்பந்தமான சட்டங்கள். முறையாக நிறைவேற்றவும், கூட்டு முயற்சிக்கான உணர்வை வளர்க்கவும், பலரைத்தழுவிய நன்மைகள் பெற, தொழிலாளர் சக்தியைப் பயன் படுத்தவும், ஆன காரியங்களில் தொழிற் சங்க இயக்கங்கள் ஈடுபட வேண்டும்.

இன்றுள்ள சட்டங்களில் செய்ய வேண்டிய மாறுதல்களை தாங்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகள் மூலமாக செய்யவும், அதற்கு வலுவூட்டும் வகையில் தங்கள் சக்திகளை செலவு செய்ய வேண்டுமேயல்லாது, அரசியல் போராட்டத்தையும் தொழிற் சங்க போராட்டத்தையும் ஒன்றாகஎண்ணிசெயல்படுவது இன்று இந்நாட்டில் உள்ள நிலைமைக்கு ஏற்று வராது.

எனவேதான், அறிஞர் அண்ணாவின் சீரிய தலைமையில் இயங்கிவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள் அரசியல் கட்சிகளின் பணி வேறு, தொழிற்சங்க இயக்கத்தின் பணிவேறு என்பதை உணர்ந்து, தாங்கள் தலைமை தாங்கி நடத்திவரும் தொழிற் சங்கங்களில் அரசியல் நோக்கோடு போராட்டங்களை நடத்தாமல் தொழிலாளர்பிரச்சினைதிரதேவைப்பட்ட நேரத்தில் போராட்டத்தை நடத்துகிறார்கள். இதன் காரணமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் நடத்திச் செல்லும் தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை வருகிறது.

தொழிற் சங்க இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இயக்கத்தை தீவிரமாகவும், நேர்மையாகவும் நடத்துகின்ற அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கு, நிலையான நன்மை ஏற்பட வேண்டுமென்றால் ஒரு சோஷலிச ஆட்சி அகில இந்திய ரீதியிலும், மாநில ரீதியிலும்—திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி—ஏற்பட வேண்டுமென்பதை நினைவில் கொண்டு, அப்பேர்ப்பட்ட சோஷலிசக் கட்சிகள் ஆட்சிக்கு வர தங்களாலான உதவியைச் செய்ய வேண்டுமென்பதையும் மறந்துவிடக்கூடாது.



# வாய்க்கரிசி

சிந்தனைச்சிற்பி
சி.பி.சிற்றரசு

**வா**ய்க்கு — அரிசி — இந்த இரு சொற்களும் சேர்ந்து வாய்க்கரிசி என்றாகிறது. உயிரோடிருக்கும் போது வயிற்றுக்குச் சோறும், வயிறு போனபிறகு வாய்க்குஅரிசியும் என்ற நிலை நம் நாட்டில் அரிசி உண்கின்ற நாட்டில் ஒருவன் இறந்தால் அவன் வாயில் சில அரிசிகளை வைப்பதைப்போல கோதுமை தின்பவன் இறந்தால் அவன் வாயில் சில கோதுமைகளை வைப்பார்களோ என்னவோ!

நமக்கு அரிசி நாம் உயிரோடிருக்கும் போது மாத்திரமே தேவைப்படாமல் இறந்த பிறகும் நாலு அரிசி தேவைப்படுகிறது என்பதிலிருந்து அரிசி எவ்வளவு முக்கியமானது என்பதை விளக்க வேண்டியதில்லை.

அவரவர்கள் உண்ணும் உணவுக்கேற்ற வகையிலே தான் பழக்க வழக்கங்களும், செரிமானமும் ஏற்படுகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்த உணவு வழக்கங்கள் அவரவர் வாழும் பகுதியிலுள்ள நிலங்களின் தானிய விளைச்சலைக் கருதியே இருக்கின்றது என்பதும் உண்மை. அதே நிலையில்தான் நாம் வாழ்கின்ற பகுதியில் நெல் அதிகமாக விளைவதால் அரிசி உணவே நமக்குக் கிடைக்கக்கூடியதாயும், சிறுவர் முதல் முதியோர் வரைஎளிதில் செரிக்கத் தக்கவகையில் அமைந்ததாயும் போய்விட்டது.

## கோதுமை

அரிசிக்குப் பதில் கோதுமையை சாப்பிடுங்கள் என்கிறார்கள் காரணமென்ன? இந்தியநாட்டிலேயே எல்லாருக்கும் தேவையான கோதுமை கிடைக்கிறதா என்றால், அதையும் அயல நாட்டில் பிச்சை எடுத்துத்தான் தரவேண்டும். இது இல்லாவிட்டால் அது என்றால், 'ஒகோ அது அதிகமாகவும். விலை மலி

வாகவும் தட்டுப்பாடில்லா மல் கிடைக்கும் போலிருக் கிறது என்ற பிரமை மக்க ளிடையே எழும் என்ற எண் ணங் தவிர வேறென்ன ?

## நமது உணவு முறை

இட்லி, தோசை, இடியாப் பம், புட்டு, உப்புமா, தவலை இட்லி, அப்பம். ஊத்தப்பம், கொழுக்கட்டை, தத்தியன் னம், புளியோதரை, எலுமிச் சம் சாதம், எள்ளன்னம். சொற்றி பொங்கல், பொங் கலம். சிடை. பொருள் விலங்கா உருண்டை - இவ் வளவும் அரிசியில் செய்து தீர வேண்டும். அரிசிக்குப் பதில் கோதுமை சாப்பிடு என்கிறார்களே புத்திசாலி கள் அவர்களையே கேட்கி றேன். மேற்கண்ட சிற் றுண்டிகளையெல்லாம்கோது மையில்செய்யமுடியுமா? அப் படியே அவற்றில் இரண் டொன்றை கோதுமையில் செய்வதாயிருந்தால் செலவு சிக்கனமாக இருக்குமா? என் பதை அவர்கள் யோசித்த தாகத் தெரியவில்லை.

அவரவர்கள் உண்கின்ற உணவையும், உடுத்துகின்ற உடையையும், மொழியையும் நாகரீகத்தையும், இலக்கண இலக்கியங்களையும், வரலாறு களையும் காப்பாற்றித் தரு வதுதான் மக்களாட்சியின் கடமையே தவிர. மக்கள் வேண்டாத ஒன்றைத்திணிப் பதும், விருப்பத்திற்கு விரோதமாக நடக்கத் தூண்டுவதும், அவர்கள் தங் கள் முன்னோர்கள் தங்களுக் கென்று தேடி வைத்த கரு வூலங்களை அழிப்பதும் மக்க ளாட்சியின் பண்பல்ல, மட ஆட்சியின் திமிர்வாதமென லாம்.

மக்களின் ஆவேசக் குர லுக்கு இரையான அரியா சனங்கள், செங்கோல்கள். மணிமுடிகள் எங்கே எப் போது என்பதை சரித்திர ஒளியில் தெரியும் மங்கலான கோடுகள் காட்டிக் கொண் டிருக்கின்றன.

'ஒழுக்கம் ஒழுக்கம் என்று சொலலிக்கொண்டுஒழுங்கை விட்டு விடுவது மன்னராட்சி என்றும், 'ஒழுங்கு ஒழுங்கு என்று சொல்லிகொண்டு ஒழுக்கத்தைக் கைவிட்டு வடுவது மக்களாட்சி'' என் றும் அன்று சமுதாய ஒப்பந் தம்' என்ற சிறந்ததோர் நூலெழுதிஅமெரிக்காவிலும் பிரான்சிலும் புரட்சி தோன்றுவதற்குக் காரண மான ரூசோ வெகு அழகாக சொன்னான்.

ஆனால் இன்று அவன் உயி ரோடிருந்து இந்திய நாட் டுச்கு வருகை தந்து இந்த அலங்கோலத்தைக் காண நேர்ந்தால், 'ஒழுங்கை விட்டு விடுவது மன்னராடசி. ஒழுக் கத்தை விட்டு விடுவது மக்க ளாட்சி. இரண்டையும் விட்டுவிட்டது காங்கிரஸ் ஆட்சி!' என்று சொல்லித் தான் புலம்புவான்.

## நம்மை நாமே

நம்மை நாமே ஆள்கிறோம் என்று பொருள் இன்றைய ஆட்சிக்கு இல்லை. நம்மை நாமே ஆளவுமில்லை, நாம் யாரையும் ஆளவில்லை, நம்மை யாரோ ஒரு சிலர் ஆள்கின்றார்கள் அவர்களை மக்கள்தான்அனுப்பினார்கள் எந்த மக்கள் அவர்களை அனுப்பினார்களோ. அந்த மக்களை பட்டினி போடுகிறார்கள்; பார்க்க மறுக்கிறாகள், அந்த மக் கள் 1967யை எதிர் நோக்கி யிருக்கின்றார்கள். காலம் சிறகில்லாத பறவை என்றார் கள். ஆம், அது உல்லாக வாழ்வினனுக்கு, உலுத்துப் போன ஏழைக்கல்ல, அவ னுக்கு ஒவ்வொரு வேளையும் ஒரு நூற்றாண்டுபோல் தெரி கிறது. ''சிறந்த வாழ்வே வா!'' என்று அவன் அழைப் பதில்லை.'' சாவின் சன்னி தானமே கதவைத்திற! வெளியே ஒரு ஏழை துடிக் கின்றேன். இருந்தும் இறந் தவனாய் விட்டேன், நான் உண்மையாகவே இறந்து இல்லாதவனாய் விடவேண் டும். என்று சுடலையின் தலை வாயல் கதவுகளை தன் ஆத் திரங் கொண்டமட்டும ஓங்கி ஓங்கி அறைகிறான். கால மெனும் கடலைக் கடந்து வேறூருக்கும் போய்விட்ட அந்த கல்லறைகள், ''ஏடா மூடா, உரிமையை காசுக்கு விற்றவனே, பிறர் நலம் பேணாது தன்னலம் காத்த வனே போ, போ, நீ இங்கு வர வெகு நாட்களிருக்கின் றன. கதவுகளைத் திறக்க மாட்டோம்'' என்கின்றன. அவனுக்கு அங்கேயும் புக லிடமில்லை. இதை நினைத்து நினைத்து படுத்தான், காலை புலர்ந்தது, கதவுகள் திறக் கப்படவில்லை. உடைத்தனர் கதவுகளை, உள்ளே சென்ற னர். அவன் நேற்று மாலை பேசியதுதான் கடைசி பேச்சு. இனி அவன் யாரிட மும் பேசமாட்டான். எங்கே வாய்க்கரிசி என்றனர். அதற் காக ஒரு உருவம நீண்ட வரி சையில் நீண்ட நேரம் காத் துக் கிடக்கின்றது என்ற னர். இந்த ஆட்சி மடிந்தா லும் வாய்க்கரிசி வேண்டுமே என்றனர். அதற்காகத் தான் சாகாமலிருக்கின்றோம் என்றனர் மக்கள். என்றோ ஓர் நாள் நிச்சயமாக சாகும் அன்று எப்படி அழுவது என்பதை இன்தே அழுது பார்ப்போம் வாருங்கள் என் றனர்.

★



JAN 1965










JAN1965





# இந்திக் கூத்து!



கூத்து பலவகை. அதில் நகைச்சுவைக் கூத்து ஒருவகை. இதனைக் கேலிக் கூத்து எனவும் கூறுவதுண்டு. எனினும், இவை யிரண்டும் ஒன்றாகா. நகைச் சுவைக் கூத்து அறிவு கலந்ததாகவும், கேலிக்கூத்து அறியாமை கலந்த தாகவும், காணப்பெறும்.

கேலிக் கூத்து என்பது பெரும்பாலும் வேறு வேலையில்லாதவர்களால் நடைபெறுவது. அதுவும் எதையாவது, எவரையாவது, வேண்டுமென்றே இழிவு படுத்தும் நோக்கங் கொண்டதாக அமைவது.

இந்த வகையைச் சேர்ந்ததே இந்திக் கூத்து என்பதும். இதை நடத்துகிறவர்கள் ஆட்சியிலுள்ள சில இந்திக் கூத்தாடிகள்' இவர்களாடும் கூத்து, தமிழ்நூல்களை இந்தி எழுத்துகளில் எழுத வேண்டும் என்பது! கூத்தாடுவதன் நோக்கம் தமிழ் மொழியைத் தவருக உச்சரிக்கச் செய்து அதனை இழிவுபடுத்தி அழித்து, அதன்மூலம் இந்தியை வளர்க்க வேண்டும் என்பது! அவர்களுக்கு ஆக்கம் அளிப்பவை அதிகாரமும், பணமும், ஊக்கமும் அளிப்பவர் தமிழ்நாட்டிலேயே அவர்களுக்குத் தாளம்போட, ஒத்து ஊதக் கிடைத்திருக்கும் பக்க வாத்தியக் காரர்கள்.

சீனப்பிரச்சினை, நேபாளப் பிரச்சினை, பூடான் பிரச்சினை, நாகாலாந்துப் பிரச்சினை, பாக்கிஸ் தான் பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை, அமெரிக்கப் பிரச்சினை, ரஷ்யப் பிரச்சினை, கேரளப் பிரச்சினை, கோவாப் பிரச்சினை, பர்மா அகதிப் பிரச்சினை, இலங்கை நாடற்றோர் பிரச்சினை, அணுகுண்டுப் பிரச்சினை, ஐக்கிய நாட்டுப் பிரச்சினை, படைப் பிரச்சினை, போர்க்கருவிப் பிரச்சினை, ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சினை, கடன் திட்ட பிரச்சினை. தொழில் பிரச்சினை, வணிகப்பிரச்சினை, விவசாயப்பிரச்சினை, பங்கீட்டுப் பிரச்சினை, குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சினை, தங்கக் கட்டுப்பாட்டுப் பிரச்சினை, நோட்டு அடிக்கும் பிரச்சினை, விலை உயர்வுப் பிரச்சினை. அரிசிப் பிரச்சினை, இலஞ்சப் பிரச்சினை முதலிய எத்தனையோ பிரச்சினைகள் இருக்க வேறு வேலையற்றவர்கள் போல இந்தத் தேவையற்ற வேலையைச் செய்ய முயன்றிருப்பது பெரிதும் வருந்தத் தக்கது.

ஒருக்கால் இத்தனைப் பிரச்சினைகளையும் சமாளிப்பதற்குரிய ஒரேவழி "தமிழ் மொழியை

இந்தி எழுத்துக்களில் எழுதுவது தான்" எனக் கண்டுபிடித்திருப்பார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அவ்விதமாயின் அவர்களைப் பாராட்ட பிறநாடுகளிலிருந்து ரசிகர்களை வரவழைக்க வேண்டியதுதான்.

"இந்தியாவில் பல மொழிகள் இருப்பது இந்திய ஒருமைப் பாட்டிற்கு இடையூறு ஆகும்" என அவர்கள் கண்டுபிடித்திருப்பார்களோ என எண்ணவும் வேண்டியிருக்கிறது. அவ்விதமாயின உடைவேற்றுமை, உணவு வேற்றுமை, நிலவேற்றுமை, வீடு வேற்றுமை, தொழில் வேற்றுமை செல்வ வேற்றுமை, சாதி வேற்றுமை, சமய வேற்றுமை முதலியவைகளால் எல்லாம் உண்டாகாத இடையூறு மொழி வேற்றுமையால் மட்டும் எப்படி உண்டாகிவிடும்? மொழியை மட்டும் அழித்து பிற வேற்றுமைகளை நிலைநிறுத்தி வருவதால் எப்படி ஒருமைப்பாடு வளரும்? எல்லாவற்றையுமே ஒழித்தால்தான் ஒருமைப்பாடு வரும் என என்ணினால், அவைகளையெல்லாம் அழித்த பிறகல்லாவா மொழியணை வரவேண்டும்? அவைகளை அழிக்காமல் மொழிகளை மட்டும் அழித்து ஒருமைப் பாட்டை உண்டாக்கிவிடலாம் என எண்ணியிருப்பார்களானால், அவர்கள் இருக்க வேண்டிய இடம் ஆட்சியிலல்ல என்றே கூறியாகவேண்டும்.

"இந்தி எழுத்துக்களில் தமிழைப் படித்து வளர்ப்பார்கள்" எனக் கூறுவதானால், அதை எப்படி எழுதுவது? எப்படிப் படிப்பது? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியதுதான்.

### "ழ. ல. ள"

எழுத்தும், ஒலியும் இந்தியில் இல்லை. எல்லாவற்றிற்கும் "ல" ஒலியே. தமிழில் உள்ள தலை, தழை, தளை இம்மூன்றையும் எப்படி இந்தியில் எழுதி ஒலிப்பது?

### "ர. ற"

எழுத்து வேற்றுமை இந்தியில் இல்லை. அரை, அறையை எப்படி எழுதுவது? கரத்தலும், கறத்தலும் என்னாகும்? மரமும், மறமும் ஒன்றாகிவிடுமே!

### "ண. ந. ன"

என ஒலிக்க மூன்று ஒலிகள் உள்ளன. இவற்றை இந்தியில் உள்ள எந்த எழுத்தால் எழுத முடியும்? இந்த மூன்று ஒலிகள் அதில் இல்லை. "குன்றில் மேலிட்ட விளக்கனையர்" என்று எழுதினால், "அதுபோல" என்று பொருள். "குன்றின் மேலிட்ட விளக்கனைய" என்று எழுதினால் "அழிந்து போக" என்று பொருள் இந்தியில் எழுதினால், இரண்டும் ஒன்றாகவே இருக்கும். எந்தப் பொருளில் படிப்பது?

### "எ. ஒ."

தமிழில் உள்ள எ. ஒ. என்ற இரண்டு குறில் எழுத்துக்களும் இந்தியில் இல்லாததால் அவற்றை "ஏ. ஓ." என்ற இரண்டு நெடில் எழுத்துக்களிலேயே எழுதி வருகிறார்கள். பொன்மலையை போன்மலை என்றும் பொறையாறு என்பதை போறையாறு என்றும் இந்திய ரயில் நிலையங்களில் எழுதியிருக்கும் கோரக் காட்சியை இப்போதே காணச் சகிக்க முடியவில்லை.

### நெடில்

எ. கெ. செ. தெ. நெ. பெ. மெ. வெ. என்கிற குறில் எழுத்துக்கள் அனைத்தும் இந்தியில் இல்லாததால், அவற்றை ஏ. கே. சே. தே. நே. பே. மே. வே. என்ற நெடில் எழுத்துக்களில்தான் எழுதவேண்டும். அவ்வாறு எழுதினால், "எடு" ஏடாகப்போகும் "கெடு" கேடாக வரும். "செப்படி" சேப்படியாக நடக்கும். "தெள்" தேள் எனக் கொட்டும். "நெற்று" நேற்றாக மாறும். "பெய்" பேயாக ஆகும். "மெரு" மேருவாக உயர்ந்து. "வெல்" வேல் ஆகித் தாக்கினால், தமிழ் என்னாகும்?

### இதுமட்டுமல்ல

ஒ. கொ. சொ. தொ. நொ. பொ. மொ. என்ற குறில் எழுத்துக்களும் இந்தியில் இல்லை. இவற்றை ஓ. கோ. சோ. தோ. நோ. போ. மோ. என்ற நெடில் எழுத்துக்களாலேயே எழுதியாக வேண்டும். அவ்வாறு எழுதும் பொழுது ஒடு ஓடாகப்போய், கொல் கோலாக ஊன்றி, சொம்பு சோம்பாக மாறி, தொடு தோடாக ஒளிவீசி, நொண்டி நோண்டியெடுத்துவிடும். பொடி போடியென விரட்டி, மொழி "மோழி"யாகவே போய்விடும். மேலே கண்ட 24 எழுத்துக்களையும் கொண்ட தமிழ்ச் சொற்கள் ஏறக்தாழ 12000த்துக்கு மேல் இருக்கும். இவைகளின் கதி...?

### அறைகூவல்

"இந்தி எழுத்துக்களாலேயே இந்தியாவின் மொழிகள் அனைத்தையும் எழுதவேண்டும்" என்று வெறிபிடித்துக் கூத்தாடுபவர் எவராயினும் அவர்களை அறைகூவி அழைக்கிறேன். "இந்தியாவின் கொடி" என இந்தி எழுத்தில் எழுத முடியுமா? என்று அவ்வாறு எழுத முயன்றால், "இந்தியாவின் கோடி" என எழுதி தனுஸ்கோடிக்கே போய்விட வேண்டியதுதான். தமிழ் மொழியையும், தமிழ் நூல்களையும் இந்தி எழுத்தில் எழுதுவது இருக்கட்டும். தமிழ் நூல்களின் பெயரையாவது உங்கள் எழுத்தில் எழுதிக்காட்ட இயலுமா? என இந்திப் பண்டிதர்களையே கேளுங்கள். எழுதினால், "எட்டுத்தொகை" "ஏட்டுத்தோகை"யாக விரிந்து, "தொல்காப்பியம்" தோல்காப்பியமாகவே போய்விடும்.

### எதிர்காலம்!

எல்லாவற்றையும் இழந்து தவிக்கும் தமிழனுக்கு இன்று மீதியாக உள்ளது அவனது "மொழி" ஒன்றுதான். அதையும் அழித்தொழிக்கத் திட்டமிடப்பட்டுவிட்டது. இனி தமிழ் மக்களின் எதிர்காலம்...???

### சிந்திக்க!

"இந்தி எழுத்துக்களில் தமிழ் மொழியை எழுதுவது தமிழை வளர்க்குமா? அழிக்குமா? இம்முறையாவது தமிழகத்தில் ஒருமைப்பாட்டை உண்டாக்குமா? வேற்றுமைப்பாட்டை விளைவிக்குமா? பின் ஏன் இந்த வேலையற்ற மக்கள் செய்யும் தேவையற்ற வேலை?' எனபவைகளை ஆட்சியிலுள்ளவர்கள் எண்ணிப் பார்க்காவிட்டாலும், ஆட்சி செய் செய்யும் கட்சியிலுள்ளவர்களாவது எண்ணிப்பார்ப்பதுடன் இதற்கொரு வழிகாண்பது தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழகத்திற்கும் நலம் பயப்பதாக இருக்கும்.

**வாழட்டும் தமிழ் மொழி!**
**வளரட்டும் தமிழ் வீரம்!**

# தி.மு.கழகத்தால் தமிழ் வளர்ந்ததா?

மொழி வளர்ச்சி கருதுவார் அனைவரும் ஆய்ந்தறிய விழையும் வினவையே எழுப்பியுள்ளது தமிழ் முழக்கம் செய்யும் முரசொலி. இதற்கு விடை 'ஆம்' என்பார் பலர்; 'இல்லை' என்பார் சிலர்.

நடுவு நிலை நின்று ஆராய்வோம நாம்; தமிழ் மொழி மிகு தொன்மைவாய்ந்த மொழி என்பதில் யாருக்கும் ஐயமெழக் காரணமில்லை. ஆயினும், சங்க காலத்தில் தனியரசு செலுத்திய தமிழ் மொழி. அயலாராட்சியில் ஆக்கம் குன்றி, ஏக்கமுற்று, பாராட்டுவாரின்றிப் பரணிற் புகலடைய நேர்ந்ததைப் பார் அறியும். பச்சைத் தமிழரும் அயலாட்சி மொழியை நச்சிக் கற்றனர். பட்டியிலுந் தொட்டியிலுங்கூட ஆங்கிலம் ஆட்சி புரியத் தொடங்கிவிட்டது. அகிலம் ஆங்கில மயமாயிற்று.

தனிப்பெருஞ்சிறப்பு வாய்ந்த தமிழ் நூற் பயிற்சிக்கு முற்றுப்புள்ளியிட்ட தமிழர்கள் பேச்சுமேடையேறிக் கூச்சமின்றி, 'தமிழில் பேச இயலாமைக்கு வருந்துகிறேன்!' என்னும் கருத்தையும் ஆங்கிலத்தில் மொழிந்து, தம் பேச்சைக் கேட்போர் தமிழர் என்பதையும் மறந்து, சொற்பொழிவாற்றி மகிழ்ந்தனர். தமிழ் கற்றாருட் சிலரும், மேடைப் பேச்சுக்கு வழியின்மையால், கடல் மடை திறந்தாற்போலத் தமிழிற் சொற்பொழிவாற்றுந் திறனழிந்து நின்றனர்.

இத்தகைய நிலைமையில் 'தமிழிலேயே பேசுவோம்!' என்னும் தளராவூக்கத்துடன் அழகொழுகும் தமிழ் பேசி அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டனர், தி. மு. க. அறிஞர் பலர்! தமிழ் ஏடுகளைத் தொட்டும் அறியாத இளைஞர் பலர், மேடைப் பேச்சிற் பாடம் பயின்று, கற்றறிந்த மேதைகளும் கருத்தூன்றிக் கேட்கும்படி தங்குதடையின்றித் தமிழ் முழக்கம் செய்யத் தொடங்கிவிட்டனர். எங்கும் தமிழ் முழக்கம் எழுந்தது.

பரணில் ஏறிப்பதுங்கிய தமிழன்னை மூர்ச்சை தெளிந்து கீழிறங்கி, அச்சமின்றி நடமாடத் தொடங்கிவிட்டாள். மறைந்திருந்த தமிழ் நூல்களைத் தேடிப்பிடித்தப் பிடித்துப் படிக்கத்தொடங்கிவிட்டது தமிழுலகம். தமிழ்க் கழகங்கள் பல இடங்களிலும் தழைத்தோங்கத் தொடங்கிவிட்டன. தமிழறிஞர்களும் கவிஞர்களும் பாராட்டப்படும் தகுதியை அடைந்து வருகின்றார்கள். ஆக்கியோன் வாழ்நாள் முடிந்த பின்னும் அடுத்த பதிப்பையடையாத எத்தனையோ நூல்கள் அடுத்தடுத்துப் பதிப்பாகும் நிலையை எய்தின!

இனித் தமிழ் வளரும் என்பதில் எவருக்கும் ஐயமில்லை. இன்று தமிழில் வெளிவந்து நாட்டு மக்களின் உள்ளங்கவரும் நாட் செய்தித்தாள்களும், வார வெளியீடுகளும், திங்கள் வெளியீடுகளும் பெருந்தொகையினவாய்ப் பெருகிவருகின்றன. இவ்வளர்ச்சி உரங்குன்றாது ஓங்க வேண்டும் என்பதே தமிழ் வளர்ச்சி விழைவார் வேண்டுகோள்!

—மகாவித்வான், சிந்தாமணிச்செல்வர்,

**மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை.**



# புகாரும்

சிலப்பதிகாரத்தைப் பாமரரும் புரிந்து கொண்டு தமிழ் உணர்ச்சி பெற வேண்டுமென்ற ஆசையில் "பூம்புகார்" எழுதினேன். அதில் நான் பூரிப்படையும் வகையில் வெற்றியும் கிட்டியது. புலவர் பெருமக்களும், தமிழ்த் தலைவர்களும், தமிழ்ப்பெருங்குடி மக்களும் மனமாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்ந்தனர்.

தமிழகச் சட்டமன்றத் தலைவர் திரு. செல்லப் பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 'பூம்புகார்' விழாவில் திருவாளர்கள் டாக்டர் மு. வரதராசனுர், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், பேராசிரியர் அன்பழகன், சி. பா. ஆதித்தனுர். ஔவை. டி. கே. சண்முகம். ஏ. எல். சினிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு

"சிலப்பதிகார மணம் கெடாமல் சித்தரிக்கப்பட்ட காவியம்"

என்றும்,

"கதையில் செய்துள்ள சில மாற்றங்கள் கதாபாத்திரங்களின் பண்பை மேலும் உயர்த்துகின்றன" என்றும்,

"குறைகள் சில இருக்கலாம். — ஆனுல் குற்றம் அறவே இல்லை" என்றும்,

"மாறுதல்கள் எனும் அலைகளைக் கடந்து இலக்கியப் பெருங் கடலைக் காணுகிறோம்" என்றும்,

"பழந்தமிழ் நாட்டில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது" என்றும்,

புகழ்ந்துரைத்தார்கள்.

அறிஞர் அண்ணு அவர்கள் 'பூம்புகார்' பற்றிக் குறிப்பிடும் போது,

"கதையில் கருணாநிதி செய்துள்ள சில மாற்றங்களை, இளங்கோவடிகளைக் கலந்து கொண்டு செய்தது போலத் திகழ்கின்றன"

—என்று பாராட்டினார்கள். 'நாவலரும்', இலக்குவனார் போன்ற அறிஞர் பெருமக்களும் முயற்சிக்கு வாழ்த்துக் கூறினர். மாறுதல்களை வரவேற்றுப் பேசினர். எழுதினர்.

எங்கும்—எதிலும் சில கருத்து வேறுபாடுகள் இருப்பது இயல்பே! அதற்கேற்பச் சிலர் தங்கள் மறுப்புகளை வெளியிட்டனர். அந்த மறுப்புகளில் சிலவற்றில் கண்ணியம் இருந்தது. சிலவற்றில் காழ்ப்பே மிகுந்திருந்தது.

★

சிவனும் பார்வதியும் சிறப்புமிகு நடனம் ஆடுவார்கள். ஒருவருக்கொருவர் பெரும் போட்டி. இறுதியில் இருவருக்கிடையே பெரும் பூசல் எழும். பார்வதியைப் பூலோகத்துக்குச் செல்லுமாறு சிவன் சாபம் கொடுப்பார். பார்வதியின் ஆவி, பறந்து சென்று பூலோகத்தில் ஒரு கோயிலில் குடியேறும். பிறகு அந்த ஆவி ஒரு பந்து போலத் திரண்டு பாண்டிமாதேவியின் கர்ப்பத்தில் நுழையும். தேவிக்குப் பிறக்கும் பெண் குழந்தை மதுரையை அழிக்கும் என்று ஜோசியன் கூறுவான். பிறந்த குழந்தையைப் பேழையில் வைத்து ஆற்றில் விடுவார்கள். படகில் வரும் மாச்சோட்டான் செட்டியாரும் மாணுக்கன் செட்டியாரும் பேழையைத் திறந்து பெண் குழந்தையை எடுப்பார்கள். பிறகு கண்ணகி கோவலன் திருமணம். கண்ணகி பார்வதி அவதாரம் என்பதால் கோவலனைத் தொடாமலே வாழ நேரிடுகிறது, சாந்தி முகூர்த்தத்தன்று மாதவியின் நடனம். மாதவி மாலையைச் சுழற்றி வீசுகிறாள். அந்த மாலை கோவலன் செட்டியார் கழுத்தில் விழுகிறது. மாலையைக் கழற்ற முடியவில்லை. மாதவி அவனைக் கைபிடித்து இழுக்கிறாள். அவன் மறுக்கிறான். மன்றத்தில் பரபரப்பு, மன்னன் கரிகாலனிடம் வழக்கு நடக்கிறது. கோவலன் மாதவியோடு வாழ வேண்டும் என்று மன்னன் நீதி வழங்குகிறான்.

★

இப்படித் தொடங்கித் தான் "கண்ணகி" என்றொரு திரைப் படம் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்தது. சிறந்த வசன கர்த்தா இளங்கோவன் தீட்டிய திரை ஓவியம் அது! அழகும், ஆவேசமும் மிகுந்த தமிழ்ச் சொற்களைக் கொண்டு உரை நடை எழுதினார் எனினும், அந்தக் கண்ணகி, இலக்கியக் கண்ணகியாக அமையவில்லை. கணவன் கோவலனுடன் இன்பம் துய்த்த கண்ணகியாக அமையவில்லை.

கண்ணகியைப் பார்வதி அவதாரமாக்கி, அதனால் மனிதப் பிறவியான கோவலனைத் தொடக்கூடாதெனத் தடுத்து, கண்ணகி பாத்திரத்திற்குக் களங்கமுண்டாக்கி—பார்வதியின் பண்பையும் குலைத்து—உருவாக்கப்பட்ட அந்தக் கதை, சிலப்பதிகாரத்தின் சாயலைக் கூடத் தன்னகத்தே பெறவில்லை. வெறும் புராணமாக வெளிவந்த அந்தப்படம் குறித்து எந்தப் புலவரும் வாய்திறக்கவில்லை. காளி அவதாரத்தை எதிர்த்து எழுதலாமா? கருணாநிதி என்றால் ஒரு கைபார்க்கலாம். அதனால் தான 'பூம்புகார்' பற்றி ஏடுகள் சில எழுதிய மாற்றுக் கருத்துக்கள் போதாதென்று ஒரு நண்பர் 'பூம்புகார்' படத்திற்கு மறுப்பு நூல் வெளியிட்டிருக்கிறார். அவர் தன்னை ஒரு பேராசிரியர் என்று சொல்லிக் கொள்கிறார். எம். ஏ. எல். டி பட்டம் பெற்றவர் எனினும் அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# புகாரும்!

## மு. கருணாநிதி

இளங்கோவடிகளின் இலக்கியத்தை நண்பர் இளங்கோவன் அடியோடு மாற்றி எழுதிய போது இந்தப் பேராசிரியர்கள் பிறந்திடவில்லை போலும்! அப்போது பிள்ளைப் பருவத்தினராயிருந்திருப்பின் இப்போதாவது அதுபற்றித் தமது நூலில் ஒரு வரி குறிப்பிட்டிருக்கலாம். அவர் நோக்கம் காட்டிய ஆராய்ச்சி அல்லவே! கருணாநிதியைத் தாக்கவேண்டும். அது ஒன்றுதானே அவர் தலையாய குறிக்கோள?

அவரது முதல் குற்றச் சாட்டு; சிலப்பதிகாரக் கதையில் மாற்றங்கள் செய்திருப்பது தகாது என்பதாகும்.

வால்மீகியின் ராமாயணத்தைக் காலத்திற்கும் நாட்டிற்கும் ஏற்றவாறு மாற்றுவதற்குக் கம்பனுக்குஉரிமையுண்டு என வாதிக்கும் நண்பர்கள், சிலப்பதிகார மணம் கெடாமல் சித்தரிக்கப்பட்ட பூம்புகார் மீது சீறிப் பாய்வதுதான் விசித்திரமாக இருக்கிறது.

"கிரேக்கர்களும் தமிழர்களும் நட்புறவோடு வாழ்ந்தார்கள். அவர்களில் ஒரு கிழவன், தமிழரை இகழ்ந்தான் என்பது அந்த நட்புறவுக்கு இழுக்கன்றோ ஒற்றுமையாக வாழ்ந்தவரிடையே இப்படி ஒரு பழியைப் போடலாமா?" என்றெல்லாம் மறுப்பு நூல் எழுதிய மதிப்புமிகு நண்பர் கேட்கிறார்.

"பகை நாட்டான் சீன வெறியனின் தாக்குதல்கண்டு இந்திய மக்கள் அனைவரும் அணிதிரண்டு எதிர்த்து நின்றார்கள்"

என்பதாக பலநூற்றாண்டுச்குப் பிறகு வரலாறு எழுதப்படுவதாக வைத்துக் கொள்வோம். அணிதிரண்டனர் இந்தியமக்கள் அனைவரும் என்பதில் அந்நியச் சீனனுக்கு மறைமுகமாக ஆதரவு தந்து சிறைப்பட்ட கம்யூனிஸ்டு தோழர்களையும் சேர்த்துத்தானே எழுதுவார்கள்? நூல் எழுதிய நண்பருக்கு புரியக் கூடிய உதாரணம் என்பதற்காக இதனைச் சொன்னேன்.

அதுபோலத்தான் ஒன்றுபட்டு இருந்த கிரேக்கர்—தமிழரிடையே பகை வளர்க்கும் ஒரு கிழவன் இருந்தான் என்பதுமாகும். மணங்கமழும் மலர்த் தோட்டம் என்கிறோம் மொத்தமாக! ஒரு செடியின் கீழ் அழுகிக் கிடக்கும் மலரொன்றை முகர்ந்து பார்த்தால் துர்நாற்றமே வீசும்.

அப்படி ஒரு அழுகிய மலர், கிழவன் வடிவில் கிரேக்கரிடையே இருந்திருக்கலாமன்றோ? பெரும் போராசிரியர்களிடையே இந்தப் பேராசிரியரும் இருப்பது போல!

"தற்காலச் சிந்தனைக் கேற்ப வரலாற்று மனிதர்களின் சிந்தனையை விமர்சனம் செய்யலாம். ஆனால் தற்காலச் சிந்தனைகளையே அவர்களுடைய சிந்தனையாகக் கொள்ளுவது வரலாற்றையே புரட்டுவதாகும்"

மறுப்பு நூலாசிரியர் இப்படியொரு பொன்மொழி உதிர்க்கிறார். பிறகு அவரே வேறொரு சிந்தனை செய்து அந்தச் சிந்தனைக்கு ஏற்ப சிலப்பதிகாரத்தைப் பிடித்திழுக்கிறார்.

"இடமுலை கையால் திருகி மதுரை வலமுறை மும்முறை வாரா அலமந்து மட்டார் மருகின் மணிமுலையை வட்டித்து விட்டாள் எறிந்தாள்"

இந்தச் சிலப்பதிகாரப் பாடல் பற்றி நண்பரின்... இல்லை! இல்லை!! பேராசிரியரின் சிந்தனை என்ன தெரியுமா? இதோ அவரே சொல்லுகிறார்; கேளுங்கள்.

"மார்பைத் திருகி எறிந்தாள" என்பதற்குத் தனது மனவெப்பத்தால் மதுரையை எரித்தாள் என்பதே பொருள்." எனகிறார் அவர்.



இந்த இடத்தில் மட்டும் இவருடைய சிந்தனைக கேற்ப வரலாற்று மனிதர்கள் மாறிக் கொள்ள வேண்டுமாம். மாமியார் உடைத்தால் மண் சட்டியாம்—மறுப்பு நூல்காரர் கூறுகிறார், அப்படி!

மார்பைத் திருகி எறிந்து மதுரையை எப்படி அழித்திருக்க முடியும் ' என்ற கேள்வி எழுந்து, அங்கே மாற்றம் செய்வது நலலது என எண்ணுவது போலவே சில இடங்களில் சிலப்பதிகாரத்தில் மாற்றம் தேவைப்பட்டது. செய்தேன். "சிந்தனை" பற்றி விமர்சிக்கிற நண்பர், இதனை உணர்வது நல்லது!

"கண்ணகி, தன் கணவனைக் கொன்ற அரசனையும், கொடுங்கோன்மை நிகழாமல் தடுக்க முடியாத அரசியல் சுற்றத்தாரையும், மதுரையில் வாழ்ந்த தீயவர்களையும் அழித்தல் வேண்டுமென அக்கினித் தேவனை ஏவுகிறாள்."

மறுப்பு நூல் பேராசிரியர், அவரது பொனனேட்டில் தீட்டியுள்ள வைர வாசகம் இது! அந்தோ அவருக்கும் சிலப்பதிகாரத்திற்

கும் எவ்வளவு தொலைவு!!

“யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங்காவல்
என் முதற்பிழைக்கது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே”

நீதி தவறிவிட்டோம் என உணர்ந்த நெடுஞ்செழியப் பாண்டியன் “கெடுக என ஆயுள்!” எனக்கூறி, அரசு கட்டிலில் வீழ்ந்து துஞ்சினன் என்றே சிலப்பதிகாரம் கூறுகிறது. ந. மு. வே. நாட்டார் உரையும் அவ்வாறே நவில்கிறது. ஆனால் நமது மறுப்பு நூல் பேராசிரியர் அவர்கள், கண்ணகி, அக்கினி தேவனைப் பார்த்துத் தன் கணவனைக் கொன்ற அரசனையும் அழித்தல் வேண்டுமென ஏவியதாகக் குறிப்பிடுகிறார். இது சிலப்பதிகாரமா? அல்லது அவர் சார்ந்துள்ள கட்சியின் சிவப்பதிகாரமா என்பது புரியவில்லை. அரசு கட்டிலில் விழுந்து மாண்டுவிட்ட அரசனை—கூடான கூடலானை—அழித்து வருக எனக் கட்டளையிட்டாள் என்று சிலப்பதிகாரத்தில் எங்கு கண்டாரோ மறுப்பாசிரியர்?

“அருந்ததியின் கண்ணகி, தீயோரை மட்டும் அழிக்காமல் நல்லவர்களையும் பார்ப்பனர்களையும் சேர்த்து அழித்துவிட்டாளே!” என்று மறுப்பாசிரியர் மனவேதனைப் படுகிறார். இவரைப் போலவே ‘குமுதம்’ எனும் ஏடும் குறைப்பட்டுக்கொண்டது. கற்புக்கரசியென்றால் அவளால் ஒரு ஊரை அழிக்க முடியும் என்றும், அப்படி ஒரு ஊருக்கு அழிவைத் தர முடியாதவள் கற்புக்கரசியல்லவென்றும் ஒத்துக்கொள்வதாயிருந்தால் உண்மையிலேயே கற்புடைய பெண்டிரெல்லாம் கூட ஐயத்திற்குரியவராகி விடுவர். அதனால் தான் திருக்குறளில் வரும் ‘பெய்யெனப் பெய்யும் மழை” என்பதற்குக் கற்புடையவள் ஆணையிட்டால் மழை பொழியும் என்பது சரியான பொருள் அல்ல.

ஏனெனில் மழையைத் தருவிக்க முடியாதவள் எல்லாம் கற்பற்றவள் என ஆகிவிடும்—“பெய்யெனப் பெய்யும் மழை” என்பதற்கு; “பெய்க எனக்கூறும் நேரத்தில் பெய்கிற மழையைப் போன்றவள் கற்புடைய பெண்” என்ற பொருளே பொருந்தும் என்பதாகப் புலவர் பெருமகன் பாரதிதாசனார் கூறிப் போந்தார். அந்த அடிப்படையில் கற்புத் தன்மை கனலாக வெளிப்பட்டது எனவும், அந்தக் கனல் மதுரையில் மூண்ட நிலநடுக்கத்துடன் இணைந்து, தீக்கனலுடன் கலந்து கொண்டது எனவும் சித்தரிக்கப்பட்டதே பூம்புகாரின் இறுதிக் கட்டமாகும்.

பார்ப்பனர்களையும் நல்லவர்களையும் அழிக்க வேண்டாமெனக் கண்ணகி நினைத்தாள் என்ற சிலப்பதிகாரத்தை அப்படியே ஒப்புக் கொண்டால், பார்ப்பனர்களில் ஒருவர்கூட தீயவர் இல்லை என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பார்ப்பனரல்லாதாரில் தான் நல்லவர் தீயவர் என்ற பாகுபாடு உண்டு; பார்ப்பனரில் அனைவருமே நல்லவர்தான் என்றும் கூறுவது பொருந்தாக் கூற்றுதம்.

“மார்பைத் திருகி எறிந்தாள் என்பதற்கு மனவெப்பத்தால் மதுரையை எரித்தாள் என்பதே பொருள்” என மறுப்பாசிரியர்க்குரிய மாற்றிக்காட்டுகிற உரிமை மற்றவர்க்கும் உண்டு என்பதை ஏனோ மறந்துவிட்டார்!

பூம்புகார்க் கண்ணகி, அக்கினித் தேவனையே அழைத்து மதுரையை எரிக்கச் சொல்லவில்லை என்கிறபோது, யார் யாரை எரிக்க வேண்டுமென்று, பட்டியல் போட்டு ஏன்; கொடுக்கவில்லை என்று கேட்பது பைத்தியக்காரத்தனமாகும்.

“பத்தினிப் பெண்ணாக இருப்பவள் தெய்வபக்தி உள்ளவளாக இருக்கக்கூடாதா? கணவனைப் பிரிந்த கண்ணகி ஆறுதலுக்காகவாவது தெய்வத்திடம் முறையிடக் கூடாதா?”

இந்தக் கேள்வி மறுப்பு நூல் ஆசிரியருடையதல்ல! இது ‘கல்கி’ பத்திரிகையில் கடிதவாயிலாகக் கேட்கப்பட்ட கேள்வியாகும். இதற்குச் சிலப்பதிகாரமே பதில் கூறுகிறது; நாம் கூறத்தேவையில்லை.

“சோமகுண்டஞ்சூரிய குண்டந்
துறைமூழ்கிக்
காமவேள் கோட்டத்து
தொழுதார் கணவரொடு
தாமின்புறுவர் உலகத்துத்
தையலார்
போகஞ்செய் பூமியினும்
போய்ப்பிறப்பர் யாமொரு
நாள்
ஆடுதுமென்ற அணியிழைக்
கவ்வாயிழையாள்
பீடன்றென விருந்த பின்
னரே...”

(கனாத்திற முரைத்த காதை)

அதாவது; தேவந்தியெனும் பார்ப்பனப் பெண், கண்ணகியை நோக்கி “சோம குண்டம் சூரிய குண்டம் எனும் பொய்கையில் நீராடி, காமவேள் கோயிலைத் தொழுதால் இம்மையிற் கணவருடன் கூடி, மறுமையிலும் போக பூமியிற் பிறந்து கணவனைப் பிரியாதிருக்கலாம்.

ஆதலின் நாமும் அங்கே நீராடி காமவேள் கோட்டத்தைத் தொழலாம்” என்று அழைக்கிறாள். அதற்குக் கண்ணகி, “அங்ஙனம் துறைமூழ்கித் தெய்வம் தொழுதல் எங்கட்கு இயல்பன்று!” என மறுத்துவிடுகிறாள் என்பதாகும். சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய ந. மு. வே. நாட்டார் அவர்களும் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

“கற்புடைமகளிர் கணவனையன்றிப் பிறதெய்வத்தை வணங்குதல் இயல்பன்று என்பது,

‘தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை’’

என்பதால் அறியப்படும்” எனவும் ந. மு. வே. நாட்டார் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தைப் புரட்டிப்

பார்க்காமலே கல்கியிலே கடிதம் எழுதிய நண்பர்களுக்கும், "தினமணி" ஏட்டின் விமர்சகருக்கும் எப்படித்தான் அனுதாபம் தெரிவிப்பது எனப் புரியவில்லை.

" பூம்புகாரில் " மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!" என்பது போன்ற கருணாநிதியின் வழக்கமான வசனங்கள் இருக்கின்றன."

—என்று தினமணி விமர்சகர் எழுதுகிறார். அப்பகோ! அந்தச் சொற்கள் சிலப்பதிகாரச் சொற்கள் என்று கூடத் தெரியாதவர்கள் பெரிய ஏடுகளில் பெரிய விஷயம்பற்றி விமர்சனங்கள் எழுதுவதா? தமிழ்த்தாய் தலை குனிகிறாள்; இவர்களின் தரங் கண்டு.

"விலைமகள்" "உடல் வாணிபக்காரி" என்றெல்லாம் கோவலன் மாதவியை இகழ்வது வருந்தத்தக்கது — இப்படி ஒருவர், கல்கியில் திட்டினார்.

"சலம்புணர் கொள்கைச்
சலதியொ டாடிக்
குலந்தருவான் பொருட் குன்
றந் தொலைந்த"

மாதவியிடமிருந்து திரும்பிய கோவலன் கண்ணகியிடம் உரைப்பது; மேலேயிருப்பது! ஆமாம்; சிலப்பதிகார வரிகள்!

சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி—வஞ்சம் பொருந்திய கொள்கையை உடைய பொய்த்தியோடும்கூடி ஒழுகினமையால்,

குலம் தருவான் பொருட் குன்றம் தொலைந்த—குலத்தார் தேடித்தந்த மலைபோலும் பெரிய பொருட்குவையெல்லாம் கெட்டதனலாய—

இவ்வாறு பொருள் கூறப்படுகிறது உரையில்!

"சரவொழுக்கமுடைய பரத்தையோடு மருவிப் பொருளையெல்லாம் இழந்து வறுமையுற்றேன்" எனக்கோவலன் கூறுவதாக சிலப்பதிகார உரையாசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் குறிப்பிட்டிருப்பதையும் "கல்கி"யில கடிதம் எழுதியவர்கள் இனி யாவது படிப்பது நலமன்றோ? அதனினும் நலம் பயப்பது கடிதம் வெளியிட்ட "கல்கி"யார் அதனைப் படித்துப் பார்ப்பது என்போம்! கோவலன் வீட்டில் வறுமை எங்ஙனம் வந்துற்றது என்பதற்கு; இந்த வரிகள் மறுப்பு நூல் பேராசிரியர்க்கும் பதில் அளிக்குமென்று நம்புகிறேன்.

"கண்ணகி ஒரு தெய்வமன்றோ? அவளும் கோவலனும் காதல் இன்பம் கண்டதுண்டோ? இது கருணாநிதியின் கைச்சரக்கா?"

இப்படிக் கேட்டவர், எழுதியவர் சிலர் உண்டு. அவர்கட்கும் சிலப்பதிகாரம் விடை கூறும்.

"தூமப் பணிகளொன்றித்
தோய்ந்தாலென வொருவார்
காமர் மனைவியெனக் கை
கலந்து—நாமந்
தொலையாத இன்பமெலாந்
துன்னினர் மண்மேல் நிலையா
மை கண்டவர்போல் நின்று."

அதாவது

" புவியின் கண்பொருள் முதலியவற்றின் நிலையாமையைக் கண்டு, அவை உள்ளபொழுதே எல்லா இன்பங்களையும் துய்ப்பதற்கு விரைதல் போல நின்று, காமனும் ரதியும் போலக் காதலால் ஒருவரோடு ஒருவர்கலந்து, சினத்தையுடைய பாம்புகள் ஒன்றுபட்டுத் தழுவியது போல இன்பத்தை யெல்லாம் துய்த்தனர் கோவலனும் கண்ணகியும் என்க."

(ந. மு. வே. நாட்டார்
சிலப்பதிகார உரை)

'பூம்புகார்' கண்டு பொறாமைத் தீ மூண்டதால் "கல்கி"யின் சினிமாப் பகுதி ஆசிரியர் ஒரு பயங்கரமான கேள்வியையும் கேட்டு வைத்தார்.

"காவியத்தின் முக்கிய இடமாகிய மதுரையம்பதியையும் வைகை நதியையும் படத்தில் காட்டாமல் ஹம்பி ஆலயத்தைக் காட்டுவது ஏன்? மதுரைக் கோயில் கோபுரம் அழகற்றதா?"

இது "கல்கி"யின் சினிமா ஆசிரியரின் கேள்வி. நல்ல வேளையாக அவர் ஒன்று கேட்காமல் விட்டு விட்டார். "கல்கி" மலரில் முதல் பக்கத்தில் வெளியிடும் சங்கராச்சாரியார் படத்தைப் 'பூம்புகாரில் ஏன் காட்டவில்லை? இதையும் கேட்டிருப்பார். பாவம்; மறந்து விட்டார்.

அவர் கூற்றுப்படி மதுரையைக் காட்டியிருந்தால்; அப்போதாவது சும்மா இருப்பாரா?

"ஆகா! அந்தக் காலத்து மதுரையில் மின்சாரக் கம்பி ஏது? தந்திக் கம்பி ஏது? பி. டி. ராஜன் திருப்பணி செய்த இந்தப் புதிய கோபுரம் அந்தக் காலத்தில் ஏது? மதுரையைத்தான் கண்ணகி அழித்து விட்டாளே; பிறகு எப்படி மதுரையைக் காட்ட முடிந்தது?"

—என்றெல்லாம் "கல்கி"யின் சினிமா ஆசிரியர் கேட்காமலா இருப்பார்?

பொறுப்பற்றதும், பொறாமையை அடிப்படையாகக் கொண்டதும், விருப்பு வெறுப்புக்களுக்கு ஆட்பட்டதுமான இந்தக் கருத்துக்களை சிலர் வழங்கிச் சிறிய தற்குக் காரணம்; அவர்கள் சிலப்பதிகாரத்தைப் படிக்காதது தான் என்பேன்!

நான் எழுதிய 'புகார்' பற்றிப் 'புகார்' கூறினர் எளிதில்! அப்படிப் புகார் கூறியவர்கள் பலரும் சிலப்பதிகாரக் காவியத்தில் என்றுமே புகார் என்பதை எண்ணும் போதுதான் வேதனை மேலிடுகிறது. சிலப்பதிகாரத்தில் புகுந்தவர்கள் போற்றுகிறார்கள் "பூம்புகா"ரை

புகாதவர் தூற்றுகிறார்!
புகார், தூற்றுவதால் மனம்
புண்ணடைவதில் பயனில்லை
எனத் துணிந்து மேலும்
தமிழ்த் தொண்டாற்றப்
புறப்படுகிறேன்.

புகார் வாழ்க!
புகாரில் புகார் திருந்துக!




நாகிரெட்டி - சக்ரபாணி
அளிக்கும்

விஜயா
கம்பைன்ஸ் புரொடக்ஷன்ஸ்

எங்க வீட்டுப் பிள்ளை

ஈஸ்ட்மென் கலர்

ELEGANT

டைரக்ஷன் · சாணக்யா

# ஸ்ரீ புவனேஸ்வரி நகர்

வேளச்சேரி :: சென்னை - 42.

* அங்கீகரிக்கப்பட்ட
  லேஅவுட்கள் (வீட்டு மனைகள்)
* நவீன வசதிகள்
* விலையும் குறைவு

விபரங்களுக்கு அணுகுக :

முத்துவெங்கட்ராமன் (ராம்லால்)
ராயப்பேட்டை ஹைரோட்,
சென்னை - 14.

தொலைபேசி எண் : 8789



அஞ்சுகம் பதிப்பகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதியால் முரசொலி அச்சகத்தில்
4/128, மவுண்ட் ரோடு, சென்னை-6ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.
துணை ஆசிரியர் : மாறன் எம்.ஏ.

# நன்றி நவிலும் நன்னாள்

பனிக் காலங்களில் நீங்கள் அயராது உழைத்து உருவாக்கிய பயிர்களைப் பயனுள்ளதாக்குவது பகலவனின் அன்புப் பார்வையே. இன்பப் பொங்கற் திருநாளன்று நீங்கள் கதிரோனுக்கு உங்கள் உளங்கனிந்த நன்றியைச் செலுத்துகின்றீர்கள்.

அறுவடை முடிந்து, அகமும் முகமும் மலர விழாக் கொண்டாடும் நேரம் இது. வருங்காலம் வளமிக்கதாக அமைய, உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் அமைதி, ஆக்கம், மன நிறைவு அளிக்கும் ஆயுள் இன்சூரன்சு குறித்துச் சிந்தித்துச் செயல்பட வேண்டிய நேரமும் இதுவே.

**ஆயுள் இன்சூரன்சு போல**
**ஆதரவு தருவது எதுவுமே இல்லை**

**லைப் இன்ஷ்யூரன்ஸ்**
**கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**




